கல்கி

KALKI 21.1.96 ரூ. 3.00

இணைப்பைக் கேட்டு வாங்குங்கள்



காப்பி அடிக்கிறாரா தேவா?


உங்கள்
அபிமான
அழகு
கோகுல்
சாண்டால்.
GOKUL
SANTOL
Micronized Sandalwood
TALC
GOKUL
SANTOL
Micronized Sandalwood
TALC
GOKUL
SANTOL
Micronized Sandalwood
TALC
GOKUL
SANTOL
Micronized Sandalwood
TALC
டி.எஸ். ஆர். & கம்பெனி, மதராஸ்.
கோகுல் காஸ்மெடிக்ஸ், பாண்டிச்சேரி.

காங்கிரஸில் எம். கோபாலகிருஷ்ணன்?





• மகள், மனைவி, பேத்தியுடன்...

இந்தியன் வங்கி கோபால கிருஷ்ணன் ரிடையராகி விட்டார். கடன் கொடுப்பதிலும் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதிலும் அவரது சாதனையை இன்னொருத்தர் நெருங்க முடியாது. டி.வி. செய்திகளில் கோபாலகிருஷ்ணன் இல்லாத நாளே கிடையாது. மகா பிஸியான இந்த வி.ஐ.பி. தம் ரிடையர்மென்ட்டுக்குப் பிறகு என்ன செய்யப் போகிறார்?

மயிலை ரங்காச்சாரி ரோடிலுள்ள அவர் வீட்டில் சந்தித்துக் கேட்டோம். வேட்டி, சட்டையுடன் ஹாயாகத் தம் வீட்டு வரவேற்பறையில் பேத்தி லக்ஷிதாவுடன் கொஞ்சிக் கொண்டிருந்தவர், நம்மைப் பார்த்ததும் உற்சாகமாக வரவேற்றார்.

"ரொம்ப லீஷராக இருக்கிறீர்கள். பதவியில் இருந்த போது இப்படி பேத்தியுடன் விளையாடவெல்லாம் நேரம் கிடைத்திருக்காது, இல்லையா?"

''கஷ்டம் தான். ஆனால், தினம் ஐந்து நிமிடமாவது இதற்கென்று ஒதுக்கிக் கொண்டு விடுவேன். காலை ஏழரை மணிக்கெல்லாம் விஸிட்டர்கள் வந்து விடுவார்கள். பேசிவிட்டு, அலுவலகத்துக்குக் கிளம்பி விடுவேன். அங்கே போனால், வேறு யோசனைகள் வராது. மாலைக்குள் அன்றைய கோப்புகள் எதையும் பாக்கிவைக்காமல் முடித்து விட்டுத்தான் கிளம்புவேன். மாலை நேரங்களில் தினசரி ஏதாவது பொது நிகழ்ச்சி கட்டாயம் இருக்கும். முடித்து, வீடு திரும்ப அநேகமாகப் பதினொன்று ஆகிவிடும். இடையில் நண்பர்களையும் விடுவதில்லை. அதற்கென்று நேரம் வகுத்துக் கொண்டுவிட்டால் பிரச்னை இல்லை."

"சின்ன வயதில் உங்கள் கனவு என்ன? வங்கிப் பணி, நீங்கள் விரும்பி ஏற்றதா?"

"அப்போது சென்னை நகர மேயராக இருந்த என் அப்பா, ராஜா முத்தையா செட்டியாரிடம் சொல்லி வாங்கிக் கொடுத்



மத்திய மந்திரி சொன்ன 'ரயில் ஜோக்'

ரயில்கள் ரொம்ப தாமதமாக வருவது பற்றி ரயில்வே இணை மந்திரி சுரேஷ் கல்மாதி சொன்ன 'ஜோக்':

'பெண் ஒருத்தி ரயிலில் பயணம் செய்துக் கொண்டிருந்தாள். நிறைமாத கர்ப்பிணி. டிக்கெட் பரிசோதகர் வந்தார்.

''அம்மா, கர்ப்பிணி பெண்கள் ரயிலில் பயணம் செய்யக்கூடாது...! அடுத்த நிலையத்தில் இறக்கிவிட்டு விடுவோம்...!''

''உங்கள் சட்டதிட்டம் அப்படி இருந்தால் நான் என்ன செய்வது? ஆனால் நீங்கள் ஒரு விஷயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். ரயிலில் ஏறும்போது நான் கர்ப்பிணியாக இல்லை...!''

ஆதாரம் : **வீக்**

தகவல் : **மகேஷ் ராஜா**

''தலைவர் ஏன் சுரத்தில்லாம இருக்காரு?''

''பொதுக் கூட்டத்திலே ஏதோ ஒரு ஆவேசத்திலே, 'ஐ.நா. சபை வரைக்கும் நடைப் பயணம் மேற்கொள்வேன்'னு பேசிட்டாராம். பார்க்கறவங்கல்லாம் 'எப்போ பயணத்தை ஆரம்பிக்கப் போறீங்க'ன்னு துளைச்செடுக்கறாங்களாம்.''

–டி.என்.பாலகிருஷ்ணன்



ததுதான் வங்கி உத்தியோகம். முடிந்த வரை, பிறருக்கு உதவவேண்டும் என்பதைத் தவிர எனக்கு வேறு லட்சியம் இல்லை. வங்கிப் பணி அதற்குச் சாதகமாகவே இருந்ததால் சிக்கல் இல்லாமல் போயிற்று."

"தொடர்ந்து ஒரே மாதிரியான வேலை அலுப்புத் தருமே? உங்கள் பொழுது போக்கு....?"

"கிரிக்கெட் தான்! இளம் வயதில் வங்கிக்காக விளையாடிக் கூட இருக்கிறேன். இப்போதெல்லாம் பார்ப்பதோடு சரி. தவிர, சினிமா பார்ப்பேன். ரஜினி படம் என்றால் மிக இஷ்டம். புத்தகங்கள் படிப்பதும் பிடிக்கும். 1965 வரை தீவிரமாகப் படித்துக் கொண்டிருந்தேன். கண்ணதாசன், வைரமுத்து கவிதைகள் என்றால் உயிர்! வங்கிப் பணி, பின்னால் அதிகமாக நேரம் எடுத்துக் கொண்டு விட, படிக்க முடியாமல் போய்விட்டது. இனி மேல் நிறைய படிக்கப் போகிறேன்."

"பரபரப்பாக இயங்கி வந்த நீங்கள், இனி எப்படி பொழுதைக் கழிக்கப் போகிறீர்கள்?"

"பொதுச் சேவை இருக்க, ஓய்வு ஏது? குழந்தைத் தொழிலாளர்களை மீட்டு, கல்வி தர முனையப் போகிறேன். மதுரையில் எனக்குத் தெரிந்த 'பிரபோதனா' என்ற அமைப்பு இருக்கிறது. அதனுடன் இணைந்து, முதலில் தென் மாவட்டங்களிலிருந்து தொடங்கப் போகிறேன். வறுமை காரணமாகக் குழந்தைகளை வேலைக்கு அனுப்பும் குடும்பத்தினருக்கும், பொருளாதார ரீதியில் எப்படி பலப்படுத்திக் கொள்வது என்று சொல்லிக் கொடுப்பேன்."

"உங்களுக்கு அரசியலில் விருப்பம் உண்டா? ஏனெனில் தென் சென்னைத் தொகுதியில் காங்கிரஸ் சார்பாக எம்.பி. பதவிக்கு நீங்கள் நிற்கப் போவதாக ஒரு பேச்சு..."

"எல்லா கட்சிகளிலும் என் நண்பர்கள் இருக்கிறார்கள். குறிப்பிட்ட ஒரு கட்சியில் நான் இணைந்தால் அது சரி வருமா என்று தெரியவில்லை. ஆனால் ஒரு கட்சி மூலம் பதவி பெற்று, மக்கள் சேவை செய்ய முடியுமானால் அதை மறுக்க மாட்டேன். ஆனால் இப்போதைக்கு உடனடியாக எந்தக் கட்சியிலும் சேரும் எண்ணம் இல்லை."

"கேட்பவர்களுக்கெல்லாம் லோன் கொடுத்து, வங்கிப் பணத்தை விரயமாக்கி விட்டதாக உங்கள் மீது ஒரு குற்றச்சாட்டு...."

"ஒரு விஷயம் - எந்த வங்கியும் கொடுத்த கடனை நூறுசதம் முழுமையாகத் திருப்பி வசூலிக்க முடியாது. என் நோக்கம் சுத்தமானது. வெளியே பேசுபவர்கள் பற்றி எனக்குக் கவலை இல்லை. ஒரு விஷயம் பாருங்கள், முன்பெல்லாம் தினம் காலை 'வாக்' போவேன். அந்த நேரத்திலும் பலர் வந்து கடன் கேட்பார்கள்! இதற்கு பயந்தே 'வாக்' போவதை நிறுத்தி, வீட்டிலேயே மெஷின் வைத்து நடைப்பயிற்சி செய்யத் தொடங்கி விட்டேன்! எதற்குச் சொல்கிறேனென்றால், கேட்கிற எல்லாருக்குமே கொடுத்துவிட முடியுமா? தகுதியானவர்களுக்குத்தான் நான் கடன் தந்துள்ளேன். கஷ்டப்படுகிறவர்களுக்குத் தான் நான் உதவி செய்திருக்கிறேன். இது தவறு என்று எனக்குத் தோன்றவில்லை!"

பேட்டி : **ப்ரியன்**

வண்ணப்படங்கள் : **கிருஷ்ணமூர்த்தி**

புரோட்டான், நியூட்ரான், எலக்ட்ரான் இவற்றின் நளினமான நடனமே தில்லை நடராஜரின் தில்லானா

காண்போர் மனங்கவரும் கட்டிட வனப்பாலும் அற்புதமான பொற்கூரையாலும் பெரும்புகழ் படைத்தது சிதம்பரம். வெவ்வேறு காலகட்டங்களில் வாழ்ந்த சமயப் பெரியோர் அனைவராலும் பாடப்பெற்றது. சைவர்களால் பூலோக கைலாசம் என்று சிறப்பிக்கப்படும் முதன்மையான புனித யாத்திரைத் தலம். இறைவன் ஆகாய வடிவில் காட்சிதரும் பஞ்ச பூதத்தலங்களில் ஒன்று. மானிடர் எளிதில் அறியவொண்ணாத ஆழ்ந்த ஞானத்தினை அளிக்க வல்லது. இதனால்தானோ என்னவோ இதன் ரகசியம் என்றுமே அவிழ்க்கப்படாமல் சிதம்பர ரகசியம் என்று அழைக்கப்படுகிறது. மூலவர் சபாநாயகர் என்றழைக்கப்படுகிறார். மூலவரது கர்ப்பக்கிருஹத்தின் வலதுபக்கத்தில் திரையால் மறைக்கப்பட்ட ஒரு சன்னிதி இருக்கிறது. பூஜை நேரத்தில் பக்தர்கள் கணநேரம் இந்த சன்னிதிக்குள் அனுமதிக்கப் படுகிறார்கள். இங்கே முதலில் காணப்பெறுவது வெற்றிடம் மட்டுமே. கூர்ந்து கவனிப்போருக்கு பொன்னாலான வில்வ மாலை ஒன்று காணக் கிடைக்கும். உண்மையான சிரத்தையுடன் தேடுவோர் எங்கும் நிறைந்திருக்கின்ற கடவுளையும் அவரது இருப்பையும் எப்போதும் எங்கும் கண்டு கொள்ளலாம் என்பதை உணர்த்துவது இது.



தில்லானா உட்பட நடனக்கலையின் எல்லா வடிவத்திற்கும் நாயகரே நடராஜா. 'தில்லானா' என்பதிலிருந்து வந்ததே 'தில்லை' என்பர். அண்டவெளியிலே ஆனந்தக் கூத்தன் ஆடும் நடனம் மூலப் பொருளின் துவக்கத்தையும், அணு அமைப்பின் நளினமான இயக்கத்தையும் காட்டுவது. பொன்னாலான வில்வமாலையும் வெற்றிடமும் நடராஜாவின் திருவுருவத்துடன் இணைத்துப் பார்த்தால் இப்பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு தனித்த அணுவின் ஒருங்கிணைந்த இயக்கத்தையும் நிரந்தரமான ஆனால் மாறக்கூடிய தன்மையையும் ஒருசேரக் காட்டுவது. அனைத்தும் ஒரு கணத்தில் சலனமில்லாமல் நின்ற காலமற்ற ஆனால் தொடர்ந்த நிலை. இடம், காலம் என்பனவற்றின் விளக்கத்தை விரிவாக்குவதும் அதுவே. உலகெங்குமுள்ள புகழ்வாய்ந்த விஞ்ஞானிகள் இப்பதிலால் கவர்ப்பெற்று முடிந்த முடிவான உண்மையை உணர்வதிலுள்ள ஒற்றுமையை ஏதோ ஒரு தருணத்தில் ஒத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். உலகிலுள்ள பல ரகசியங்களைப்போல் கூர்ந்து கவனிப்போருக்கு மட்டுமே தெரிய வரும் பல ஆச்சரியங்களை உள்ளடக்கியது இக்கோயில். உதாரணமாக, இக்கோயில் பூவுலகத்தின் இருதயமாகக் கருதப்படுகிறது. அதற்கேற்ப இதன் கர்ப்பக்கிருஹமும் மனித உடலின் அமைப்பை ஒத்திருக்கிறது. ஒன்பது சக்தி பீடங்களைக் குறிக்கும் ஒன்பது தங்கக் கலசங்கள் உள்ளன. 64 கலைகளைக் குறிப்பிடும் 64 கைப்பிடிகள் உள்ளன. மனிதன் சராசரியாக ஒருநாளில் 21600 முறை சுவாசம் செய்கிறான். இதைக் குறிக்க 21600 தங்க ஓடுகள் உபயோகப்படுத்தப் பட்டிருக்கின்றன. நாட்டியத்தில் ஒளிக்கிட்ட யோகாசனங்கள் செய்வதன் மூலம் ஒருநாளின் இதயத் துடிப்பை 72000 முறைக்குக் கொண்டு வர வேண்டும். அதில் பயன்படுத்தப்பட்டுள்ள 72000 ஆணிகள் இதைக் குறிக்கின்றன. கர்ப்பக்கிருஹத்திற்குச் செல்லும் வழி, நுழை வாசலின் இடது பக்கமாக அமைந்து மனித உடலுக்கு இரத்தத்தை எடுத்துச் செல்லும் இதயம் இடப்புறம் இருப்பதைக் காண்பிக்கிறது. மனித உடலைப் போலவே வடிவமைக்கப் பட்டிருக்கிறபடியால் இக்கோயில் ஒரு மனிதனை எல்லா விதத் துயரிலுமிருந்தும் விடுவிப்பதாகச் சொல்லப்படுகிறது. மனிதனின் ஒவ்வொரு செயலையும் கணக்கு வைத்துக் கொள்ளும் சித்திரகுப்தனுக்குத் தனியாக கர்ப்பக்கிரஹம் அமைந்த ஒரே கோயில் இதுவே. சில நக்ஷத்திரங்களின் எல்லா அம்சங்களும் ஒவ்வொரு இரவும் நடு ஜாமத்தில் இங்கே சங்கமமாவதாக ஐதீகம். சுருங்கச் சொன்னால் இக்கோயிலை ஒருமுறை வலம் வருவோர் ஆனந்தமாக ஆடும் நடராஜாவின் நடனத்தில் வாழ்க்கைச் சக்கரத்தின் உண்மையை உணர்ந்து கொள்வர். இந்த உண்மைகளை வெளிக் கொண்டுவருவதில் 'ஹார்வெஸ்ட்' தன்னாலியன்ற பணியினைச் செய்கிறது. இதுபோன்ற விவரங்களை எழுதியனுப்பினால் ஹார்வெஸ்ட் பதிவேடுபாடுகள் ஏதுமின்றி அவைகளை வெளியிடத் தயாராக உள்ளது.

HARVEST
BENEFIT FUND LIMITED

புதுமை எண்ணங்கள் கொண்ட நிதி

Insight:1367

தி. நகர் : 19, வியாசர் தெரு, (வடக்கு உஸ்மான் ரோடு அருகில்), சென்னை – 600 017.
போன் : 8253597, 8281152.

கிளைகள் : சென்னை : ஆழ்வார்பேட்டை : போன் 4991552, 4992231, 4991056. **ஜார்ஜ் டவுன்**: போன் 5227891. **அண்ணா நகர்** : ரூம் நெ. 4, முதல் மாடி, V.S.D. பிளாசா, AA1, 2ஆவது அவன்யூ (ரவுண்ட் டானா அருகில்). **திருவான்மியூர்** : போன் 411264. **கோயம்புத்தூர்** : 444089 **பெங்களூர்** : போன் 3310529. மும்பாய் : போன் 2656965, 2656970. **செகந்திராபாத்**: போன் 846669. **புதுடெல்லி**: போன் 6478781/82. **உறுப்பினர் சேவை மையங்கள் : சென்னை : நங்கநல்லூர்** – திரு K. விஜயராகவன், போன் 2343970, **குரோம்பேட்டை** – திரு P.V. சாம்பசிவன், போன் 402708, **புதுக்கோட்டை** – திரு K.S. சேகரமூர்த்தி, போன் 20440, **திருச்சி** – திரு R. ராஜாராம், போன் 468726, **காக்கினாடா** – திரு V.V. கிருஷ்ணாராவ், போன் 71396.

இந்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிதி நிறுவனம். சிதம்பரம் 1987 எங்கள் சேவை உறுப்பினர்களுக்கு மட்டுமே.

சிதம்பரம் நடராஜரின் வண்ணத் திருவுருவப்படத்தை இலவசமாகப் பெற, எங்களுக்கு எழுதுங்கள்.



உ

லாபம்

ஹார்வெஸ்ட்

நிதி அந்தஸ்து

உறுதியான தொழில் உறவுகள்

பாதுகாப்பே எங்கள் வலிமை

அக்கறையுடன் சேவை

ஒவ்வொரு செயலிலும் நேர்மை

முழுமையான திட்டங்கள்

தேவைக்கேற்ப திட்டங்கள்

உறுப்பினர் சேவை மையங்கள்

வயது முதிர்ந்தோர் சங்கம்

மதிப்பைப் போற்றும் ஈடுபாடு

நல்லறிவுடன் நாணயம்

வாருங்கள்... முற்றிலும் வேறுபட்ட சிறந்த சேவையைப் பெறுங்கள்


மெய்சிலிர்த்த
அனுபவங்கள்!
அஸ்தமனத்தில்
ஓர் ஆன்மீக
தரிசனம்!

மாலியின் புல்லாங்குழல் கச்சேரி. திருச்சி மலைக்கோட்டையில் நூற்றுக்கால் மண்டபத்தில் நடந்து கொண்டிருந்தது. தெய்வீக மான சூழ்நிலை; தேனான இசை. கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை வயலின்; பழனி சுப்ரமண்ய பிள்ளை மிருதங்கம்.

ராகம், தானம், பல்லவியெல்லாம் முடிந்த பிறகு மாலி 'சின்னஞ்சிறு கிளியே' என்ற பாரதி பாட்டை வாசிக்க ஆரம்பித்தார். தேனும் பாலும் கலந்தது போல் தேவகானமாக ஒலித்தது. சபையில் பூரண நிசப்தம்.

'உன் கண்ணில் நீர் வழிந்தால்' என்ற அடியை மாலி வாசிக்கத் தொடங்கினார். சோகம், பரிவு, கனிவு என்று பாவங்கள் குழல் வழியே வழிந்தோடிக் கொண்டிருந்தன.

வயலின் வாசித்துக் கொண்டிருந்த ராஜ மாணிக்கம் பிள்ளை அவர்கள், திடீரென்று வாசிப்பதை நிறுத்திவிட்டு வயலினைக் கீழே வைத்துவிட்டார்.

மாலி திடுக்கிட்டுப் போய் ராஜமாணிக்கம் பிள்ளையைக் கேள்விக் குறியுடன் பார்த்தார். அவர் பதிலுக்குப் புன்னகையுடன் மாலியைப் பார்த்துச் சொன்னார்: "தம்பி! வயலினை ஏன் கீழே வைத்துவிட்டேன்னு யோசிக்கிறாயா? ஒன்றுமில்லை... இங்குள்ள ரசிகர்களுடன் சேர்ந்து உன் வாசிப்பின் இனிமையை நானும் முழுமையாய் அனுபவிக்க ஆசைப்படறேன்... கொஞ்ச நேரம்..." என்றார்.

அப்போது மாலி அவர்களுக்கு மெய் சிலிர்த்ததோ என்னவோ, சபையின் முன் வரிசையில் உட்கார்ந்திருந்த எனக்கு உண்மையிலேயே மெய் சிலிர்த்தது! ஒரு கலைஞன் வயிப்புடன் 'ஒரு வித்வானை மற்றொரு வித்வான் இதைவிட நேர்த்தியாகக் கொண்டாட முடியுமா?' என்ற வியப்பும் சேர்ந்து விளைவித்த சிலிர்ப்பு அது.

– என். நாராயணன், புதுடெல்லி - 92

மைசூரிலிருந்து மங்களூர் செல்லும் வழியில் சற்று உள்ளே தள்ளிய அதி உயர, அடர்வனப் பகுதி 'ஆகும்பே'. 'காடு... காடு... காடு தவிர வீடு ஏதும் காணேன் பராபரமே' என்ற மெய்ஞானப் பயணத்துக்குப் பிறகு,



• மாலி



• ராஜமாணிக்கம்பிள்ளை

'பூமியின் கவர்க்கம்' என்று பெருமிதத்துடன் அடைமொழியிட்டு கன்னடியர்களால் அழைக்கப்படும் அந்த 'ஆகும்பே' வனப்பகுதியை அடைந்தோம். வன அடர்த்தி, மேகமூட்டம் காரணமாக மாலை நான்கு மணிக்கே இருளாட்சி.

வாகனப் போக்குவரத்துக்கு அமைந்த ஒற்றைத் தார்ச்சாலை தவிர சுற்றிலும் கற்பனை வரம்புக்கு எட்டாத உயர் கன வன மரங்கள். ஆங்காங்கே, நம்மை நட்புடன் பரிகசிக்கும் 'கருமூஞ்சி' இராமதூதர்கள் (மந்திகள்), துள்ளும் ராம தோழர்கள் (அணில்கள்).

ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு நடக்க வேண்டும். இல்லாவிட்டால், வாகனத்தைத் திருப்ப இயலாதவாறு சாலை ஒரு மேட்டுப்பாங்கான வட்டப் பகுதியில் முடிகிறது. 'ஆகும்பே'யின் உயரமான 'வாச் டவர்' இது. கீழே அதல பாதாளம், மூச்சுக்குக் கூட மூச் சிரைப்பைத் தரும் பிரம்மாண்ட பிரமிப்பு.

அன்று அதிர்ஷ்டம் எங்கள் பக்கம். படிக்காத மாணவன் பரீட்சையில் இருக்காமல் கொடுத்த வெற்றுத் தாள் போல் வானம் நிர்மலமாக இருந்தது. மேகக்கூட்டம்...? மூச்!

கண்ணுக்குத் தெரியாத தொலைவில் அரபிக் கடல் அணைப்பில் மங்களூர் நகர்.

இப்போது கடல் மட்டத்துக்கு ஒரு மீட்டர் உயரத்தில் உக்கிரம் தொலைத்த கதிரவன் தீப் பந்து உருண்டையாக. மெய்மறந்த நிலையில் பார்வையால் சுற்றுப்புறம் மேய்ந்து முகம் திருப்புவதற்குள் கதிரவன் கடல் தொடும் எத்தனிப்பு. பார்வையாளர்களிடையே பரபரப்பு. இப்போது கடலைத் தொட்டுவிட்டான் கதிரவன். சில விநாடியில் கடலில் சிறிது மூழ்கிய நிலையில் குடையாக.... இப்போது இன்னும்... இப்போது ஒற்றைக் கீற்று... இப்போது அந்தக் கடல் பகுதியில் செவ்வண்ண ஓவியம் தீட்டிவிட்டுக் கடலில் மூழ்கி விடுகிறான் கதிரவன். நம் நெஞ்சில் அது ரவிவர்மா ஓவியமாக, பாலு மகேந்திரா, ஸ்ரீராம் படக் காட்சியாக, இயற்கையன்னையின் 'அக்மார்க்' காட்சியாகப் பதிந்து விடுகிறது. 'அஸ்தமனத்தில்' ஓர் 'ஆன்மீக தரிசனம்' கண்ட சுகானுபவம்!

– சி. நாச்சிமுத்து, ஈரோடு – 9.

(அனுபவங்கள் தொடரும்)

வண்ணப்படம் : எம். அமிர்தம்

சினிமா உலகம் பணத்தைத்தான் மதிக்கிறது!

'ஆசை'க்குப் பிறகு மட்டும் இருபத்தைந்துக்கு மேற்பட்ட படங்கள், தேவாவுக்கு!

சினிமா உலகில் 'மினிமம் கியாரண்டி' என்ற வார்த்தைக்கு ரொம்ப மரியாதை தருவார்கள். 'முதலுக்கு மோசமில்லாத விஷயம்' என்று அர்த்தம். மினிமம் கியாரண்டி படங்கள், மினிமம் கியாரண்டி இயக்குநர், மினிமம் கியாரண்டி ஹீரோ... இப்படி. அந்த ரூட்டில் மினிமம் கியாரண்டி இசையமைப்பாளர், தேவா.

'இளையராஜாவைக் காப்பி அடிக்கிறார்', 'ஆசைக்குப் பின் ரகுமானுக்கு மாறி விட்டார்', 'ஒரிஜினாலிட்டி இல்லை' என்றெல்லாம் பரவலான பேச்சு இவரைப் பற்றி உண்டு.

ஆனால் எதையும் கண்டுகொள்ளாமல், தாமுண்டு, வேலையுண்டு என்று பிரசாத் ஸ்டுடியோவுக்கு ஓடி வந்து விடுகிறார். கம்போஸிங், ரெக்கார்டிங், ரீ-ரெக்கார்டிங் என்று மாற்றி மாற்றி இரவு பதினோரு மணி வரை பணிகள். ஃபீல்டில் நுழைந்து ஐந்து வருடங்களில் நூற்றி எழுபத்தைந்து படங்கள். தொடிக்கொருதரம் கதவைத் தட்டும் ப்ரொட்யூசர்கள்; காத்திருக்கும் இயக்குநர்கள்...

நாலுகால் பாய்ச்சலில் ஓடிக் கொண்டிருந்தாலும் நமக்காக இரண்டு மணி நேரம் ஒதுக்கித் தந்தார்.

உங்கள் ஆரம்ப காலம் பற்றிச் சொல்லுங்கள்.

பிறந்து வளர்ந்ததெல்லாம் சென்னை, மயிலாப்பூரில். ராஜா முத்தையா ஸ்கூலில் படித்தேன். அப்புறம் விவேகானந்தாவில் பி.யு.சி. குடும்பச் சூழ்நிலை காரணமாக பி.யு.சி.யைத் தொடர முடியாமல் பாதியில் விட்டு விட்டு ஒரு லைட் மியூஸிக் குழுவில் எடுபிடி ஆளாகச் சேர்ந்தேன். டீ, டிபன் வாங்கி வருவது போன்ற வேலைகள் அங்கே. அந்த வேலையைப் பார்த்துக் கொண்டே ஆர்மோனியம், தபலா வாசிக்கக் கற்றுக் கொண்டேன். அப்படியே சில நண்பர்களின் அறிமுகத்தால் - உதவியால் மேடை நாடகங்களுக்கு இசையமைக்க வாய்ப்பு. அதைச் செய்தபடியே சினிமாவிலும் முயற்சி செய்து வந்தேன். நாலு தம்பிகள், ஒரு தங்கை, அம்மா.

அப்பா இல்லாத நிலையில் குடும்பத்தைக் காப்பாற்றியாக வேண்டிய பொறுப்பு தலையில் விழ, தூர்தர்ஷனில் தன உதவியாளராகச் சேர்ந்தேன்.

என் இசை ஆர்வம் பற்றித் தெரிந்து, அங்கிருந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர் எம்.எஸ். பெருமாள், 'வயலும் வாழ்வும்' நிகழ்ச்சியில் சில பாடல்கள் இசையமைக்கும் வாய்ப்பைப் ஏற்படுத்தித் தந்தார். அப்படி 'வயலும் வாழ்வும்'க்காக நான் இசையமைத்த பாடல்களுள் ஒன்று பாரதியாரின் 'காக்கைச் சிறகினிலே'.

இந்தப் பாட்டுதான் எனக்கு சினிமா வாய்ப்பைத் தேடித் தந்தது. 89-ல் 'மனசுக்கேத்த மகராசா' வெளிவந்து, 'பாடல்கள் நன்றாக இருக்கின்றன' என்று பெயர் வாங்கினாலும், அடுத்த படத்துக்கு ஒரு வருடம் காத்திருக்க வேண்டியிருந்தது. 'வைகாசி பிறந்தாச்சு' வந்தது!

அந்தப் படம் ரிலீஸாகி, பாடல்கள் ஹிட்டாகி விட, படம் ஐம்பதாவது நாளைத் தொடுவதற்குள் எனக்கு முப்பத்திரண்டு படங்கள் வந்தன.

'வைகாசி பொறந்தாச்சு' படத்தில் 'சின்னப் பொண்ணுதான்' பாட்டுத்தான் மற்றெல்லாவற்றையும் விட சூப்பர் ஹிட் ஆனது. அதே ஃபார்முலாவில், ஒரு படத்துக்கு ஒரு பாட்டு தரமாகத் தந்து விட்டால் போதும் என்ற நோக்கில்தான் ஒவ்வொரு படத்துக்கும் இசையமைக்கிறீர்களா?

நான் இசையமைத்த அண்ணாமலை,

பாட்ஷா, காந்தி பிறந்த மண், ஆசை போன்ற படங்களில் அத்தனை பாடல்களுமே ஹிட் ஆகியிருக்கின்றனவே!

ஒவ்வொரு பாடலுக்கும் நான் எடுத்துக் கொள்கிற சிரமம் மிக அதிகம். ஒவ்வொரு பாடல் பிறக்கிற போதும் 'இது ஹிட் ஆகும்' என்கிற நம்பிக்கையுடன்தான் வெளியே விடு கிறேன். ஆனால் மக்கள் ரசனை என்பது பெரும்பாலும் நம் கணிப்புகளுக்கு அப்பாற் பட்டதாகவே இருக்கிறது. சில பாடல்கள் எதிர்பார்த்தபடி ஹிட் ஆகி விடும். சிலவற்றை மிகவும் பெரிய அளவில் எதிர்பார்ப்பேன். நிராகரித்து விடுவார்கள். இந்த வகையில், சுமா ரான பாடல்கள் கூட சூப்பர் ஹிட் ஆகியிருக் கின்றன.

'புருஷலட்சணம்' என்ற படத்தில் மூன்று முக்கிய பாடல்கள். அவற்றுள் 'காக்கைச் சிற கினிலே' என்ற மிக மிக மெலோடியஸ் பாட லும் 'செம்பட்டுப் பூவே' பாடலும் பிரமாத மான வரவேற்புப் பெறும் என்று எதிர்பார்த் தேன். என் குழுவினர்களே மிக லயித்து, ரசித்த பாடல்கள் அவை இரண்டும். ஆனால் என்ன ஆயிற்று? அவை இரண்டையும் விட, 'கோல விழியம்மா' என்ற பக்திப் பாடல் சூப்பர் ஹிட் ஆகி, ஊரில் எந்தத் திருவிழா வந்தாலும் இன்று அதைத்தான் போட்டு விடுகிறார்கள், லவுட் ஸ்பீக்கரில்!



மாதத்துக்கு நாலைந்து படங்கள் உங்கள் இசையமைப்பில் வெளிவருகின்றன. படங் களின் எண்ணிக்கையில் செலுத்துகிற கவ னத்தைக் குறைத்துக் கொண்டால் இன்னும் சிறப்பாகச் செய்ய நேரம் கிடைக்கு மல்லவா?

ஒரு கவிஞன் என்பவன் தனி மனிதன். சந் தோஷமோ, துக்கமோ அவனோடே சரி. ஆனால் ஓர் இயக்குநரோ, இசையமைப் பாளரோ, ஸ்டண்ட் மாஸ்டரோ அப்படி அல்ல. அவர்களைச் சுற்றி நாற்பது பேர் எப் போதும் இருப்பார்கள்.

ஆறு மாதத்துக்கு ஒரு படம் நான் செய் தால் என்னை நம்பி இருக்கிற இசைக் கலை ஞர்களுக்கு நான் எப்படி சம்பளம் தருவேன்?

இதை விடுங்கள். வெளிப்படையாக இன் னொன்றைச் சொல்கிறேன். சினிமா உலகில் திறமையை விட, ஞானத்தை விட, பணத்தைத் தான் பெரிதாக நினைக்கிறார்கள், மதிக்கிறார் கள். எத்தனையோ திறமைசாலிகள், ஒரு காலத் தில் சாதனை படைத்த கலைஞர்களை இங்கே இன்று எப்படி நடத்துகிறார்கள் தெரியுமா? 'அவரு கிடக்கறாருய்யா... ஒரு படம் கூட இல்லை தெரியுமா. குளோஸ், அவ்வளோதான்!' என்று கேலி பேசுவதை நானே கேட்டிருக் கிறேன்.

இக்காரணங்களால்தான் நான் வருகிற படங்களை மனமுவந்து ஏற்றுக் கொள்கிறேன். முடிந்தவரை தரமான இசை தர முயல்கிறேன். பாடல்களும் நன்றாக வருவதால் தானே படங் களும் வருகின்றன?

'வைகாசி பொறந்தாச்சு' வந்த போது இளையராஜாவுக்கு அடுத்தபடியாக ஒரு ஆள் வந்து விட்டார் என்று பேசினார்கள். ஆனால் நீங்கள் உங்களுக்கென்று புதிய பாணி எதுவும் கைக் கொள்ளாமல் ராஜாவின் வழியிலேயே இசையமைக்கத் தொடங்கி விட்டீர்கள். 'இளைய ராஜாவை தேவா காப்பி அடிக்கிறார்' என்று கூடப் பேசினார்கள்...

ஒரு வரியில் இதற்கு பதில் சொல்ல முடி யாது. நான் சினிமாவில் நுழைந்த காலத்தில் இளையராஜா கொடிகட்டிப் பறந்து கொண் டிருந்தார். அவரது புதிய பாணி, அணுகுமுறை எல்லாம் மூலை முடுக்குகளிலும் பிரபலமாகி, எங்கும் அவர் பாடல்களையே முணுமுணுத் துக் கொண்டிருந்தார்கள்.

அந்த நிலையில் நான் நுழைகிறேன். என்னி டம் வந்த தயாரிப்பாளர்களெல்லாம் இளைய ராஜாவின் சூப்பர் ஹிட் பாடல்களை உதார ணம் காட்டி 'இதைப் போல செய்து தாருங் கள், அதைப் போல இசையமைத்துத் தாருங் கள்' என்றே கேட்டார்கள். யோசித்துப் பாருங் கள். துறையில் புதிதாக நுழைகிற ஒருவன்...

●● எத்தனை மனிதர்களோ அத்தனை கொள்கைகள். எனவே முடிவை நீங்களே எடுங்கள்.

●● எப்பொழுதும் இறைவனைச் சார்ந்து நில்லுங்கள். நாளையைப் பற்றிக் கவலைப் படாதீர்கள்.

- சிவானந்தர்

தகவல் : பா. குணா

வாய்ப்புகளுக்காக வருந்திக் காத்திருப்பவன், 'நீங்கள் சொல்வது போல் முடியாது; என் இஷ்டம் போல்தான் செய்வேன்' என்று எப்படிச் சொல்ல முடியும்? முதலில் என்னை இந்தத் துறையில் நிலை நிறுத்திக் கொள்ளவும், நிறைய வாய்ப்புகளுக்காகவும், அவர்கள் சொன்னபடி ராஜாவின் பாடல்களை ஒட்டியே இசையமைக்க வேண்டியிருந்தது. குறைந்தபட்சம் ஒரு 'ரித'த்திலாவது அவர் பாடலின் சாயலைக் காட்ட வேண்டியிருந்தது.

இன்னொரு காரணம் கூடச் சொல்வேன். நம் ஊரில் பெரும்பாலும் கிராமியப் படங்களே எடுக்கிறார்கள். இளையராஜா, கிராமத்திலிருந்து வந்தவர். அந்த மண்ணின் இசை, அவரது ரத்தத்தில் கலந்த விஷயம். நானோ முழுமையான மெட்ராஸ்காரன். வயல்களையும் அரசமரப் பஞ்சாயத்தையும் சினிமாவில் மட்டுமே பார்த்தவன். கிராமிய இசை முழுமையாக நமக்கு அறிமுகமானதே இளையராஜாவின் பாடல்களால்தான். இந்த நிலையில் புதிதாக யார் ஒரு கிராமியப் பாடல் தந்தாலும் 'ராஜா பாட்டு போல் உள்ளது' என்ற கமென்ட் எழுவது தவிர்க்க முடியாததாகிறது.

ட்யூன்களை விடுங்கள். இசைக் கருவிகளை உபயோகிக்கிற விதத்தில் ஒலிகளை மிக்ஸ் செய்வதிலும் கூட இளையராஜாவின் பாதிப்பு இருக்கிறதே?

அந்த மிக்ஸிங் பாணி மக்கள் மத்தியில் மிகப் பிரபலமாகி விட்டது. மக்களுக்குப் பிடித்ததைத் தர வேண்டியதென்பது முக்கியமல்லவா? ஆனால் பாருங்கள்... இன்று அது போன்ற மிக சாஃப்ட் ஆன, லேசான கிராமியம் கலந்த கிளாஸிக் இசையை விடவும் மேற்கத்திய இசையை விரும்பும் மனோபாவம் வளர்ந்து விட்டது. இப்போது அதற்கேற்ப மாறிக் கொள்ள வேண்டிய சூழ்நிலை.

அப்படி மாறியதன் முதல் வெளிப்பாடு தான் 'ஆசை'யா?

ஆமாம். மணிரத்னம் சாரும் வஸந்தும் என்னிடம் சொன்ன சீக்வன்ஸ்களும் வருணித்த கேரக்டர்களும் அப்படி ஒரு மாறுபட்ட இசையைத் தர எனக்கு இன்ஸ்பிரேஷனாயின. 'ஆசை' பாடல்கள் அனைத்தும் சூப்பர் ஹிட். ஆக, இன்றைய டிரெண்ட் என்ன என்பது புரிந்து விட்டது. இனி இதைத் தொடர வேண்டி இருக்கும் - கொஞ்ச நாள். வருகிற தயாரிப்பாளர்களும் 'அதே போல போட்டுத் தாருங்கள்' என்றே கேட்கிறார்கள்.

ஆனால் 'ஆசை' பாடல்கள் ரஹுமானின் பாதிப்பு போல் தெரிகிறதே?

அப்படி அல்ல. மேற்கத்திய இசையை நம் பாரம்பரிய இசையுடன் கலக்கும் போது அதற்கு உண்டாகும் தோற்றம் - யார் கலந்தாலும் ஒரே மாதிரிதான் இருக்கும். ரஹுமானை அப்படியே நான் பின்பற்றி இருந்தால் மக்கள் 'காப்பி' என்று சொல்லி ஏற்றுக் கொண்டிருக்க மாட்டார்கள்... பாடல்கள் இத்தனை ஹிட்டாகி இருக்காது.

இல்லை... ஆசையில் அந்த 'மீனம்மா' பாடலின் ஆரம்பம் ரங்கீலாவில் வருகிற 'தன் ஹா... தன்ஹா'வின் சாயலாகத் தெரிகிறதே?

மன்னிக்கவும். ரங்கீலாவுக்கு முன்பே ஆசை வெளியாகி விட்டது.

இல்லை... ஆசைக்கு முன்பே ரங்கீலா கேஸட் வந்து விட்டது.

ஸாரி. நான் கேட்கவில்லை. இந்தச் செய்தி எனக்குப் புதிதாக இருக்கிறது. அந்தப் பாடலை நான் கேட்கவில்லை. எதிர்பாராத ஒற்றுமையாக இருக்கலாம். ரஹுமானை நான் மதிக்கிறேன். அவரைப் பின்பற்றும் எண்ணம் எனக்கு இல்லை.

ஒரு சமகால இசைக் கலைஞர் என்ற வகையில் இளையராஜா, ரஹுமான் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

இரண்டு பேருமே இந்நாட்டின் தவிர்க்க முடியாத இசைப் பிரதிநிதிகள். காரணம் அவர்களின் திறமையும் உழைப்பும். என்னைப் பொறுத்தவரை நான் இளையராஜாவின் இனிமையை ரசிக்கிறேன். ரஹுமானின் புதுமையை ரசிக்கிறேன்.

கடைசியாக ஒரு கேள்வி. ராஜாவை அணுக விரும்பாதவர்களும் ரஹுமானை நெருங்க முடியாதவர்களும்தான் தேவாவிடம் வருகிறார்கள் என்ற பேச்சு உலவுவது பற்றி உங்கள் அபிப்ராயம்?

நிச்சயமாக எனக்கு இது பற்றி ஏதும் தெரியாது. ஆனால் ஒன்று உறுதியாகச் சொல்ல முடியும். 'நல்ல இசை' என்கிற பிளஸ் பாயின்ட் இல்லாத பட்சத்தில், வேறெந்தக் காரணத்துக்காகவும் தொடர்ந்து வருவார்கள் என்று நான் நம்பத் தயாராயில்லை. பாரதிராஜாவும் கமலஹாசனும் ரஜினிகாந்தும் சும்மாவா கூப்பிட்டு இசையமைக்கச் சொல்வார்கள்?

பேட்டி : **ஔரங்கசீப்**

அட்டை வண்ணப்படம், படம் : **யோகா**



சென்னையில் ராஜா சர் முத்தையா செட்டியார், ராணி மெய்யம்மை பெயர்களில் இரண்டு பிரம்மாண்டமான கல்யாண மண்டபங்கள் உள்ளன. இவற்றில், மார்கழி மாத மானதால் கம்ப்யூட்டர் சந்தை ஒன்று நடத்தினார்கள். கல் யாண மண்டபம் கம்ப்யூட்டர் சந்தைக்கு ஒவ்வாத இடம். மணமேடையில் ஏறி இறங்கி லாப்டாப்களையும் லைன் ப்ரிண்டர்களையும், யு.பி.எஸ் பவர் சப்ளைகளையும் பார்க்கக் கொஞ்சம் சிரமமாக இருந்தாலும் மிக்க ஆர்வத்துடன் இளைஞர்கள் கூட்டம் நிரம்பியிருந்தது சந்தோஷமாக இருந்தது.

சென்னையிலும் சுற்றுப்புறத்திலும் கம்ப்யூட்டர் விற்கும், செய்யும் நிறுவனங்கள் பல, ஒன்றை யொன்று நெருக்கிக் கொண்டு பங்கேற்றன. நான் குறிப்பாக 'வி.எஸ்.என்.எல்' நிறுவனம் தரும் இண்டர்நெட் இணைப்பைப் பற்றிய விவரங்களுக்காகச் சென்றிருந்தேன். மற்றவை யெல்லாம் பார்த்த விஷயங்களே.

இண்டர் நெட் என்பது உலகின் கணிப் பொறிகளை இணைக்கும் மிகப் பெரிய வலைப் பின்னல். அண்டார்ட்டிக்காவிலிருந்து நியூஜி லாந்து வரை உலகின் பல தேசங்களில் இன்றைய தேதிக்குச் சுமார் ஐம்பது லட்சம் கணிப்பொறிகள் இந்த இணைப்பில் சேர்ந்து கொண்டு, மாதம் ஒரு லட்சம் புதிய இணைப்புகள் என்று ராட்சசத்தனமாக வளர்ந்துகொண்டே போகிறது. இது எங்கே கொண்டு விடும், தெரியவில்லை. இதனால் நமக்குக் கிடைக்கக் கூடிய தகவல் வெள்ளம் பிரமிப்பூட்டுகிறது.

இண்டர் நெட் ஒரு ஜனநாயக அமைப்பு. இதில் சொந்தக் காரர் யாருமில்லை. எல்லோரும் எல்லோரிடமும் தொடர்பு கொள்ளலாம். நாடு, மொழி பணக்காரன் ஏழை வித்தியாசம் இல்லை. உங்களிடம் ஒரு கணிப் பொறியும் ஒரு டெலி போனும் மோடம் என்று சொல்லப்படும் இணைப்பும் இருந்து விட்டால் போதும், இண்டர்நெட்டில் ஒட்டிக் கொண்டு விடலாம். இந்த அனுகலை வி.எஸ்.என்.எல்.என்னும் விதேஷ் சஞ்சார் நிகம் மூலம் பெறலாம். குறைந்த பட்சம் ரூபாய் ஐயாயிரம் இருந்தால், ஒரு வருஷ சந்தா கட்டி, 250 மணி நேரம் இதில் மேயலாம். இண்டர்நெட் இணைப்பு அமைப் பதால் 'ஈ-மெய்ல்' என்னும் எலக்ட்ரானிக் தபால் பெறலாம். உலகத்தின் மற்றொரு கோடியில் இணைந்திருப்பவருடன் கணிப்பொறி மூலம் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள லாம், 'பேசலாம்'.

கோடிக்கணக்கில் உலகில் உள்ள தகவல் வெள்ளத்தை அனுக முடியும். சுப்ரீம்கோர்ட் தீர்ப்புகள், நூலகத்தில் உள்ள புத்தகங்கள், சித்திரங்கள், திரைப்படங்கள் என்று தகவல் பெருங்கடல் அனுகி அனுகி விரல் தேய்ந்துவிடும். புலெட் டின் போர்டு என்று ஒரு பொது நோட்டீஸ் போர்ட் சேவை. அதில் ஏ ஜோக்கிலிருந்து, சைக்கிள் ஓட்டப் பழகுவதிலிருந்து, சங்க இலக்கியம் வரை ஆயிரக்கணக்கில், தலைப்புக்களில் பொதுத் தகவல் பரிமாற்ற மேடை.

டிஸிபிஐபி(TCPIP), வெப்(WEB), மொசேய்க் (MOSAIC) ஹைப்பர்டெக்ஸ்ட் (HYPERTEXT) போன்ற மந்திர வார்த்தை களின் அர்த்தம் விளங்கி, அந்த வசதிகளை ஏற்படுத்திக் கொண்டால் (இதற்கெல்லாம் கொஞ்சம் செலவாகும்) வீட்டி லேயே சித்திரங்கள், புத்தகங்கள், திரைப்படங்கள், வீடியோ மாநாடு என்று பலதும் செய்ய முடியும். குறிப்பாக 'வெப்' என் பது உலகெங்கணும் பரவிய எலக்ட்ரானிக் பதிப்பு முறை.

சிங்கப்பூரில் உள்ள தேசிய பல்கலைக்கழகம் பரிசோதனை முறையில் ஒரு தமிழ் 'வெப்'ஸ்த லம் அமைத்திருக்கிறது. சங்க இலக்கியப்பாடல்கள் அனைத் தும் அதில் தமிழிலேயே பார்க்க முடிகிறது. 'தேமதுரத் தமி ழோசை உலகமெலாம் பரவும் வகை செய்ய வேண்டும்' என்று பாரதியின் கனவை இண்டர் நெட் மூலம் சிங்கப்பூர் சாத்திய மாக்கிவிட்டது. ஒரு தமிழ் இலக் கியப் பத்திரிகை கூட வரப் போகிறது. விஷயம் தெரிந்தவர் கள், வெப் மூலம் தொடர்பு கொள்ள http://irdu.nus.sg/ tamilwebஐ அனுகவும்.

(மீண்டும் அடுத்த வாரம்...)

"நீதி நிர்வாகத்தையும் இல்லற நிர்வாகத்தையும் சரிக்கட்ட வேண்டியிருந்தது!".



திருமதி. மாலதி தியாகராஜன்
A-4, நர்மதா அபார்ட்மெண்ட், 53, சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம்,
சென்னை – 600 018. போன் : 4995877

"எனது கணவர் தனது அலுவலக வேலையிலேயே மூழ்கிக் கிடப்பவர். குழந்தைகளோ அவரவர் தனது வாழ்க்கையில் நன்கு வேரூன்றி விட்டனர். நான் வீட்டை அமைதியாகச் சமாளிக்கும் அதே சமயம், எனது பணத்தைப் பெருக்குவதற்கு நம்பகமான ஒரு நிறுவனம் எனக்குத் தேவையாக இருந்தது".

யோகி

திரும்ப சுவரில் இருந்த கடிகாரத்தில் மணி பார்த்தேன். பதினொன்று. இங்கு வந்து அரை மணி நேரத்துக்கு மேலாகி விட்டது. சம்பந்தப்பட்ட அந்த ஊழியரை இன்னும் காணோம். அலுவலகம் திறக்கும் நேரம் பத்துமணியாம். ஆனால் ஊழியர் எப்போது வர வேண்டும் என்று எவரும் நேரம் பிறப்பிக்கவில்லையோ!

என்னைப் போலவே வரிசையாய் நிறைய பேர். அந்த நீள பெஞ்சில் அமர்ந்து இருந்தனர். சிலர் நின்ற வண்ணம் இருந்தனர். இன்னும் சிலர் அங்கும் இங்கும் உலாத்திக் கொண்டு இருந்தனர். என்னைப் போலவே அவர்களும் – விட்டத்தையும், சுவர்க் கடிகாரத்தையும் பார்த்துக் கொண்டு இருந்தனர்.

பியூனிடம் ஒருவர் – "சார் எப்போ வருவாரு?" என்று கேட்டார்.

"வருவாரு... வருவாரு... வரும்போது பாரு..." என்றார். அரசாங்க அலுவலகத்தில் வேலை கிடைத்து விட்டால் சாமானியனுக்கும் கர்வம் வந்து விடுமோ என்னவோ. அங்கு வந்து இருந்த ஊழியர்களைப் பார்த்தேன். ஊழியர் ஒருவர் பத்திரிகை புரட்டிக் கொண்டு இருந்தார். இன்னொரு ஊழியர் வேறு ஒரு ஊழியரின் டேபிள் முன் சேரை இழுத்துப் போட்டு சுவாரசியமாய் ஏதோ பேசிக் கொண்டு இருந்தார்.

எல்லோரும் அங்கு நடக்கும் கூத்துக்களை வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருந்தோம். எல்லோருக்கும் கோபம் தலைக்கேறியது. ஆனாலும் என்ன செய்வது. பல்லைக் கடித்துக் கொண்டு இருக்க வேண்டும். ஏதாவது பேசினால், வீண்வாதம் ஏற்படும். சம்பந்தப்பட்ட ஊழியர், விடுமுறை என்றாலோ இல்லை வர தாமதமாகும் என்றாலோ வேறு ஊழியர் எவரேனும் அவரது வேலையைச் செய்ய வரலாமே...

ஒரு டீ குடிக்க வெளியே போகலாமா



ஜெயித்து விட்டேன்...



என்று யோசித்தேன். பிறகு போகாமல் உட்கார்ந்து விட்டேன். நான் இந்தப் பக்கம் எழுந்து போன சமயம், அந்த அரசு ஊழியர் வந்து விட்டால் இப்போதே கிட்டத்தட்ட நாற்பது, ஐம்பது பேர். எத்தனை மணிக்கு வேலைக்கு வந்தாலும் ஒரு மணிக்கு சரியாக கவுண்டரை க்ளோஸ் பண்ணி விடுவார்கள், இந்த உழைக்கும் சீமான்கள். பிறகு நாளை திரும்ப லோலோ வென்று அலைய வேண்டும்.

வேறொன்றும் இல்லை. புதியதாய் ரேஷன் கார்டு பதிய வேண்டும். விண்ணப்பப் பாரத்தை தர வந்த இடத்தில் தான் இத்தனை வேடிக்கை.

நானும் ஒரு நிறுவனத்தில் கிளார்க்காக பணிபுரிகிறேன். தனியார் நிறுவனம். ஒருநாள் லீவ் போட்டு விட்டு வந்து இங்கு உட்கார்ந்து இருக்கிறேன். இன்னும் அந்த நபர் வரவில்லை. இன்று வராமலே இருந்து விட்டால் நாளை நான் திரும்ப லீவ் போட வேண்டும். "உடல்நிலை சரியில்லாத காரணத்தால்" என்று பொய் சொல்ல வேண்டும். நாம் மட்டும் நேரத்தைக் கடைப்பிடித்தால் பத்தாது. நாம் வேலை செய்யும் இடத்தில் இருப்பவர்களும், நாம் தேடிப் போகிறவர்களும் நேரத்தை சரியாய் கடைப்பிடித்தால்தான் நமக்கு எல்லாம் சரியாய் இருக்கும்.

'இவர்கள் கவர்மெண்ட் ஸ்டாப்ன்னு சொல்றதை விட கவர்மெண்ட் சோம்பேறின்னு சொல்லலாம்' என்று ஒருவர் கமெண்ட் அடித்தார் - தன் வயிற்றெரிச்சல் காரணமாய்.

நாம் நினைப்பது ஒன்று... இப்போது நடப்பது ஒன்று.. ஒன்பதரை மணிக்கு வீட்டில் இருந்து கிளம்பினேன். பத்து மணிக்கு இங்கு வந்து விடலாம். இங்கே வேலைகளை - பதினொன்றரை மணிக்குள் முடித்து விடலாம். பன்னிரெண்டு மணிக்கு ஒரு ரியல் எஸ்டேட்டுக்கு செல்ல வேண்டும் என்று எண்ணி இருந்தேன். தெரிந்த நபர் ஒருவர் சொன்னார். 'மாசம் நூறு ரூபா கட்டுனா போதும். முப்பது மாசம் கட்டணும். ஒரு ப்ளாட் தர்றாங்க. மாசா மாசம் குலுக்கல். குலுக்கல்ல விழுந்துட்டா பணம் கட்ட வேண்டியது இல்லை. ப்ளாட் நம்ம கைக்கு வந்துடும்!' என்று.

சீப் அண்ட் பெஸ்ட்டாய் உள்ளதே, விசாரிப்போம் என்று எண்ணியிருந்தேன். அலுவலக நாட்களில் போக நேரம் கிடைக்கவில்லை. அதனால் இன்று போய் வந்து விடலாம் என்று எண்ணியிருந்தேன். அந்த நிறுவனம் நகரத்தின் ஒரு மூலையில் இருந்தது. பஸ் பிடித்து அங்கு போக பன்னிரெண்டரை ஆகி விடும். அங்கு விசாரித்து விட்டு சாப்பிடப் போக சரியாய் இருக்கும். மதியத்திற்கு மேல்...

இரண்டு மாசம் முன் ஒரு அவசரத் தேவைக்கு மனைவியின் நகைகளை அடகுவைத்து இருந்தேன். அதைத் திருப்ப வேண்டும். இன்னும் இரண்டொரு வேலைகளுக்கும் திட்டம் தீட்டி இருந்தேன்.

இன்று நான் திட்டமிட்ட எதுவுமே நடக்காது போல் இருக்கிறது. இன்று லீவ் போட்டது வேஸ்ட். ஒருநாள் பொழுது இப்படி பிரயோஜனம் இல்லாமல் வேஸ்ட் பண்ணுவது பயங்கர வேதனையையும், எரிச்சலையும் தருகிறது. இந்த எரிச்சல், டென்ஷன் நாளையும் தொடரும். நாளை சடார் என்று அலுவலக வேலையோடு ஒன்ற மனசு வராது.



"தலைவர் புனைபெயரைக் கூட விட்டு வைக்கல!"

"என்ன விசயம்?"

"'கரன்சி ப்ரியன்'னு புனை பெயர் வச்சிருக்கார்!"

- அம்பை தேவா

"சார் வர்றாரு... வர்றாரு. எல்லாம் வரிசைல நில்லுங்க" என்றார் பியூன்.

எல்லோரும் ஓடிப் போய் கவுண்டர் முன் நின்றோம். அது கவுண்டர் கிடையாது. ஒரு அறையின் ஜன்னல். ஜன்னல் வழியே பாரத்தை நீட்ட வேண்டும். அந்த அரசு ஊழியர் பாரத்தை வாங்கி வைத்துக் கொண்டு ஏதேனும் கேட்பார். அவ்வளவுதான்.

மணி பார்த்தேன். பதினொண்ணே முக்கால். ஒரு நபருக்கு ஒரு நிமிஷம் என்று வைத்தாலும் ஐம்பது பேருக்கு ஒரு மணி நேரம் ஆகிவிடும். ஆனால் அத்தனை விரைவாகப் பணி செய்தால் மழை அல்லவா பெய்யும்.

அந்த ஊழியர் உள்ளே நுழைந்தார். சபாரி டிரஸ் அணிந்து இருந்தார். எங்கேயோ கல்யாணத்திற்குப் போய் வந்திருக்க வேண்டும் போலும். நெற்றியில் சந்தனம். இவர் சொந்தக் கம்பெனி வைத்து இருந்தாலோ இல்லை தனியார் நிறுவனத்தில் பணிசெய்தாலோ இவரால் இப்படி அலட்சியமாய், காலதாமதமாய் வர முடியுமா? அரை நாள் லீவ் போடச் சொல்வார்கள். இங்கே யார் கேட்கப் போகிறார்கள்.

சீட்டில் உட்கார்ந்தார். பியூனை அழைத்துப் ஃபேனை ஸ்பீட் கூட்டச் சொன்னார். "இந்த குளிரில் நீ விரைத்து சாகக்கடவது" என்று சாபமிட்டேன்.

"வரிசையா நில்லுய்யா. இப்படி நின்னா எப்படிய்யா வாங்குறது" என்று பியூன் சப்தமிட்டது ஜால்ரா சப்தத்துடன் கேட்டது.

ஒவ்வொருவராய் விண்ணப்ப பாரத்தைக் கொடுத்தனர். அவர் ஏதாவது கேட்பார். இதற்குள் பியூனுக்குத் தெரிந்த நபர்கள் சிலர் இடையில் புகுந்தனர். "சார்... நாங்க காலையில் இருந்து நிற்கிறோம்" என்று ஒருவர் முறையிட -

"நில்லு... யாரு வேணாம்னா... நீங்க நில்லுங் கண்ணே" என்றார் பியூன் - தமக்கு வேண்டிய நபரிடம்.

மணி பார்த்தேன். பன்னிரெண்டு இருபது. பத்துப் பேரிடம்தான் வாங்கி இருப்பார் பாரத்தை. நான் முப்பதாவது ஆள். ஒரு மணிக்குள் வாங்கி விடுவாரா? பியூன் அடிக்கடி மணி பார்த்துக் கொண்டான். அந்த அரசு ஊழியரும் மணி பார்த்துக் கொண்டார். இப்படி அடிக்கடி மணி பார்க்கும் வேளையில் இரண்டு பேரிடம் பாரம் வாங்கி விடலாம்.

சிறுநீர் வருவது போல் இருந்தது. அடக்கிக் கொண்டேன். நத்தை வேகத்தில் வரிசை சென்றது. திடீர் என்று அந்த ஊழியர் எழுந்து ஜன்னல் அருகே சென்று ஒரு சிகரெட் பிடித்தார். அஞ்சு நிமிஷம் வீணானது. வந்து உட்கார்ந்தார். ஒருவர் அவசரப்படுத்தினார்.

பியூன் "எங்களுக்கு ஏழு கையா இருக்கு" என்று கேட்டார். கிட்டத்தட்ட ஜன்னலை நெருங்கி விட்டேன். எனக்கு முன் இரண்டே பேர்... மணி பார்த்தேன். ஒன்றாக ஐந்து நிமிஷம் இருந்தது. இதயம் படபடவென்று அடித்து கொண்டது. எனக்கு முன்னே இருந்தவர் கொடுத்தார்.

இப்போது நான்... வாங்கிக் கொண்டார். என்னவோ கேட்டார். என்ன கேட்கிறார் என்றே தெரியவில்லை. வாய்க்குள்ளேயே பேசிக் கொண்டார்.

நான் கொடுத்து விட்டு நகர்ந்த போது பியூன் வரிசையில் இருந்தவர்களை அப்புறப் படுத்தினார். "போய்யா... போ.. நாளைக்கு வா. ஒரு மணி ஆச்சு."

நான் ஏதோ பெரிய யுத்தத்தில் ஜெயித்த மாதிரி ஒருவித சந்தோஷத்துடன் வந்தேன்.

ENCAR'S GOLDEN MONTH

21.12.95 முதல் **21.1.96** வரை மட்டும்

ஓர் உன்னதமான முந்திரி முதலீட்டு திட்டம்

உங்களுக்காக

ENCAR

Cashew Cash Bond

என்கார் கேஷ்யூ கேஷ்பாண்ட்

- அதிக வருவாய்
- வரி விலக்கு
- முழு உத்திரவாதம் (செக்யூரிட்டி டெபாசிட்)
- மிக குறுகிய கால முதலீடு

கடின உழைப்பின் மூலம் ஈட்டிய உங்கள் முதலீட்டின் பாதுகாப்பைப் பற்றி கவலை, அதிக வருவாய் பெற முதலீட்டை பணயம் வைக்க வேண்டிய நிலைமை, நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் எதுவும் இனி இல்லை.

என்கார் கேஷ்யூ பாண்ட் அளிப்பது உறுதியான அதிக வருவாய்

★ இத்திட்டத்தில் 6 ஆண்டு காலத்திற்கு ரூ. 5000/- முதலீடு செய்து 28% க்கும் கூடுதலான மிகுதியான வருமானம் பெறலாம் மேலும் உங்கள் முதலீட்டிற்கு கம்பெனி தரவேண்டிய பணத்திற்கு உத்திரவாதமாக எங்களிடம் உள்ள நிலத்தில் ஒரு பகுதியை (ஒரு யூனிட்டிற்கு 2400 ச.அடி) உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்வதற்கான வாய்ப்பை அளிக்கிறது. ★ முதலீட்டாளர்களுக்கு வருமானத்தை பற்றி கவலையும் சந்தேகமும் இல்லாத முதலீடு, மற்றும் எந்த சூழ்நிலையிலும் திட்டவட்டமாக ஆண்டுக்கு 28% வருமானத்தை பெறலாம். ★ பல்லாயிரக்கணக்கான முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெற்ற உங்கள் என்கார் நிறுவனம் மூன்று தலைமுறையாக தொழில் துறையில் அனுபவம் பெற்ற பிரைவேட் லிமிடெட் (இந்திய கம்பெனி சட்டம் 1956 -ல் பதிவு பெற்றது) என்கார் குரூப் நிறுவனத்தின் ஓர் உன்னதமான முதலீட்டு திட்டம் என்கார் கேஷ்யூ கேஷ்பாண்ட்★ முந்திரி தோட்டத்தில் பெறுகின்ற வருமானம் விவசாயத்தை சார்ந்தது, எனவே நீங்கள் வருமான வரி செலுத்த வேண்டியது இல்லை.


திட்டம்	குறைந்த பட்ச முதலீடு	நில உத்திரவாதம்	வருமானம்	போனஸ்	திட்ட காலம்	மொத்த வருமானம்
A. ஆண்டு வருமான திட்டம்	Rs. 5,000/- (1 Unit)	1 Ground	Rs. 900/- Per Year	Rs. 1,800/- at the end	6 Years	12,200/-
B. கூட்டு வருமான திட்டம்	Rs. 5,000/- (1 Unit)	1 Ground	Rs. 10,000/-		6 Years	15,000/-

ENCAR Cashew Gardens (P) Limited

Registered under Companies Act 1956 - IC. No. 18 - 30423 / 95

Head Office – 134/2, Royapettah High Road, Near Vivek & Co, Luz Corner, Mylapore, MADRAS - 4 Ph: 8526887. Fax: 91-44-840636
Regd. Office – 10 & 11 Varadharaju Complex, (Easwari Complex), Near Chatram Bus Stand, TRICHY - 2
Ph: 25963 Fax: 0431 - 462750 Telex: 0455-316 ACES IN
Regl. Office – 1/23, Hanumanthappa Layout, Near Manipal Center, 1/A, Ulsoor Road, BANGALORE - 42 Ph: 5598092
Branches – 512-B, N.S.R. Road, Gowri Complex, Annamalai Stores Upstairs, Saibaba Colony, COIMBATORE - 11 Ph: 445062, 445065
– No. 267, Advaida Asrama Road, A.V.K. Nagar, Opp. to New Bus Stand, SALEM - 4 Ph: 448873
– No. 7, west Vadampokki street, Near Perumal Koil, MADURAI - 1 Ph: 35687
– Popular Complex, 31/A, North Pradhakshnam Road, Near Thinnappa Theater, KARUR - 1

For Safe and Secured Investments - ENCAR





1996 ஜனவரி 21
யுவ தை 7
மலர் : 54
இதழ் : 25

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



அரபிக் கடலோரம் ஓர் அவலட்சணம்!


“என்ரான் மின் திட்டத்தைத் தூக்கி அரபிக் கடலில் போட்டு விடுவோம்!” என்று முழங்கிய பி.ஜே.பி. - சிவசேனா அரசாங்கம் இன்று அதையே ஆசீர்வதித்து ஏற்றுக் கொண்டிருக்கிறது...” என்பதாக அசட்டுத்தனமாகக் கேலி பேசியிருக்கிறார் ஷரத் பவார்.

‘அவர் பேசியதில் என்ன அசட்டுத்தனம்?’ என்கிறீர்களா? காங்கிரஸ் என்ரானுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தைத்தான் அரபிக் கடலில் மூழ்கடிப்பதாக இன்றைய மஹாராஷ்டிரா அரசு சூளுரைத்ததே தவிர, ‘பின்னர் அதையே மீட்டு வந்து சில மாறுதல்களுடன் ஏற்றுக் கொள்ள மாட்டோம்’ என்று அவர்கள் சொல்லவேயில்லையே...!

‘என்ன பெரிய மாறுதல்கள்? ஈரம் போகத் துடைத்துக் காயவைத்து, அதையேதான் ஜோஷி திரும்பவும் கையெழுத்துக்கு ஏற்றுள்ளார்!’ என்று சி.பி.ஐ., சி.பி.ஐ.(எம்) கட்சிக்காரர்கள் வாதாடுகிறார்கள்.

இதற்கெல்லாம் ஜோஷி பயப்படுவாரா என்ன! மாறுதல்களைப் பட்டியல் போடுகிறார் : ‘புது ஒப்பந்தப்படி மின் கட்டணம் யூனிட்டுக்கு 1.86 ரூபாய்தான். பழையதில் 2.40 ரூபாய்!’ என்று மார் தட்டிக் கொள்கிறார்.

‘ஆனால் டாலரின் மதிப்புக்கு ஏற்ப இக் கட்டண விகிதம் அட்ஜஸ்ட் செய்யப்படும் என்பதால் ஒரு யூனிட் மின்சாரத்தின் விலை 1.86 ரூபாயில் நிச்சயமாக நிலைத்து நிற்கப் போவதில்லையே.... இப்போதே 2.10 ஆக உயர்ந்து விட்டதே! மேலும் பழைய ஒப்பந்தப்படி உற்பத்தியின் உச்சகட்டத்தில்தான் 2.40 ரூபாய் கொடுப்பதாகப் பேச்சு. இப்போதோ உற்பத்தி தொடங்கியதுமே கட்டணம்



செலுத்த ஆரம்பிக்கப் போகிறார்கள்... இந்த அநியாயத்தைக் கேட்பாரில்லையா...?' - அலறுகிறார் பவார்.

'கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசையா?' என்று அவரைச் சாடுகிறார் ஜோஷி. 'புதிய ஒப்பந்தத்தில் மஹாராஷ்டிரா மின்வாரியத்துக்கு முப்பது சதவிகிதம் பங்கு மூலதனம் கிடைக்க வழிசெய்திருக்கோமே - அதைப் பாருங்கள்...!' என்கிறார்.

'ஒன்பதாயிரம் கோடி ரூபாய் திட்டத்தில் முப்பது சதவிகிதம் என்றால்..? அடேயப்பா! மஹாராஷ்டிரா மின்வாரியம் அவ்வளவு பணத்துக்கு எங்கே போகும்?' என்று அநாவசிய கேள்வி எழுப்புவோர் வெறும் அதிகப்பிரசங்கிகள்.


'எங்கள் அரசு, திட்டத்தின் மொத்த செலவைக் கணிசமாகக் குறைத்ததோ, மஹாராஷ்டிர மின்வாரியம் பிழைத்ததோ!' என்று ஜோஷி வாதாடக்கூடும்!

'உங்கள் அரசால் எங்கே அய்யா செலவு குறைந்தது? திட்டத்தின் ஒரு பகுதியைத் தனியே பிரித்துக் கணக்கு எழுதி விட்டீர்கள்; எரிபொருளை நாஃப்தாவாக (இது மலிவு) மாற்றி விட்டீர்கள்; தொழிற்சாலைக்குத் தேவையான சில இயந்திரங்களின் விலை உலகச் சந்தையிலேயே குறைந்து விட்டது... எங்களால் செலவு குறைந்தது என்று அநியாயமாய்க் கண்துடைப்புச் செய்கிறீர்களே...?' - இவ்வாறு ஆத்திரப்படுபவர்களுக்கும் ஜோஷியிடம் அதிரடி பதில் இருக்கும் :

'இப்படியெல்லாம் நடக்கும் என்ற தீர்க்கதரிசனத்துடன்தான் அன்று காங்கிரஸ் பேரில் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தி, அவர்களைத் தேர்தலில் தோற்கடித்து, திட்டத்தை உடைப்பில் போட்டோம்...' என்று அவர் சொல்லக்கூடும்.

'அதே காங்கிரஸின் பேரில் இன்று ஊழல் குற்றச்சாட்டுக்கான ஆதாரமே இல்லை என்று நீங்கள் பேசியிருக்கிறீர்களே...? இது எப்படி சாத்தியம்?'

'ஊழல் குற்றச்சாட்டுக்கான ஆதாரம் இல்லை என்றுதான் சொன்னேன். ஆனால் ஊழலே இல்லை என்று சொல்லவில்லையே! எனினும் இப்போது நடவடிக்கைகள் தேவையில்லை...' என்று ஜோஷி அளிக்கக்கூடிய பதிலில் நாம் சிண்டைப் பிய்த்துக் கொண்டிருக்காமல், புதிதாக ஒரு வாதத்தை



முன்வைப்போம் :

'அது சரி, அயல்நாட்டு நிறுவனத்தை இங்கே அனுமதித்த காங்கிரஸை 'கொஞ்சமாவது சுதேசி உணர்வு இல்லாதவர்கள்' என்று நீங்கள் கரித்துக் கொட்டினீர்கள். சுதேசியத்தை கட்சிக் கொள்கையாகக் கொண்ட நீங்களே இப்போது.......?'

'இவ்வளவு தூரம் விட்டுக் கொடுத்துப் புது ஒப்பந்தம் செய்து கொண்டோமோ, நாடு பிழைத்ததோ! இல்லாவிட்டால் இந்தியாவின் பெயரே ரிப்பேராகி, அயல்நாட்டு நிறுவனங்கள் இங்கே வரவும் முதலீடு செய்யவும் தயங்கி பின்வாங்கியிருக்கும். எங்களால்தானே நாடு அந்த அபாயத்திலிருந்து தப்பியது!' என தம் தேச பக்தியைப் பறைசாற்றிக் கொள்வார் ஜோஷி.

'என்ரான் ஒப்பந்தத்தை அரபிக் கடலில் போடுவோம்' என்று பேசிய போது இந்த தேச பக்தி எங்கே போயிருந்தது என்று நாம் கேட்டால், நமக்கு தேச பக்தி இல்லை என்பதைத்தான் அது உணர்த்துமே தவிர, பி.ஜே.பி. தலைவர்களின் முரண்பாடுகளை அல்ல!

சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் சும்மா இராமல் கேட்கிறார்கள் : 'என்ரான் திட்டத்தால் சூழல் மாசுபடும் என்று பேசி விட்டு, இப்போது அடியோடு பல்டி அடிக்கலாமா?'

ஜோஷியிடமா பதில் இருக்காது!

'திட்டத்தின் பயனாக மின் உற்பத்தி பெருகி, குடிசைவாசிகள் கூட ஏ.சி. பொருத்திக் கொண்டு மாசுக் கட்டுப்பாட்டுடன் வாழப் போகும் நாள் வெகு தொலைவில் இல்லை...' என்று அவர் சொல்லலாம்.

எதெற்கெடுத்தாலும் கணக்குப் பார்க்கும் சில சமர்த்தர்கள் கேட்கிறார்கள் :

'திட்டம் இடையில் தடைபட்டதால் நேர்ந்த நஷ்டத்தையும் ஈடுசெய்து, எங்களுக்குக் கணிசமான லாபத்தையும் தருகிறது புதிய ஒப்பந்தம்' என்று என்ரான் பிரதிநிதி ரெபக்கா மார்க் பேசியுள்ளாரே...? எங்கேயோ இடிக்கிறதே...?'

'அதனால் என்ன...?' என்பார் ஜோஷி. 'வோட்டுப் போடும் மக்கள் இந்தக் கணக்கையெல்லாமா பார்த்துக் கொண்டிருக்கப் போகிறார்கள்? நாங்கள் ராம ஜெபம் செய்தே வோட்டு வாங்கி விடுவோம்!' - இப்படியொரு பதிலைச் சொல்லக்கூடிய நெஞ்சுரம் பி.ஜே.பி. தவிர வேறு எந்தக் கட்சிக்கு இருக்க முடியும்!

திருநெல்வேலி ரிப்போர்ட்!

சுயநல சக்திகள் தூண்டும் கலவரம்

வீரமும், தென்மதுரத் தமிழும் செழித்தோங்கி யிருந்த திருநெல்வேலி பிரதேசத்தில் இன்று நாசகார சக்திகள் வீச்சரிவாள்களையும், நாட்டு வெடுகுண்டுகளையும் ஏந்தி வெறியாட்டம் போடும் நிலை திடீரென்று உருவானதா?

'தென்னாட்டு •போஸ்' (நேதாஜி) என்று போற்றப்படும் பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர், சுதந்திர பாரதத்தின் அரசியலமைப்பு சட்டத்தை வடிவமைத்த சிற்பி டாக்டர் அம்பேத்கர், இவர்களின் அடிச்சுவட்டில் தேச நலனுக்காகப் பாடுபடாவிட்டா லும் பரவாயில்லை; ஆனால் இந்த தேசியத் தலைவர்களின் பெயரைப் பயன்படுத்தி இரண்டு பிரிவாக மக்களைக் கூறுபோட்டு, பழிதீர்க்க வைப்பது எந்த ஆதாயத்திற்காக?

தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்தக் கலவரம் வெடித்ததால் இது ஓர் அரசியல் சதியோ என்ற சந்தேகம் பல தரப்பு மக்களிடமும் நிலவுகிறது.



• கொலையுண்ட ராஜாவின் மனைவி சொர்ணம் (19) மற்றும் தாய் சொக்கம்மா

• சாரதா கல்வி நிறுவனத்தின் நிர்வாகி சுவாமி சங்கரானந்தர்







• வல்லநாடு - கொலையுண்ட ராஜாவின் தந்தை பூலத்தேவர்.

ஒரு குறிப்பிட்ட தரப்பு மக்களின் வாக்குகளை ஒட்டுமொத்தமாகத் தன் பக்கம் வளைத்துக் கொள்வதற்காக திட்டமிட்ட ரீதியில் உருவாக்கப்பட்டதுதான் இந்தக் கலவரம் என்பதை அரசியல் வட்டாரங்கள் ஒப்புக் கொள்கின்றன.

யார், எதற்காக இந்த கலவரத்தீயை மூட்டியிருந்தாலும், அதில் வெந்து, மடிந்துபோனவர்கள் அப்பாவி மக்களே. சில கிராமங்களுக்குச் சென்று உண்மை நிலையை அறிந்து கொள்வதற்காக நான்கு பத்திரிகையாளர்கள் கொண்ட எங்கள் குழு (பிசினஸ் இந்தியா முதுநிலை செய்தியாளர் கே.டி.ஜெகந்நாதன், மீடியா சர்க்யூட்ஸ் செய்தியாளர் கோவிந்த சர்மா மற்றும் நாங்கள் இருவர்) சென்னையிலிருந்து புறப்பட்டது.

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்த 12 கிராமங்களை 10 நாட்களில் சுற்றிப்பார்த்தோம். பாதிக்கப்பட்ட மக்கள் சொன்ன தகவல்களில் அவர்களின் ஆவேசத்தையும், அப்பாவித்தனத்தையும் பார்க்க முடிந்தது. தேசத்தின் ஜீவநாடியான கிராமங்களைப் புறக்கணித்ததால் வந்த வினையை இப்போது அறுவடை செய்து கொண்டிருக்கிறோம் என்று புரிந்தது. கிராம முன்னேற்றம் இனியும் நிகழாவிட்டால் ஒட்டுமொத்த சமுதாயமும் நொறுங்கிப்போகும் அபாயம் காத்திருக்கிறது என்பதையும் நாங்கள் உணர்ந்தோம்.

சில கொலைகளைப் பற்றி எங்களுக்குக் கிடைத்த தகவல்கள், யாரை, எங்கே, எப்படித் தீர்த்துக்கட்ட வேண்டும் என்பதை முன்கூட்டியே கச்சிதமாகத் திட்டம் போட்டு முடித்திருக்கிறார்கள் என்பதை ஊர்ஜிதம் செய்தன.

• வல்லநாடு தி.மு.க. பிரமுகர் தர்மராஜ்: "தமிழகம் ஒரு காஷ்மீராக வேண்டுமா?"

திருநெல்வேலி மாவட்டம் மருதன் வாழ்வு கிராமத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழக பொதுச் செயலாளர் நல்லக்கண்ணுவின் மாமனார் அண்ணாசாமியை (84) ஒரு கும்பல் வெட்டிச் சாய்த்தது. தேவேந்திர குல மக்கள் அதிகமாக வசிக்கும் இந்த கிராமத்தின் நலனுக்காகத் தொடர்ந்து பாடுபட்டு, அந்த மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்த அவரின் கொடூர முடிவு கண்டு அந்தக் கிராமமே கதறியிருக்கிறது. "ஜாதி வெறியால் உள்ளூர் மக்கள் நிச்சயமாக இந்த படுபாதகத்தைச் செய்திருக்க மாட்டார்கள்" என்று ஆணித்தரமாகக் கூறினார் நல்லக்கண்ணு.



• துறையூர் ஜோஸப் ராணி "எங்களுக்கு சுதந்திரம் எங்கே?"

திருநெல்வேலி ஜங்ஷன் அருகே சிந்துபூந்துறையில் வாழ்ந்தவர் தடிவீரன் (41). தினமும் காலையில் தாமிரபரணியில் நீராடி, பேராச்சியம்மன் கோவிலுக்கும், அருகில் உள்ள பெருமாள் கோவிலுக்கும் பூ, துளசி தொடுத்துக் கொடுத்து சாமி கும்பிட்டு வந்த பிறகுதான் மற்ற வேலைகளைக் கவனிப்பார். இந்த கோவில்களைத் தூய்மைப்படுத்தும் பணியை, பணம் வாங்கிக் கொள்ளாமல் பக்திபூர்வமாகச் செய்து வந்தார். பள்ளர் இனத்தவராய் இருந்தாலும் எல்லா சமுதாயத்தினரின் அன்பைப் பெற்றவர். "இப்படிப்பட்ட நல்ல மனிதரைக் கொலை செய்ததால் எங்கள் மக்கள் ஜங்ஷன் ஏரியாவைச் சூறையாடிவிட்டார்கள்" என்று இதே பகுதியைச் சேர்ந்த ஓர் இளைஞர் எங்களிடம் சொன்னார்.



• வெங்கடாஜலபுரத்தில் தாழ்த்தப்பட்ட இன பெண்ணின் வீட்டில் சேர்ந்து பீடி சுற்றும் தேவர் இனப் பெண்

கல் உடைக்கும் ஒரு நிறுவனத்தில் வாட்ச்மேனாக வேலை செய்தவர் துறையூர் கிராமத்தைச் சேர்ந்த அந்தோணி (65). தமது ஒரு மகன், மற்றும் 4 மகள்களுக்குக் கல்யாணம் முடித்து வைத்து, முதுமைக் காலத்திலும் தமது சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்ற தன்மானத்துடன் மனைவியோடு வாழ்க்கையை ஓட்டிய இவர், குரூரமாகக் கொலை செய்யப்பட்டார். தலையை வெட்டி தனியாக வைத்து, குடலை உருவி கழுத்தில் மாலையாகப் போட்டு, ஆண் உறுப்பை வாயில் திணித்து வைத்து விட்டுச் சென்றுவிட்டார்கள், கொலைகார வெறியர்கள். இதன் எதிரொலியாக அக்கம் பக்க

கிராமங்களில் 6 தொடர் கொலைகள் நடந்தன.

இன்னொரு ஜாதியைத் தாக்குவதற்காக ஆவேசம் கொண்டு போகிறவர்களா, இப்படி, நிதானமாக ஒரு கொடூர காட்சியை ஏற்பாடு செய்துவிட்டு ஓடுவார்கள்?

நவம்பர் மாதம் 17ம் தேதி இரவு நன்னகரம் கிராமத்தில் அம்பேத்கர் சிலையின் ஒரு பகுதி சேதப்படுத்தப்பட்டது. "இது புலியூர் மறவன் வேலை" என்ற அறிவிப்பு அட்டையையும் தொங்கவிட்டிருக்கிறார்கள். அடுத்த நாள் காலை சுமார் ஏழு மணிக்கு அங்கு சாலை மறியல். குற்றாலம்–தென்காசி சாலையில் அடுத்த அரைமணி நேரத்திலும், திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் காலை ஒன்பதரை மணிக்குள்ளும் பஸ் மறியல், கலவரம் நடந்திருக்கிறது. போக்குவரத்து அடியோடு துண்டிக்கப்பட்ட நிலையில் மாவட்டம் முழுவதும் இந்தச் செய்தி பரவியிருந்த வேகத்தைப் பார்த்தால், சிலை உடைப்பு சதிகாரக் கும்பலின் கைவரிசை என்பதில் சந்தேகம் இல்லை என்று எங்களிடம் காவல்துறை அதிகாரி ஒருவர் விளக்கினார்.



• கலவரத்தில் பலியான ஆலந்தா கிராம நாட்டாண்மை பலவேசத்தின் குடும்பம் நிராதரவாய்... கலங்கி நிற்கிறது.

ஜூலை மாத இறுதியில் வீரசிகாமணி கிராமத்தில் தேவர் சிலையைச் சேதப்படுத்தியது இன்னொரு தரப்பு மக்கள் அல்ல என்பதும் புலப்பட்டது. எங்களிடம் பல விஷயங்களை வெளிப்படையாகப் பேசிய இரு தரப்பையும் சேர்ந்த முக்கிய பிரமுகர்களும் சிலை உடைப்புச் சம்பவங்களில் தங்கள் சமுதாயத்தினர் ஈடுபடவில்லை என்று உறுதியாகச் சொன்னார்கள்.

எப்படியாவது கலவரம் காட்டுத்தீயாகப் பரவ வேண்டும் என்பதில் குறியாய் இருந்த சமூகவிரோதக் கும்பலின் தகவல் தொடர்பு நெட்வொர்க் காவல்துறைக்கே சவால்விடும் அளவுக்கு கனகச்சிதமாக நடந்திருக்கிறது. சில கிராமங்களில் உள்ள ஃபேக்ஸ் வசதியும் இவர்களுக்குக் கை கொடுத்திருக்கிறது.

"வாலிபப் பசங்க அந்த மாநாடு, இந்த மாநாடுன்னு அடிக்கடி வெளியூர் போய் வராங்க. நேரா பேச முடியலைன்னா போன், பேக்ஸ் மூலமா பேசிக்கிறாங்க" என்று வெங்கடாஜலபுரம் கிராமத் தலைவர் பூலையாத் தேவர் சொன்னதில் இருந்து இளைஞர்கள் பகடைக் காய்களாக இரு தரப்பிலும் பயன்படுத்தப்படுவதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

இந்த கொந்தளிப்பான சூழ்நிலையிலும் சில நல்ல உள்ளங்கள் பொறுப்புணர்வுடனும், நிதானம் இழக்காமலும் செயல்பட்டதால்தான் ஒரு பேரழிவு தடுக்கப்பட்டிருக்கிறது. தேவேந்திர குல வேளாளர் (பள்ளர்), தேவர் சமுதாய மோதலாகத் தோன்றும் இந்த கலவரத்தில் இரு தரப்பிலும் சிலர் மேற்கொண்ட நல்ல முயற்சி மெய்சிலிர்க்க வைக்கிறது. தூத்துக்குடி மாவட்டம் வல்லநாடு கிராமத்தில் ஒருவர், தமது தெருவில் மாட்டிக் கொண்ட எதிர்த் தரப்பினர் மூன்று பேருக்குத் தம் வீட்டில் தஞ்சமளித்து, கலவரம் தணிந்ததும் பாதுகாப்பாக அனுப்பி வைத்திருக்கிறார். அபயமளித்த இவர் தரப்பினரே எதிர்த்தரப்பில் ஒருவரைக் கலவரத்தில் கொலை செய்திருந்தும், இரண்டு சமூகத்தினரும் கூடிப்பேசி இனிமேல் இது தொடரக் கூடாது என்று முடிவெடுத்திருக்கிறார்கள். "நம் பிரச்னையை நாமே பேசி தீர்த்துக் கொள்வோம். அசலூர்க்காரர்களைத் தலையிட விடக் கூடாது" என்று முடிவு செய்ததால் கொலைப்படலம் நிறுத்தப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டான் அருகேயுள்ள மறக்குடி கிராமத்தில் ஒரு கொலை நடந்தவுடன் அந்த கிராம மக்கள் ஊரைவிட்டே ஓடிவிட்டார்கள். தங்கள் பக்கத்து கிராமமான பச்சேரி மக்களுக்குப் பயந்து அவர்கள் ஓடினார்கள். ஆனால் அதே பச்சேரி கிராமத்தின் பிரமுகர்கள், மறக்குடி கிராமத்தினர் மீண்டும் வீடு திரும்ப நடவடிக்கை எடுக்குமாறு கலெக்டரிடம் கோரியதுடன், அமைதி திரும்ப ஒத்துழைப்பதற்கு உறுதியும் அளித்திருக்கிறார்கள்.

திருநெல்வேலி அருகேயுள்ள திருத்து என்ற

KACHCHI MOODOOR ARCHAKAS WELFARE TRUST (Regd.)

Phone : 411936



APPEAL

Poojyasri Chandrasekharendra Saraswathi Swamigal says that the best form of social service is to support proper conduct of worship in temples, the sanctuaries of solace to the common man for getting the much needed peace of mind, in the Divine Presence.

Hence, the Great Sage of Kanchi formed this Trust in 1986 to identify and aid the deserving Archakas doing Poojas in ancient village temples of Tamilnadu, many of which are presently impoverished by circumstances. Further, His Holiness stipulated that the Corpus Fund be formed purely through donations to the Trust. Maha Periyava has also given the Directive that every devotee getting a gross income of Rs. 4,000/- per month or more, should donate one month's gross income at least once in one's lifetime. Other devotees may kindly contribute their mite.

The Grace of the Jagadguru has made it possible for the Trust to give nearly Rs. 22 lakhs to such Hereditary Poojaries, Bhattacharyas and Sivacharyas, by way of a monthly stipend on a continuable basis, from the interest earnings. Every year beneficiaries keep on increasing and periodically the quantum of monthly aid also requires increment. Hence this appeal for donations.

Donations may be sent by Money Order/Crossed Cheques in favour of 'KACHCHI MOODOOR ARCHAKAS WELFARE TRUST' at No. 10, Second Main Road, Kotturpuram, Madras - 600 085. Instruments like Indira Vikas Patra and legacies to the Trust are also accepted. Exemption under Section 80-G of the Income Tax Act is available upto 31.3.1998. The trust is also registered under FCRA to receive donations from abroad.

May we request you to heed the Clarion Call of our Kanchi Mahaswami and send your most valued contributions.

January 1996

Justice N. Krishnaswamy Reddy (Retd.)
Chairman of the Trust

கிராமத்தில் அ.தி.மு.க. பிரமுகர் கருப்பசாமி பாண்டியனின் வைக்கோல் போருக்குத் தீ வைக்கப்பட்டது. தீயை அணைத்ததில் 90 சதவீதம் பேர் தேவேந்திர குல மக்கள். இந்தத் தகவலை எங்களிடம் கூறிய ஒரு பெரியவர், "தேவேந்திரகுல மக்களுக்கு எதிராக கருப்ப சாமி பாண்டியன் தரப்பினரை ஏவி விடுவதற் காகத்தான் இப்படி தீ வைத்தார்கள். நல்ல வேளை, அந்தத் திட்டம் பலிக்கவில்லை" என் றார்.

ஆலந்தா, வல்லநாடு பகுதிகளில் ஆகஸ்டு கடைசி வாரத்தில் அடுத்தடுத்து நான்கு கொலைகள் நடந்ததால், ஒரு பெண், திருநெல் வேலி சாரதா கல்வி நிறுவனத்தில் படிக்கும் தங்கள் பகுதி குழந்தைகளைக் கலவரம் முற்று வதற்குள் அழைத்துப் போக வேண்டும் என் பதற்காக, பகல் 12 மணிக்கு அங்கு வந்திருக் கிறார். அவர் மூலம் விவரம் அறிந்த சாரதா கல்வி நிறுவனத்தின் நிர்வாகியான சுவாமி சங்கரானந்தர், கலவரப் பகுதியில் இருக்கும் ஐந்து கிராமங்களைச் சேர்ந்த இரு சமுதாயத் தின் 47 குழந்தைகளை வேனில் அனுப்புவதற் காக டிரைவரை அழைத்திருக்கிறார். அங்கு இந்த இரு சமுதாயங்களைச் சேர்ந்த 13 டிரைவர்கள் இருந்தும் யாரும் வேனை ஓட்ட முன்வராததால் சுவாமி சங்கரானந்தரே துணிச்சலாக வேனை ஓட்டிச் சென்று குழந்தை களைப் பாதுகாப்பாக ஒப்படைத்து வந்திருக் கிறார்.

ஆங்காங்கே கலவரக்காரர்கள் ஆயுதங்களு டன் வேனை வழிமறித்து, சாமியார் என்று தெரிந்ததும் வழி விட்டிருக்கிறார்கள். "ஒவ் வொரு கிராமத்திலும் தேவேந்திர குல வேளா ளர், மற்றும் தேவர் - இன பெண்கள் மாற்று சமுதாயக் குழந்தைகளையும் காப்பாற்ற வேண் டும் என்ற அக்கறையோடு கூட்டிச் சென்றார் கள். அவர்களிடம் ஜாதி பேதம் இல்லே. எங்கள் கல்வி நிலையத்திலும் இரு சமுதாயத்தி னரும் இணைந்து வேலை செய்கிறார்கள். தண்ணீர் எடுப்பது, சமைப்பது, சாப்பிடுவது என எல்லாவற்றிலும் இங்கு வேறுபாடே இல்லே. இந்த மோதல் ஜாதிக் கலவரமல்ல. யாருக்கும் வெட்டிக் கொள்ள விருப்பமில்லே. கிரிமினல்கள்தான் இதைத் தூண்டிவிடுறாங்க. அப்புராணியைப் போட்டு வெட்டறாங்க" என்று விவரித்தார் சுவாமி சங்கரானந்தர்.

"படிப்பு, பதவி, பொருளாதாரம் என எல்லா வகையிலும் உயர்ந்த நிலையை எட்டி யிருந்தாலும் 'சோசியல் ஸ்டேட்டஸ்' கிடைக் காததை எவ்வளவு நாள்தான் எங்களால் பொறுத்துக் கொள்ள முடியும்?" என்று பள்ளர் சமுதாயத் தலைவரும் முன்னாள் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரியுமான மேலப்பாளை

'சுருக்-நறுக்' என்று ஒரு சொல்லோவியம் - 15

சிரிப்பு என்பது....

'வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்' என்பார்கள்; 'சிரிப்பு மனிதகுலத்துக்கு மட்டுமே ஆண்டவன் கொடுத்த வரப்பிரசாதம்' என்றும் சொல்வார்கள்.

இப்படிப்பட்ட சிரிப்பு பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? உங்களின் சிந்தனையை கீழுள்ள கூப்பனில் பளிச்சென்று ஒரு சொல்லோவியமாக எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். பிரசுரமாகும் ஒவ்வொரு சொல்லோவியத்துக்கும் ஐம்பது ரூபாய் பரிசு. இன்னும் பதினொரு வாரங்களுக்குத் தொடர்ந்து நடக்கும் இப் போட்டியில் அதிக முறை பரிசு பெறும் ஒருவருக்கு ஒரு ஜோடி டைட்டன் கைக்கடிகாரங்கள் மெகா பரிசு!

முடிவு தேதி : 29.1.96

ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

— ஆர்.

சிரிப்பு என்பது..............................

....

....

....

....

பெயர் :......................................

முகவரி : ....

....

....

....

அருள்மிகு ஆபத்சகாயேஸ்வர சுவாமி திருக்கோயில்

ஆலங்குடி வலங்கைமான் வட்டம்

குரு பரிகார ஸ்தலம்

நிகழும் யுவ வருடம் தை மாதம் 19-ந் தேதி (2.2.96) வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

பக்தர்கள் வருகை தந்து குரு அருள் பெறக் கேட்டுக் கொள்கிறோம்

நிகழ்ச்சி நிரல்

யுவ வருஷம் தை மாதம் 19 வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு யாகபூஜை ஆரம்பம்

காலை 7.30க்கு	திரவ்யாகுதி
8.00க்கு	ஸ்பருசாகுதி
9.00க்கு	கடம்புறப்பாடு
10.00க்கு	விமானங்கள் கும்பாபிஷேகம்
10.10க்கு	ஸ்ரீ ஆபத்சகாயேஸ்வரர் கும்பாபிஷேகம்
10.15க்கு	ஸ்ரீ குரு தெட்சிணாமூர்த்தி, ஸ்ரீ ஏலவார் குழலி அம்பாள் பரிவாரங்கள் கும்பாபிஷேகம்
மாலை 4 மணிக்கு	மகா அபிஷேகம்
இரவு 7 மணிக்கு	திருக்கல்யாணம்
இரவு 9 மணிக்கு	வீதியுலா காட்சி
3.2.96 10 மணிக்கு	மண்டலாபிஷேக பூஜை ஆரம்பம்

இங்ஙனம்
நிர்வாகிகள்

(யாக சாலையில் வைத்து பூஜை செய்த அருள்மிகு குரு யந்திரம் சுமார் 6 கிராம் வெள்ளியினால் செய்தது, கும்பாபிஷேகம் முடிந்ததும் விற்பனைக்கு கிடைக்கும். கட்டணம் ரூ. 100/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.)

நிர்வாகி
அருள்மிகு குருஸ்தலம்
ஆலங்குடி - 612 801

நேரம் என்பது...

'சுருக்-நறுக்' போட்டி – 11; போட்டி முடிவு...

●● இறைவனின் படைப்பாகிய பூமியின் சுழற்சியில் ஆதி விஞ்ஞானி அளந்து பிரித்த அற்புதம்!

– எல். சண்முகசுந்தரி, இராமநாதபுரம்.

●● வாழ்க்கை என்னும் டைரியை எழுதுகின்ற எழுதுகோல்.

– எஸ். அனந்தநாராயணன், சென்னை – 54.

●● மனிதனால் படைக்க, சேமிக்க, கடத்த, பதுக்க, வஞ்சமாகக் கொடுக்க அல்லது வாங்க முடியாத அபூர்வ வரப்பிரசாதம்.

– பி. மீனா, திருநெல்வேலி.

●● கடிகாரம் எண்ணித் தரும் கரன்சி நோட்டுகள். அதை விழிப்புடன் செலவழித்தால் வெற்றி.

– வே. குருநாதன், ஆ. லட்சுமிபுரம்.

●● புத்திசாலிகளால் நிர்வகிக்கப்படுவது; முட்டாள்களை நிர்வகிப்பது.

– வி.எஸ். கிருஷ்ணன், சென்னை.

●● மனித முன்னேற்றத்திற்கு ஆண்டவன் தந்திருக்கும் அற்புத பரிசு.

– கே. பாலசுப்ரமணியன், சேலம் – 1.

●● 'என்னை வீணாக்காதே' என்று எந்நேரமும் எச்சரிக்கை செய்து கொண்டிருக்கும் மௌன குரு.

– சீனி. தேவராசன், ஈரோடு – 9.

●● மொட்டு மலர்வதைப் போன்றது. நம் கண்ணுக்குப் புலப்படாமலேயே, நம் வாழ்க்கையில் நுழைந்து, வாழ்வை வளப்படுத்துவது.

– வி. பிரசாத், சென்னை – 88.

●● பார்த்துக் கொண்டிருக்கும்போதே கரைந்து மறையும் பனிக்கட்டி.

– வி. அரவிந்த், சென்னை – 18.

●● காலதேவன் பயணிக்கும் 'ரிவர்ஸ் கியர்' இல்லாத வாகனம்.

– சி. நாச்சிமுத்து, ஈரோடு – 9.

●● முதலும் முடிவுமில்லா பிரபஞ்ச இசையின் தாள லயம்.

– ஆர். ராஜாராம், சென்னை – 28.

யம் எஸ். ஆறுமுகம் (62) எழுப்பிய கேள்விக்கு இந்த சமுதாயத்தின் பதில் என்ன? "மரியாதைக் குறைவாகவும், இழிவாகவும் பேசியதை நாங்கள் சகித்துக் கொண்டோம். ஆனால் தரக்குறைவா பேசுவதை எங்கள் இளைஞர்கள் எதிர்க்க ஆரம்பித்து விட்டார்கள்'' என்று அவர் கவலையோடு சுட்டிக்காட்டினார். இதன் எதிரொலியை துறையூரில் பிளஸ் டூ மாணவியான ஜோசப்ராணியின் வார்த்தைகளில் கேட்டோம்:

"நாட்டுக்கு சுதந்திரம் வந்த பிறகும் பயந்து பயந்துதான் வாழ்கிறோம்... எங்களுக்கு சுதந்திரம் எங்க...?'' இப்படிப்பட்ட இளந்தளிர்களின் குரல்களை இனியும் அலட்சியப்படுத்துவது எந்த வகையில் நியாயம்?

"நாங்க சோஷியலா பழகுறோம். எந்த வேறுபாடும் இல்லை. எல்லாம் நம்ப ஆட்கள் தான்னு நெனைச்சு நம்பிட்டோம். அவங்க அதை நெனைச்சுப் பார்க்கலையே'' என்று குரல் கம்ம சொன்ன கங்கைகொண்டான் வி.சி. பால்ஊட்வர்டு முத்தையா தமது மகன் செல்வராஜை (43) பலி கொடுத்தவர். இதே கருத்தைத் தான் தத்தம் வார்த்தைகளில் இரு தரப்பிலும் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனார்கள்.

கல்யாணம் முடிந்த 83வது நாளில் நாட்டு வெடிகுண்டை வீசி கொல்லப்பட்ட வல்லநாடு ராஜா (26)வின் தாயும் தந்தையும் கதறி அழுததையும், பூரிப்பு முடிவதற்குள் விதவையாய் விக்கித்து நின்ற 19 வயது புதுமணப்பெண் சொர்ணத்தின் கொடுமையான துயரத்தையும், இப்போது நினைத்தாலும் மனம் கலங்குகிறது. ஆலந்தா கிராமத்தில் தன் கண் முன்னே கணவர் பலவேசத்தை (57) பறிகொடுத்த பெண்மணி தன் குழந்தைகளின் எதிரிலேயே அந்தக் கொடூரத்தை விவரித்த போது 7ம் வகுப்பு படிக்கும் அருணாசலமும், 4ம் வகுப்பு படிக்கும் கடலைமணியும் அப்பாவின் முடிவை நினைத்துக் கலக்கமும், மிரட்சியுமாய் எங்களை வெறித்து பார்த்த பார்வையை லேசில் மறக்க முடியாது.

இப்படிப்பட்ட வெறியாட்டம் நடந்த பகுதிகளில், எதிர்காலம் பற்றிய நம்பிக்கைக் கீற்றும் தென்பட்டது. மூன்று அப்பாவிகளைக் கொலை செய்து களங்கப்பட்டு மருகித் தவிக்கும் வெங்கடாஜலபுரத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு வீட்டில் அந்த வீட்டுப்



பைத்தியமாக்கும் பாபா ஸேகல்!

"தண்டா தண்டா பானி என்று ஒரு காசட் முன்னால் வந்தது. அதிலிருந்து பாபா ஸேகல் தமது ரசிகர்களை 'ராப்' பைத்தியமாக்கி விட்டார்!" என்கிறார் ஸ்டீரியோவிஷன் அதிபர்.

"வந்தவுடனேயே ஆயிரக்கணக்கில் கடகட விற்பனையாகும் காசட்டுகள் பாபா ஸேகல் காஸட்ஸ்!" என்கிறார்கள் மாக்னா சவுண்ட் நிறுவனத்தினர்.

"இதுவரை ஐந்து கேசட்டுகள் வந்து விட்டன. அத்தனையும் சக்கைப் போடு போட்டிருக்கின்றன."

சமீபத்தில் வந்திருக்கிற 'டாக்டர் டிங்க்ரா', 'இன்டியா ரோமியோ' இரண்டு கேசட்டுகளும் இதில் சேர்த்தி. பழைய 'ஹிட்'கள் அலிபாபா, தில்ரூபா.

இந்தப் பஞ்சாபி பாடகர், தமது பாட்டுக்களைத் தாமே எழுதிப் பாடுகிறார். (பாதிக்குப் பாதி ஆங்கிலமும் இருக்கும் சில பாட்டுக்களில்! உதாரணம் : எவ்ரி ஒன் ஈஸ் மடோனா; மை(ம்) பீ மடோனா.)

பஞ்சாபி நாட்டுப்புறப் பாடல்களை கோஷ்டியோடு, சேஷ்டைகளோடு பாடும் குருதாஸ் மான் எப்படி ரசிகர்களைத் தம் பக்கம் இழுத்துக் கொண்டு நிகழ்ச்சிகளில் தூள் கிளப்புகிறாரோ அதே மாதிரிதான் பாபாவும்.

ரசிகர்களையும் எழுந்து நின்று கொண்டு தாளம் போட்டு ஆட வைப்பது பாபா ஸேகலின் ஸ்பெஷாலிடி!

RAPக்கு பாபா ஸேகலின் விளக்கம் என்ன தெரியுமோ?

Rahe Aap Pareshan ரஹே ஆப் பரேஷான்: அவஸ்தைப்படுங்கள் நன்றாக!

சமீபத்திய 'சூப்பர் ஹிட் பாபா'வில் ஒரு பாட்டு : 'காஜல்' என்பது தலைப்பு :

உன் முகத்தின் எளிமை
என் மனதைக் கவ்விச் செல்கிறது
கன்னத்தின் கறுப்பு மச்சம்
உன்னருகில் என்னை அழைத்து வருது!....

என்று போகிறது.

— சித்தார்த்

பெண்களுடன் பீடி சுற்றிக் கொண்டிருந்த தேவர் இனத்தைச் சேர்ந்த செல்வியை (17) சந்தித்தோம். ஐந்து வருடங்களாக அந்த வீட்டில் சொந்த அக்கா தங்கையாகப் பழகிவரும் இந்த சின்னப் பெண் தன் சமூகத்தைச் சேர்ந்த நான்கு விடலைகள் பக்கத்து கிராமமான அலவந்தான்குளத்தில் மூன்று அப்பாவிகளை கொன்றது பற்றி இப்படிச் சொன்னார்.

"சின்னப் பசங்க சின்னத்தனம் பண்ணிட்டாங்க. இப்படி நடக்கக் கூடாதுதான். சண்டை போடுவது நல்லதா? ஒற்றுமையா இருந்தாத் தானே நல்லது."

பஸ்ஸை வழிமறித்து இரண்டு பேரை இழுத்துச் சென்று அந்தோணி கொலைக்காக பழிதீர்த்துக் கொண்ட துறையூரில், 9ம் வகுப்போடு படிப்பை நிறுத்தி ஒரு டெய்லரிடம் வேலை செய்யும் அருளானந்தம்(15) என்ற சிறுவனிடம் பேச்சுக் கொடுத்தோம்.


"நடக்ககூடாது. நடக்கிறது நல்லதில்லே; நல்லதுதான் நடக்கணும்" என்று நிறுத்தி நிதானமாக ஞானியைப் போல் அந்த பாலகன் மொழிந்தான். செல்வி, அருளானந்தம் போன்றவர்களின் பேச்சுக்கு இந்த சமுதாயம் மதிப்பளிக்க மறந்தால், வல்லநாடு தி.மு.க. பிரமுகரும் முன்னாள் வருவாய் அலுவலருமான தர்மராஜ்(56) சொன்னதுபோல் "தமிழ்நாடு ஒரு பஞ்சாப் மாநிலமாகவோ, ஒரு காஷ்மீராகவோ மாறும் நிலை வரலாம்."

அந்த அபாயத்தை யாரால் தடுத்து நிறுத்த முடியும்? எந்த ஜாதி வேட்பாளரை நிறுத்தினால் அதிக வோட்டுகள் கிடைக்கும் என்று கணக்குப் போட்டுப் பார்க்கும் அரசியல்வாதிகளால் நிரந்தரத் தீர்வு காண முடியுமா? அரசியல் ஆதாயத்திற்காக அரசு நிர்வாகத்தைச் சீரழித்து, கிரிமினல்களுடன் கைகோர்த்துக் கொண்டு சட்டம் ஒழுங்கைச் சீர்குலைத்து வந்திருக்கும் இந்த அரசியல்வாதிகளின் கைகளில் பிரச்னையைத் தாரைவார்த்துவிட்டு இனி நடக்கப்போவதை வேடிக்கை பார்க்கப் போகிறோமா?

நிஜமாகவே சமூக நலனில் அக்கறையுள்ள சிந்தனையாளர்களும், எழுத்தாளர்களும், பொதுநல அமைப்பினரும், நேர்மையாளர்களும் திருநெல்வேலித் தீ தமிழகம் முழுவதும் பரவாமல் தடுக்க என்ன செய்யப்போகிறார்கள் என்பதைத்தான் தமிழகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

- மு. சிவலிங்கம், ந. ஆதித்தன்
'மீடியா சர்க்யூட்ஸ்' உதவியுடன்.

புகைப்படங்கள் : மீடியா சர்க்யூட்ஸ்



உள்ளே—வெளியே :

வெளியே :

ஒரு கறுப்பு குண்டு நாய் கலக்கிக் கொண்டிருந்தது. சுற்றிலும் போலீஸ்காரர்கள் அதற்குப் பாரா போலத் தொடர்ந்து வர, குப்பைத் தொட்டிகள், பூச் செடிகள், டெலிபோன் பூத், சாயா கடை பாய்லர் என்று இன்ச் இன்ச்சாக மோந்து பார்த்து, உறுமிப் போனது. சென்ற வாரம் தெற்கு தில்லி மார்க்கெட் ஒன்றில் குண்டு வெடித்தாலும் வெடித்தது, செமை பயந்திருக்கிறார்கள். ஒரு நிமிடம் பாத்ரூம் போய் வந்தாலும் மெட்டல் டிடெக்டரை வைத்துக் கொண்டு, தடவிப் பார்க்கிறார்கள்.

கும்பல் மிக அதிகம். பத்திரிகையாளர்களும் சிறப்பு அழைப்பாளர்களும் வெளிநாட்டு சினிமாக்காரர்களும் ஓஸி பாஸ் கிடைக்கப்பட்டவர்களுமாக, தொடக்க விழா நடந்த சிரிஃபோர்ட் வளாகம் கிட்டத்தட்ட கொத்தவால்சாவடி ஆகிவிட்டது.

அத்தனை பேரும் தொடக்க விழாவைப் பார்த்தே ஆகவேண்டும் என்று அடம்பிடிக்க, ஆடிட்டோரியம், "ஐயாகிட்ட எழுநூத்தம்பது சீட்தான் சாமி இருக்குது" என்று அறிவிக்க, திணறிப் போய், உடனே யார் தலையில் கை வைப்பது என்று பார்த்து, கடைசியில் பத்திரிகையாளர்கள் மேல் வைத்து விட்டார்கள்.

மொத்தம் வந்திருந்த சுமார் ஐந்நூறு பேனாக்காரர்களில் நூற்றி இருபது பேருக்குத்தான் அனுமதி என்று சொல்லி விட, அத்தனை பேரும் டென்ஷனாகி, புல்வெளியில் புலம்பல் அஷ்டோத்திரம் படிக்கத் தொடங்கி விட்டார்கள். அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றவர்கள், (எந்த அடிப்படையில் என்று இந்த நிமிஷம் வரை தெரியவில்லை) ஆஸ்கரே கிடைத்து விட்டாற்போல உடம்பெல்லாம் பல்லாகச் சிரித்துப் புல்லரிக்க, மற்றவர்கள் சட்டி சுட்டதடா சிவாஜி!

"அந்த நாய் மட்டும்தான் இன்விடேஷன் இல்லாம உள்ள போயிட்டு வருதுன்னு நினைக்கறேன்" – ஒரு சர்தார்ஜி காமெண்ட்.

தங்கபாலு வரைக்கும் சிபாரிசு பிடித்து வந்திருந்த ஜெஜெ டீவி யூனிட்டின் இரண்டு பேரையே அழவைத்து விட்டார்கள் என்றால் பார்த்துக் கொள்ளவும்.

உணவு சமாசாரத்தை ஒட்டுமொத்தமாகக் குத்தகை எடுத்திருந்த பெப்ஸிகாரர்கள் காட்டில் அடை மழை. எலும்பை உடைக்கும் குளிருக்கு இதமாக அவரவர் சூடு பானங்களாகவும் கோதுமையின் பல்வேறு கொதிக்கும் டிபன் வடிவங்களாகவும் இடைவிடாது தின்று தீர்த்துக் கொண்டிருந்தார்கள். வசதியாக, புல்வெளி நிறைய பெப்ஸி குடை பயிரிட்டு, சுற்றிலும் நாற்காலிகள். அதிலே அரட்டை அரங்கங்கள்.

"உங்கள் நாட்டு ஆண்கள் ஏன் இத்தனை வெட்கப்படுகிறீர்கள்?" என்று என்னைக் கேட்டார் ஒரு நார்வே பெண்மணி – தப்பு! குமரி...

"ஏர்போர்ட்டில், கிளியரன்ஸ் விவகாரங்களில் ரொம்ப ஒத்தாசை பண்ணிய ஒருத்தருக்கு, வெளியே வருகையில் நன்றி சொல்வதாக, கையைப் பிடித்து ஒரு முத்தம் கொடுத்தேன். வளைந்து, நெளிந்து, உடைந்தே போய் விட்டார் கிட்டத்தட்ட..."


வாஸ்தவம். ஆண்களை விட, பெண்களுக்கு நம் நாட்டில் 'தில்' ஜாஸ்திதான். பட்டுப் புடைவையும் அங்காளபரமேஸ்வரி போல வெகு பெரிய குங்குமப் பொட்டும் (தில்லியின் சமீப ஃபாஷன்) வைத்துக் கொண்டு முற்றிலும் மாறுபட்ட தோற்றமாக சிகரெட் பிடித்துக் கொண்டு அநேகர்! (பெண் இயக்குநர்களின் படங்கள் என்று தனியாக ஒரு செஷன் இந்தத் தரம் போட்டிருப்பதற்குக் கொதித்திருக்கிறார்கள், வந்திருந்த இந்த பெண்(ன்) வி.ஐ.பிக்கள்.

சர்வதேசம்

"எதுக்காக இதுல போயி அப்படிப் பிரிக்கணும்? ஸ்டுப்பிட்!")

உள்ளே :

தொடக்க விழாவுக்கு அழைக்கப்பட்ட அந்த நூற்றி இருபது ஜர்னலிஸ்டுகள் பட்டியலில் நாம் இல்லை. அம்புலிமாமா விக்கிரமன் போல் முயற்சியில் தளராமல் அங்கே இங்கே அலைந்து, கடைசியில் 'போனா போவுது' என்று தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபைத் தலைவர் வெங்கடேஸ்வரன் கடைக்கண் இறங்கி ஒரு பாஸ் (நைஸாக) கொடுக்க, உள்ளே போனால் – கும் இருட்டு! எது நாற்காலி, எது கால் என்று தெரியாமல் தட்டுத் தடவி உட்கார, (எல்லாம் செட்-அப்பாம்!) சரியாக ஐந்தரைக்கு ஸ்பாட் லைட் மட்டும் எரிந்து, மேலிருந்து ஜிகினா கொட்ட, பூச்



திணறல் திரைப்பட விழா-1996

திரையிடப்படவிருந்த சுமார் இருநூற்றைம்பது படங்களில், போட்டிக்கு வந்திருந்த பெண் இயக்குநர்களின் படங்களிலிருந்து மட்டும் சில கிளிப்பிங்

சாண்டி வேஷமெல்லாம் போட்டுக் கொண்டு சிலர் வந்து ஆடி ஆரம்பித்து வைத்தார்கள்.

பி.ஏ. சங்மா, மதன்லால் குரானா பேசின சமாசாரங்களெல்லாம் 11-ம் தேதி நியூஸ்பேப்பரில் படித்திருப்பீர்கள். இதைப் படித்திருக்க மாட்டீர்கள்.

சோப்ரா குத்துவிளக்கேற்ற மெல்லத் தவழ்ந்து மேடை ஏறி வர, அவருக்குப் போக வர இருட்டில் பாதை காட்டுகிறேன் பேர்வழி என்று ஃபோகஸ் லைட்டை திடீரென்று ஆன் பண்ணி, அவர் காலடியில் நகர்த்த ஆரம்பிக்க, திடீர் வெளிச்சம் சமாளிக்க மாட்டாமல் தடுமாறி விழவே போய் விட்டார்!

"திரைப்படத்துக்கா லைட்டிங் பண்ணுகிறார்கள்? திரைப்பட விழாவுக்குத்தானே?" என்றார் அருகிலிருந்த ஒரு தில்லி லாயர்.

போட்டுக் காட்டினார்கள். 'இந்திரா' வந்த போது ஒருவர், ஓடக்கார மாரிமுத்து'வை உற்சாகமாக இந்தியில் கூப்பிட ஆரம்பித்து விட்டார்!

தொடக்க விழாப் படமாக ஒரு சமீப சீனப் படம் காட்டப்பட்டதென்றாலும் அதற்கு முதல் நாளே வெளிநாட்டுப் படங்களைத் திரையிடத் தொடங்கி விட்டார்கள். (இந்தியன் பனோரமா, அதற்கும் முன்னதாகவே) பத்தாம் தேதி காலை லிஸ்பன் ஸ்டோரி என்ற ஒரு பிரான்ஸ் தேசப் படம் போட்ட போது நடந்த கூத்து இருக்கிறது பாருங்கள் –

வெயிட். இந்த வாரம் இடம் போதாது. அடுத்த வாரம் விரிவாக...

புதுதில்லியிலிருந்து : **கிச்சா**



வளர்ச்சியா..?

சென்னை தீவுத்திடல் பொருட்காட்சியில் முதல்வருக்கு பிரம்ம்ம்மாண்டமான கட்-அவுட் வைக்கப்பட்டிருக்கிறது. உயரத்தில் 'வளரும் தமிழகம்' என்று 'அர்த்தமாய்' எழுதியிருக்கிறார்கள். உண்மையிலேயே தமிழகம் வளர்ந்திருக்கிறதா? ஆட்டோ டிரைவர்கள், பூக்கடை பெண்கள் தொடங்கி பல தரப்பினரையும் அணுகிக் கேட்ட போது, பெரும்பாலானோர், "நீங்க தனியா வாங்க பேசலாம். பத்திரிகையில போடறதாயிருந்தா வேண்டாம்!" என்றார்கள். வெளிப்படையாய்ப் பேசிய சிலரது கருத்துக்கள் :


• பிரேமா விமல்ராஜ்

பிரேமா விமல்ராஜ் (குட்டெழுத்தாளர்) :

ரேஷன் கடையிலே மாசா மாசம் சர்க்கரையும் அரிசியும் பற்றாக்குறையில்லாமல் தருவதே பெரிய விஷயம். பஸ் சார்ஜையும் பால் விலையையும் இன்னும் கூட்டாமல் இருக்கணும். தமிழகம் தாழ்ந்தது போலவும் தெரியலை. வளர்ந்தது போலவும் தெரியலை.


• செல்வராஜ்

செல்வராஜ் (தனியார் நிறுவன ஊழியர்) :

ஆட்சி முடியப் போகும் நேரத்திலே கார் தொழிற்சாலைக்குக் கையெழுத்து போட்டிருக்காங்க. இதனாலே தமிழகம் வளர்ந்துடுமா? ஓட்டு போட்ட மக்கள் தாழ்ந்து கிடக்கறாங்க. ஆளும் கட்சிக்காரர்களும், அவங்களைச் சார்ந்தவர்களும் ஜோராய் வளர்ந்திருக்காங்க!



ராமமூர்த்தி (மளிகைக் கடை) :

கடையிலே தினம் புதுசு புதுசா எதாவது அறிமுக ... புதுசுன்னா ஜனங்களிடம் அட்ராக் ... கொடுத்து மார்க்




ஷன் இ... கெட்டுலே நிக்க கம்பெனி... ஆனால், பொது... இதெல்லாம் வளர்ச்சிதானே? ஆனால், பொது... போறாங்க. அப்புறம் சொல்லிட்டுப் பொருள் வாங்கிட்டுப் போறாங்க. அதனால பொது திருப்பித் தர முடியாமல் சிரமப்படறாங்க. அதனால பொது மக்களைப் பொறுத்தவரை தமிழகம் வளர்ந்திருக்குன்னு சொல்ல மாட்டேன்.



• ராமமூர்த்தி

சாமி (மருந்துக்கடை) :

எந்தத் துறையை எடுத்தாலும் அதிலே பின்வாங்காமல் எதையாவது செய்திருக்காங்க. போக்குவரத்துலே நல்ல வசதி - சாலைகளை எல்லாம் புதுப்பிச்சிருக்காங்க - காவல்துறை மிகவும் நவீனமாக்கப்பட்டிருக்கு. சமூக நலத் துறையிலே நல்ல திட்டம், இப்படி கண்ணுக்குத் தெரியாமல் நிறைய வளர்ச்சி நடந்திருக்கு.



• சாமி

சேர்மேன் துரை (கம்ப்யூட்டர் ஆபரேட்டர்) :

மத்திய அரசு கொண்டு வந்த சுயதொழில் திட்டம் (ஜவகர் ரோஜ்கர் யோஜனா) தமிழகத்தில் சரிவர செயல்படுத்தப்படலைன்னு மத்திய அமைச்சர் குறைகூறியிருப்பதே வீழ்ச்சிக்கு உதாரணம். வெறும் அடிக்கல் நாட்டப்படுவதோடு மாநில திட்டங்கள் முடிந்து வருகின்றன. கள்ளச் சாராயமும் வெடி மருந்தும் குடிசைத் தொழிலாய் வளர்ந்திருக்கு. கட்-அவுட்டின் உயரம் தவிர தமிழகத்துல வேறெதுவும் வளரவில்லை.



• துரை

கலா மோகனசுந்தரம் (குடும்பத் தலைவி) :

திட்டங்களை அறிவிக்கிறாங்க. ஆனா செயல்படுத்தறதில்லை. வேலை வாய்ப்பில் பெண்களுக்கு ஒதுக்கீடு, பிற்படுத்தப்பட்டோருக்கு பெறப்பட்ட சலுகை இதையெல்லாம் நடைமுறைப்படுத்தின மாதிரியே தெரியலை. விளையாட்டுத் துறையிலும், கோயில்கள் பராமரிப்பிலும் நிறைய அக்கறை எடுத்தாலும் அதனாலே மட்டும் தமிழகம் வளர்ந்தாச்சன்னு சொல்லிட முடியுமா!



• கலா மோகனசுந்தரம்

பேட்டி : அஷோக்

படங்கள் : கிருஷ்ணமூர்த்தி



15

மாயவ

போதைமருந்து! அவளுடைய கணவன் ஒரு 'ட்ரக் அடிக்ட்'!

போதை மருந்துகளைப் பற்றி, வெறும் பொழுதுபோக்காகப் படித்தவை அரைகுறையாக நினைவு வந்து அவளைக் கலங்க அடித்தன.

போதை மருந்துகளில் எத்தனையோ உண்டாமே! இவன் உட்கொள்வது அதில் எதுவாக இருக்கும்? எல்எஸ்டி மாத்திரை என்பார்களே? சாராஸ்ட் புகைப்பார்களாமே! தனக்குத் தானே குத்திக் கொள்ளும் ஊசி? 'ப்ரவுன் ஷுகர்'தான் விலை உயர்ந்தது. அது பழகிவிட்டால் விட முடியாது என்கிறார்களே!

இதில் எதற்கு அவன் அடிமையாகியிருக்கிறான்?

கலக்கமும், பரபரப்புமாக, 'மாஸ்டர் கீ' கொத்தை எடுத்து, அவன் அறையைத் திறந்து கொண்டு உள்ளே போய்த் தேடினாள். தேடும் பொருள் எப்படி இருக்கும் என்பது கூடத் தெரியாமல் தேடி அலுத்து விட்டு மீண்டும் வெளியே வந்தாள்.

எப்போதோ வாங்கி மிச்சமான சில மருந்து மாத்திரைகள் தவிர வேறு எதையும் காணவில்லை. சற்று நேரம் செய்வது அறியாமல் திகைத்து விட்டு, டெலிஃபோன் டைரக்டரியை எடுத்து, ஒரு புனர்வாழ்வு மையத்தோடு தொடர்பு கொண்டு பேசினாள்.

அவர்கள் சொன்ன சில விவரங்கள் அவளை மேலும் கலங்க அடித்தன.

போதைப் பழக்கம் உள்ளவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்குப் பிறவிக் குறைகள் ஏற்படும் வாய்ப்பு ரொம்பவும் அதிகமாமே! அது தெரிந்துதான் மனைவியிடம் ஆசை இருந்தும் இல்லற உறவே வேண்டாம் என்று விலகி இருக்கிறானா?

'பாவம்!' என்று அவளது பூ மனம் கணவனிடம் பாகாக உருகிப் போயிற்று.

ஆனால், இவ்வளவு யோசிக்கிறவன், இதை விட முடியாது என்று பிடிவாதம் பிடிப்பது பகுத்தறிவுக்கு ஒத்துப் போகவில்லையே!

ஆனால் இந்தப் போதை மருந்துகளின்

மயங்குகின்ற நேரம்...

ரமணிசந்திரன்

வலிமை அப்படிப்பட்டது என்று புனர்வாழ்வு மையத்தினர் சொன்னது இன்னமும் அவளைக் கலங்க அடித்தது.

இல்லை. இனி சும்மா இருப்பது கூடாது. இப்போதே எந்த அளவுக்கு கிருஷ்ணசந்திரனின் உள்ளுறுப்புகள் பாதிக்கப்பட்டிருக்கின்றனவோ?

மீண்டும் உதயரேகா புனர்வாழ்வு மையத்தோடு தொடர்பு கொண்டாள்.

வீடு திரும்பிய கணவன் முகம் கழுவி உடை மாற்றி வர அவகாசம் அளித்து விட்டு, ஒரு போராட்டத்துக்குத் தன்னைத் திடப் படுத்திக் கொண்டு அவனை நாடிச் சென்றாள்.

அதற்குள்ளாக அறையை விட்டு, வெளியே வந்த கிருஷ்ணசந்திரன், "என் அறைக்குள் போனாயா? ஏன்?" என்று விசாரித்தான்.

லேசாக அண்ணாந்து, தன் அகன்ற விழிகளால் அவனை நேராகப் பார்த்தாள் உதய ரேகா.

"எனக்கு இப்போது புரிந்து விட்டது.... ஆனால் கோபம் இல்லை. வருத்தம் தான். எவ்வளவோ தெரிந்திருந்தும் நீங்கள் கூட இப்படி இருக்கலாமா என்று... அது வேதனையாக இருக்கிறது. வந்து... டி.டி.கே. புனர்வாழ்வு மையத்தில் போதைப் பழக்கத்தை அடியோடு நீக்கி விடுகிறார்களாமே! விசாரித்தேன். ஒரே ஒரு மாதம் தங்கியிருந்தால் போதுமாம். உடனே சேர்கிறீர்களா?" என்று இதமும் ஏக்கமுமாக வேண்டினாள்.

முதலில் புரியாமல் புருவம் சுருக்கி, யோசனையுடனேயே அவள் பேச்சைக் கவனித்தவனின் விழிகள் உடனே பளிச் சிட்டன. முறுவலை அடக்கியவாறே, "முட்டாள்!" என்றான் ஏளனமும் பரிவுமாக. "அங்கே சேர்வதாக ஏதாவது ஏற்பாடு செய்திருந்தால், அதை உடனே ரத்து செய்து விடு. ஏனெனில் அதற்குச் சற்றும் அவசியமில்லை!" என்றான் அவன் தீர்மானமாக.

ரத்து செய்வதா?

சற்று திகைத்து விட்டு "ஏன்?" என்று வினவினாள் உதயரேகா.

"அதுதான் சொன்னேனே, அவசியம் இல்லை என்று."

"அவசியம் இல்லையா, விருப்பம் இல்லையா?"

"அவசியம் இல்லாத போது, விருப்பு வெறுப்பு நோக்கும் அவசியமும் இல்லைதானே? ஆனால் ஒன்று, நான் இல்லாத போது மந்சாவியிட்டுத் திறந்து, என் அறையில் மற்றவர் உளவு பார்ப்பது நிச்சயமாக எனக்கு விருப்பமற்ற காரியம். தயவுசெய்து இந்த மாதிரி அத்து மீறல்களை இனி நீ செய்யாதே" என்று குரல் உயர்த்தாமலே, கண்டிப்பான குரலில் கூறிவிட்டுக் கிருஷ்ணசந்திரன் மீண்டும் அவனது அறைக்குச் செல்லத் திரும்பினான்.

"ஒரு விஷயம், அந்த மாத்திரைகளைத் தூர எறிந்து விடலாமே."

சட்டெனத் திரும்பி, "என்ன சொல்கிறாய்" என்றான் அவன் ஆத்திரத்துடன்.

அவனது சினத்தின் காரணம் புரியாமல், "எப்போதோ வாங்கிப் பயன்படுத்தியது போக மிச்சமான மாத்திரைகள் கொஞ்சம் பார்த்தேனே, அவற்றைத்தான் சொன்னேன். நோய் வந்தால், புதிதாக வாங்கிக் கொள்ளலாமில்லையா? இப்படி, மிஞ்சிப் போன பழைய மாத்திரைகளைச் சாப்பிடுவது நல்லதில்லை என்று கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று விளக்கினாள் அவன் மனைவி.

ஒரு பொறுமையிழந்த தலையசைப்புடன், "உதயரேகா, எனக்கு எது நல்லது, எது கெட்டது என்பது பற்றி எனக்கே தெரியும் என்று முன்பே சொல்லியிருக்கிறேன். இந்த மாதிரி இலவச ஆலோசனைகளை அள்ளி வழங்குவதை இனியேனும் தயவுசெய்து நிறுத்திக் கொள்" என்று அழுத்தமான குரலில் கூறி முடித்தான் கிருஷ்ணசந்திரன்.

"அதெப்..." என்று தொடங்கி விட்டு உடனேயே உதயரேகா வாயை மூடிக் கொண்டாள்.

இன்னுமொரு தரம் 'விவாகரத்து' என்றானால் அவளால் தாங்க முடியாது. என்னதான் பாராட்டி விருந்து கொடுத்தாலும் அவளுக்காக உருகினாலும் (அது அடுத்தவரிடம் என்றாலும் உருகியது உண்மைதானே?) அவளை நெருங்கவோ, நெருங்க விடவோ இல்லையே! எனவே அவன் என்ன சொல்வான், செய்வான் என்று எதையுமே உறுதியாய்ச் சொல்ல

முடியாதுதானே?

ஆயினும், சட்டபூர்வமாய்ப் பிரிந்து விடுவது மேல் என்று கிருஷ்ணசந்திரன் கூறிய புதில் இருந்தது போன்ற நிராசையும் தவிப்பும் இப்போது உதயரேகாவுக்கு இல்லை.

அவனிடம் அவளுக்கு அன்பு இருக்கிறது. அது ஏதோ ஒரு விசித்திரமான இனுக என்றாலும் அன்பு என்று ஒன்று இருப்பதே அவளுக்குக் கொஞ்சம் நிம்மதியாகத்தான் இருந்தது.

அவளைப் பொறுத்தவரையில், கணவனைப் பாராமல் ஒரு நாள் கூட அவளால் இருக்க முடியாது என்ற முடிவுக்கு அவள் ஏற்கெனவே வந்திருந்தாள்.

இந்த வீட்டில் எங்கிருந்தோ கிருஷ்ணசந்திரனின் குரலைக் கேட்டாலே அவளுக்குத் திருப்திதான். காலையில் எழுந்து ஜன்னலைத் திறந்து பார்க்கும் போது தோட்டத்தில் அவன் 'ஜாக்' செய்வதைக் கண்ணால் பார்த்து விட்டால் அன்று முழுநாளும் அவளுக்குக் குதூகலமான நாளே!

இந்த அளவுக்கு, உதயரேகா ஒருவனிடம் பைத்தியமாகி விடக்கூடும் என்று சில மாதங்களுக்கு முன் அவளிடம் யாரேனும் சொல்லியிருந்தால், அவர்களை அவள் எள்ளி நகையாடியிருப்பாள்!

திருமணமானதிலிருந்து இதே நிலையிலேயே தொடர்ந்து வாழ்ந்து கொண்டு இருந்திருந்தால் ஒருவேளை, அவள் மனதில் அதிருப்தியும் அலைபாய்தலும் தோன்றியிருக்கலாம். அது அதிகரித்தும் இருக்கலாம். ஆனால் கணவன் அன்று வெடித்த 'விவாகரத்து' குண்டுக்குப் பிறகு, இதுவே நிலைக்காதோ என்ற பயமும் இதுவேனும் நிலைக்க வேண்டுமே என்ற ஏக்கமும் சேர்ந்து கொள்ள, இருப்பது நிலைப்பதே பெரிதாகத் தோன்றத் தொடங்கி விட்டது.

அதுதான், 'சம்திங் இஸ் பெட்டர் தன் நத்திங்', 'ஒன்றுமில்லாததற்கு அரை ரொட்டி மேல்', 'முழுப் பட்டினி கிடப்பதற்குக் கால் வயிற்றுக் கஞ்சி கிடைத்தால் போதாதா?' என்று சொல்லி, எந்தக் கசப்பையும் இனிப் பாக்கிக் கொள்ள, நம்மிடையே எத்தனையோ பழமொழிகள் இருக்கின்றனவே. இன்னமும் தாழ்த்தாலும் கூடப் 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து', 'நம்மிலும் கேடு நாட்டிலே கோடி' என்று சொல்லித் திருப்தியடைந்து விட வேண்டியதுதான்.

ஏதோ ஒரு வகையில், கணவன் மனைவி இருவருக்குமே அன்றைய நடப்பே திருப்தியாக இருந்தது போலும். யாரும், எதையும் மாற்றுவதற்கு முயற்சி எடுக்காமல், அப்படியே வாழ்க்கை தொடர்ந்தது.

ஊடே, உதயரேகாவுடைய குடும்பம் புது டெல்லிக்குக் குடிபெயர்வது உறுதியாயிற்று. தலைநகருக்குச் செல்வது குறித்து இளைய பிள்ளைகள் இருவருக்கும் உற்சாகமே. அக்காவை மட்டும் விட்டுப் போகிறோமே என்று அவ்வப்போது வருந்தினாலும், அடிக்கடி டெல்லிக்கு வர வேண்டும் என்று தமக்கையிடம் உறுதிமொழி பெற்றுக் கொண்டபின், டெல்லி வாழ்வை ஆர்வமாகவே திட்டமிட்டார்கள்.

பிள்ளைகள் இருவரையும், தெற்கே நாகர்கோவிலின் அருகே இருந்த ஒரு கிராமத்தில் யசோதாவுடைய பெற்றோரிடம் விட்டு விட்டு உலகநாதனும் யசோதாவும் சிங்கப்பூர் செல்வதாகவும், அங்கிருந்து திரும்பி வந்ததுமே எல்லோருமாய் டெல்லிக்குப் பயணப்படுவதாகவும் ஏற்பாடாயிற்று.

எடுத்துச் செல்ல வேண்டிய சாமான்கள், கழிக்க வேண்டிய பொருட்கள் பிரித்தார்கள். தேவையானவற்றைக் கொண்டு செல்லவாகாக மூட்டை கட்டினார்கள். கூடவே வெளிநாட்டுப் பயணத்திற்கான வேலைகளையும் பார்த்தார்கள்.

உதயரேகாவும், தன் வழக்கமான முழு ஈடுபாட்டுடன் யசோதாவுக்கு உதவினாள். ஒரு வகையில், இது அவளுக்கே உதவியாக அவளது சொந்தப் பிரச்னைகளில் உழல நேரமில்லாது போயிற்று.

இடையிடையே சில சிறு காயங்களும் ஏற்படாமல் இல்லை.

சிங்கப்பூரில் வாங்க வேண்டிய பொருட்கள் பற்றிப் பேசுகையில், 'உதிக்கு ஒரு 'ஹான்புகாம்' வாங்க வேண்டும்' என்றாள் யசோதா. "நாளைக்கு அவளுக்குப் பிள்ளை பிறந்ததும் பிள்ளையின் ஒவ்வோர் அசைவுகளையும் வீடியோவில் அவ்வப்போது அவளே பதிவுசெய்து வைக்க வசதியாக இருக்கும்" என்று அவள் இயல்பாய்க் கூறி விட, உதயரேகாவுக்கு வெகு நேரம் உள்ளே வலித்துக் கொண்டே இருந்தது.

தந்தையும் தாயும் இயல்பாக ஒருவரை ஒருவர் கேலி செய்து கொள்வதையும், ஒட்டுதலாகப் பழகுவதையும் பார்க்கும் போதும் கூட, உதயாவுக்கு ஏக்கம் தலைநீட்டத்தான் செய்தது. அவளது அன்றாட வாழ்வில் இதற்கெல்லாம் இடமே இல்லையே!

அன்று நள்ளிரவில், தந்தையையும் சிற்றன்னையையும் கையாட்டி வழியனுப்பி விட்டுத் திரும்பி வீடு வந்து சேர்ந்த உதயரேகா படுக்கையில் விழுந்த போது கிட்டத்தட்ட இரவு இரண்டு மணியாகி விட்டது.

அப்போதும் உறக்கம் பிடிக்காமல் வெகு நேரம் படுக்கையில் புரண்டு கொண்டிருந்து விட்டு, எங்கோ மெல்லியதாகத் தொடர்ந்து ஒலித்த டெலிஃபோன் மணியைக் கேட்டு விட்டு, ஒருவாறு அவள் கண்ணயர்ந்த போது

நடராஜ் சிட்ஸ் (தமிழ்நாடு) பிரைவேட் லிமிடெட்

நடராஜ் ஃபைனான்ஸ் & இன்வெஸ்ட்மென்ட்ஸ்,
நடராஜ் எஸ்டேட்ஸ் - (பண்ணை நிலம்).
"சாந்தி காம்ப்ளெக்ஸ்", 3வது மாடி, 26, ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை-600 017.

வட்டி 24% P.A.   பரிசு 4% + 1% பென்ஷனர்

கிளைகள் : "இதயம் காம்ப்ளெக்ஸ்", 51- தெற்கு வீதி, (மாடி), திருவாரூர் - 610 002.
2-B - செல்வம் நகர், மெடிகல் காலேஜ் சாலை, தஞ்சாவூர் - 613 007.
1-B - காமராஜர் சாலை, (மாடி), காஞ்சிபுரம் - 631 501.

Phone : 434 20 98, 484 01 50



" சிறிய தொழில் ஒன்று ஆரம்பிக்க படாத பாடுபட்டேன். வங்கிகளில் எல்லாம் முயற்சித்துப் பார்த்தேன். ஆனால் நடராஜ் சிட்ஸ் நிறுவனத்தில் சந்தாதாரராகி, சீட்டு எடுத்து தற்பொழுது தொழில் முனைவராக ஆகி உள்ளேன்".

—கீதா கிருஷ்ணாநந்தன்


நடராஜ் சிட்ஸ்
அளிக்கும்
மிகப்பெரிய பரிசு திட்டம் 1996
விரைவில் எதிர்பாருங்கள்

".சிட் பண்ட் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட ரூ. 5,000, ரூ. 10,000, ரூ. 15,000, ரூ. 25,000 சீட்டு குரூப்புகள் நடைமுறையில் உள்ளன. மேலும் புதிய பெரிய குரூப்புகள் ஆரம்பமாக இருக்கின்றன".

சீட்டில் சேர்கிறவர்களுக்கும்
அறிமுகப்படுத்துகிறவர்களுக்கும் பரிசு பொருட்கள்
காத்திருக்கின்றன.

☐ உங்கள் வாராந்திர விடுமுறை நாட்களை, மகிழ்ச்சியுடனும், நிம்மதியுடனும் கழிப்பதற்கு அமைதியான, அழகான சூழ்நிலை

☐ சென்னை - பெங்களூர் நெடுஞ்சாலையில் காஞ்சீபுரத்துக்கு அருகே - பஸ்ரூட்டில் தயாராகிறது ஏமாற்றத்தை தவிர்க்க இன்றே முன்பணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளுங்கள்.





Approved by : Indian Medicine Govt. of A.P.
Regd no. R/850/AYUR)

Dr. T.P. நாயுடு, B.A.M.S., & குழுவினரின் மேற்பார்வையில்

மூச்சுத் திணறல் (ஆஸ்த்மா), ஆயுர்வேத நிவாரண உப்பச வியாதியஸ்தர்களுக்கு

லக்ஷ்மி பார்மாசூட்டிகல்ஸ் நிறுவனத்தினரால் தயாரிக்கப்பட்ட




ஹைதராபாத் மீன் மருந்து

ஆந்திர மாநிலத்தில் 30 வருடங்களாக புகழ்பெற்ற தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, ஒரிஸா மாநிலங்களில் மூச்சுத் திணறல் (ஆஸ்த்மா) வியாதியஸ்தர்கள் இடத்தில் புகழ்பெற்ற லக்ஷ்மிபார்மாசூட்டிகல்ஸ் மருத்துவ உதவியாளர்கள் இந்த மருந்தினை விநியோகிக்க வருகிறார்கள்.



முகாமிடும் இடம்	போன் நம்பர்	தேதி
உர்வசி லாட்ஜ்	8281430	17.1.96
6, ராஜாபாதர் தெரு,	8281362	18.1.96
தியாகராய நகர்	8283805	19.1.96
சென்னை - 17.	8252108	20.1.96



முகாமிடும் இடம்	போன் நம்பர்	தேதி
மோகன் லாட்ஜ், 8, மெமோரியல் ஹால், பார்க் டவுன், சென்னை – 3. (சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன் அருகில்)	563394	17.1.96 18.1.96 19.1.96 20.1.96

மேலே குறிப்பிட்டுள்ள இடத்தில் காலை 8.00 மணி முதல் மாலை 8 மணி வரை சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மருத்துவரின் யோசனைப்படி வியாதி அதிகமுள்ளவர்களுக்கு தனிப்பட்ட மருந்து (Special) 3, 4 அல்லது 6 மாதங்களுக்கு வழங்கப்படும்.

குறிப்பு : எங்கள் போக்குவரத்து செலவுகள், மீன் மருந்து செலவுகளை லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப் மற்றும் பிரஜா சேவை செய்பவர்கள் யாரானாலும் ஏற்றுக் கொண்டால் நாங்கள் வியாதியஸ்தர்களுக்கு சேவை செய்ய காத்திருக்கிறோம்.



"பணம் ஒரு பெரிய விஷயம் அல்ல!"

சுமார் 67 லட்ச ரூபாயைப் பட்டப் பகலில் பறிகொடுத்து விட்ட சரவணா ஸ்டோர்ஸ் அதிபர் எஸ். செல்வரத்தினத்தின் மனோநிலை எப்படி இருந்திருக்கும்?

"இப்படி நடக்கும் என்று யார் எதிர்பார்க்க முடியும்? இவ்வளவு பெரும் தொகையை வங்கியில் கட்ட எடுத்துச் செல்லும் போது ஆயுதம் தாங்கிய காவலாளியை உடன் அனுப்பினாலும் பயனில்லை. ஆயுதம் வைத்திருப்பதற்கான லைசன்ஸ்படி பழைய மாடல் துப்பாக்கி ஒன்றைத்தான் வைத்துக் கொள்ள முடியும். இந்த நிலையில் வருகிற திருடர்கள் ஏ.கே. 47 வைத்திருந்தால் என்ன செய்ய முடியும்?

"இன்றைய வியாபாரச் சூழலில் பணம் ஒரு பெரிய விஷயமே அல்ல. ஆபத்துக் காப்பீடு (Risk Insurance) செய்திருப்பதால் திருடியவர்களைப் பிடிக்க முடியாமலேயே போய்விட்டாலும் பாதியாவது காப்பீட்டில் கிடைத்து விடும். எனவே அது பற்றி நான் அதிகம் கவலைப்படவில்லை. ஒரு வேளை எனது நிறுவனத்தில் வேலை பார்க்கும் எனது நம்பிக்கைக்குரிய ஊழியர்களே ஏதாவது நம்பிக்கை மோசடி செய்திருந்தால்தான் நான் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பேன்!" என்கிறார் அமைதியாக.

சந்திப்பு : ஸ்ரீநிவாசன்

அவளது அறைக் கதவு தட்டப்பட்டது.

"உதி..." என்று கிருஷ்ணசந்திரன் அழைப்பது கேட்கவும், இது கனவுதான் என்று அவள் திரும்பிப் படுத்துத் தூக்கத்தைத் தொடரலானாள். அவனாவது, 'உதி' என்று அவளை நேரடியாக அழைப்பதாவது?

ஆனால், மீண்டும் கதவைத் தட்டியதோடு, "உதிம்மா, நான்தான்" என்றதோடு கதவுக் குமிழைத் திருப்பிக் கதவைத் திறக்கும் ஒலியும் நிஜம் போலத் தெளிவாகக் கேட்கவும், சிரமத்துடன் இமைகளை நன்றாகப் பிரித்துப் பார்த்தால், மெய்யாகவே கிருஷ்ணசந்திரன்தான்! கதவைத் திறந்து கொண்டு அறையினுள் வந்து கொண்டிருந்தது அவன்தான் என்பது அறைக்கு வெளியே இருந்து வந்த வெளிச்சத்தில் நன்றாகவே தெரிந்தது.

புரியாத திகைப்புடன் அவள் எழுகையிலேயே, அவன் விளக்கு ஸ்விட்சைத் தட்டி விட்டு அவள் அருகே வந்தான்.

தன் அருமைக் கணவன், இந்த அதிகாலை நேரத்தில், காதல் மீறித் தன்னைக் கலந்தணைய வரக்கூடும் என்று அவளுக்குச் சற்றும் நம்பத் தோன்றவில்லை. எனவே உள்ளூரக் கலக்கத்துடன் அவன் முகத்தை உற்றுநோக்கியவள், அங்கிருந்த எல்லையற்ற பச்சாதாபத்தைக் காணவும், மேலும் கலவரமடைந்தாள்.

"எ... என்னது? யாருக்கு என்ன..." என்று தடுமாறியவள், தானாகவே ஊகித்து, "அப்பா... சித்தி... விமானம்! அய்யோ, என்ன ஆயிற்று?" என்று பதறியபடி எழுந்தாள்.

அதற்குள் அருகில் வந்து விட்ட கிருஷ்ண சந்திரன், மனைவியின் கைகளைப் பற்றி, லேசாக அழுத்தி, "முழுக் கெடுதலான செய்தி எதுவும் வந்து விடவில்லை, உதி. நீ இப்போது, தைரியத்தோடு இருக்க வேண்டும்" என்றான்.

தைரியமா? எதற்குத் தைரியம்? ஏன்?

நடுங்கத் தொடங்கி விட்ட கீழுதட்டைப் பற்களால் அழுத்தி சமாளிக்க முயன்றவள், முடியாமல், "எ... என்ன ஆயிற்று? சீக்கிரம் சொல்லுங்களேன்..." என்று குரல் நடுங்கக் கேட்டாள்.

மனைவியின் தோளை ஒருகையால் லேசாக அணைத்து, "சென்னையிலிருந்து கிளம்பிய ஒரு மணி நேரத்திற்குப் பிறகு விமானத்துடன் தொடர்பு அறுந்து போய் விட்டதாம். தொடர்பு கெடுமுன்..." என்று கிருஷ்ண சந்திரன் சற்று தயங்கினான்.

அவளது பைஜாமா 'டாப்'பின் காலரை இரு கைகளாலும் இறுகப் பற்றி, "தொடர்பு கெடுமுன்? கெடுமுன் என்ன நடந்தது? ஐயோ! அப்புறம் என்ன நடந்தது? என்று சொல்லுங்களேன்" என்று பதற்றப்பட்டாள் உதயரேகா.

"ஒரு... ஒரு சிறு வெடிச் சத்தமும், 'மேடே' அழைப்பும் கேட்டதாம்..." என்று அவன் கூறி முடிக்குமுன், "சித்தி!" என்று உதயரேகா வீறிட்டாள்.

"சித்தி, அப்பா, சித்தி அய்யோ" என்று கதறியவளை, இறுக அணைத்தபடி, கிருஷ்ண சந்திரன் சற்று நேரம் அசையாமல் நின்றான்.

அவளது கதறல் சற்றே மட்டுப்படும் வரை, மனைவியின் தலையையும், முதுகையும் வருடியபடி பேசாமலே நின்று விட்டு, அவளது காதை ஒட்டி, "இப்படி அழலாமா? ஒன்றும் ஆகியிருக்காது. ஷ், உதி. என்ன இது? முழுக் கெடுதலாகவும் செய்தி எதுவும் வரவில்லை என்றேனில்லையா? மறந்து விட்டதா? 'மேடே' என்ற உடனேயே இங்கிருந்து தேடுவதற்கு ஹெலிகாப்டர்கள் அனுப்பி விட்டார்கள். சீக்கிரம் விமானத்தைக் கண்டுபிடித்து விடுவார்கள்" என்றான் அவன் மெதுவாக, ஆனால்

தெளிவாக.

"ஆனால்... ஆனால் நடுக்கடலில்..." என்று கேவினாள் அவள். "வெடிவெடிச் சத்தம் வேறு..."

"அதுதான் நம்பிக்கையே" என்றான் அவன் அழுத்தத்தோடு. "மேடே செய்தி வந்ததுமே, அந்தப் பக்கம் கடலில் செல்லும் கப்பல்கள், பெரிய மீன்பிடி 'ட்ரால'ர்கள் எல்லாவற்றுடனும் தொடர்பு கொண்டு விசாரித்திருக்கிறார்கள். விமானம் வெடித்துச் சிதறுவது என்றால் வானத்தில் பெரிய வெளிச்சம் பல கிலோ மீட்டர் தூரத்துக்குத் தெரிந்திருக்கும். வெடிச்சத்தமும் பேரோசையாக வெகுதூரம் கேட்டிருக்கும். அதெல்லாம் இல்லை என்கிற போது நம்பிக்கைக்கும் இடம் இருக்கிறதல்லவா?"

இவையெல்லாம் சின்னச் சின்ன சமாதானங்கள். கடைசி வரை நம்பிக்கையை இழக்க விரும்பாத மனதின் கண்டுபிடிப்புகள். பேரோசையோடு வெடித்துச் சிதறித்தான் ஆக வேண்டும் என்பது இல்லை. இஞ்சின் பகுதி பழுதடைந்து போனால், ஒளியின்றி, ஓசையின்றி விமானம் கடலில் மூழ்கும் வாய்ப்பும் உண்டுதான்.

இது இருவருமே அறிந்ததுதான்.

"ஆனால் தொடர்பே இல்லையே! எந்த வகைத் தகவலும் இல்லை என்கிறீர்களே?" என்று இமைதட்டாமல் அவன் முகத்தையே அண்ணாந்து நோக்கி, தீனமான குரலில் கேட்டாள் உதயரேகா.

முழுவதாகப் பொய்யுரைக்க முடியாமல், "ஏதாவது" ஷார்ட் சர்க்யூட் ஆகி, ரேடியோ தொடர்பு பழுதாகியிருக்கும் என்பதுதான் என் அனுமானம். விமானத்தில் இருக்கும் ரேடியோ இஞ்சினியரே அனேகமாக அதைச் சரிசெய்து, விரைவிலேயே தகவல் தருவார்கள் என்று நினைக்கிறேன்..." என்றான் கிருஷ்ணசந்திரன்.

சற்று யோசித்து விட்டு, "உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று உதயரேகா வினவினாள்.

வினாடி நேரம் தயங்கி விட்டு, "விமான நிலையத்திலிருந்து சொன்னார்கள்..." என்றான் அவன் சுருக்கமாக.

அவன் எதிர்பார்த்தது போலவே உதயாவின் உடல் விறைப்புற்றது. நம்பிக்கையிழந்த நிலையில்தான் இதுபோன்ற தகவல்களை உற்றாருக்குத் தெரிவிப்பது உண்டு. தூங்கும் போது எங்கோ அடிப்பதாக அவள் நினைத்த டெலிஃபோன் மணி அவர்கள் வீட்டினதுதான். அப்போதுதான் சொல்லியிருக்கிறார்கள்."

"உதி, விமான நிலையத்தில் எனக்கு வேண்டியவர் ஒருவர் இருக்கிறார். விமானத்தைத் தேடுகிற விவரத்தை எல்லாம் அவரிடம்தான் கேட்டு வந்தேன். வா. இப்போதும் அவரிடமே மேற்கொண்டு என்ன ஆயிற்று என்று விசாரிக்கலாம்."


மனைவியைத் தன் கூடவே நடத்திச் சென்று, அருகிலேயே அமரவைத்துக் கொண்டு, கிருஷ்ணசந்திரன் கேட்ட கேள்விகளுக்கு, அந்த நண்பரால் புதிய பதில் ஏதும் தர முடியவில்லை.

சற்று நேரம் தைரியமாய் இருப்பது போலக் காட்டிக் கொண்ட உதயரேகா, அதிக நேரம் தாக்குப்பிடிக்க முடியாமல், மீண்டும் பதறிக் கதறத் தொடங்கி விட்டாள்.

முதலில் தம்பி தங்கையை நினைத்து, என்னமும் ஆகிவிட்டால் எப்படித் தாங்குவார்கள் என்று கலங்கினாள். "பானுவுக்குத் தினமும் நடப்பதை எல்லாம் சித்தியிடம் கொட்டியாக வேண்டும். இப்படியா அப்படியா என்று தலை வாருவதில் இருந்து எல்லாவற்றுக்கும் சித்தி தான் முடிவு சொல்லியாக வேண்டும். அவள் இனி என்ன செய்வாள்? சூரியாவுக்கு அவ்வப்போது ஊறுகாய் தொட்டுக் கொள்வது மாதிரி, சித்தி முதுகில் உரசி விட்டுப் போவான். அப்பா கூட, 'எருமை மாடு மரத்தில் உரசுகிற மாதிரி' என்று கேலி செய்வார். இனிமேல்... ஐயோ என்னால் சித்தியைப் பார்க்காமல் இருக்கவே முடியாது. ஐயோம்மா! என்னால் முடியவே முடியாதே!" என்று புலம்பிக் கண்ணீர் வடித்த மனைவியை மார்பில் சாத்திக் கொண்டு தன்னால் இயன்ற வரை ஆறுதல் அளிக்க முயன்றான் கிருஷ்ணசந்திரன்.

அன்று வரை அவளை எட்ட நிறுத்தி, அவளை நெருங்க அவள் செய்த முயற்சிகளைச் சற்றும் இளக்கமின்றிப் பார்த்திருந்ததெல்லாம் மறந்து விட, அவளது வேதனையை அடியோடு தீர்க்க முடியாவிட்டாலும், சிறிதேனும் குறைக்கும் மார்க்கமாக, அவளை அணைத்துக் கொண்டு அப்படியே அமர்ந்திருந்தான்.

(தொடரும்)



"வீரப்பனை நானே தனி ஆளா நின்னு அரெஸ்ட் பண்ணிட்ட மாதிரி கனவு ஏட்டய்யா...!"

"கனவுதானே, அதுக்குப் போயி ஏன் இப்படி பயந்து சாகறே...?"

"என்னை சஸ்பெண்ட் பண்ணிடுவாங்களோன்னு பயமா இருக்கு ஏட்டய்யா...!"

– கே.ஜி.எஸ். கோவிந்தன்

"ஸே இட் வித் சூட்கேஸஸ்!"

✉ 'அன்பளிப்பாக ஓர் ஆரோக்கிய வாழ்க்கை' பகுதி அனைவரும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய பகுதி. இதழோ பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று.
கரடிகொல்லப்பட்டி,
கே. எம். ஸ்வீட்முருகன்.

✉ 'அன்பளிப்பு ஸ்பெஷல்' கண்டேன். அன்பளிப்பு என்றால் எங்கே, எப்படி, எவ்வளவு? தெளிவு, கனிவு என்ன? பெரிசா சூட்கேஸ் குடுக்கறது, வாங்கறது... இப்படியெல்லாம் விலாவாரியா புட்டுப் புட்டு வைக்கப் போறீங்களாக்கும்னு நினைச்சா, கடைசில, காதல் பரிசு, அப்படி இப்படின்னு சொதப்பிட்டீங்களே!
பெரம்பலூர், செ. சக்திராஜ்.

✉ பூக்களை நண்பர்களுக்கும் உறவினருக்கும் அளிக்கலாமே தவிர அரசியல்வாதிகளுக்கு அளிக்க முடியாது. "ஸே இட் வித் ஃப்ளவர்ஸ்" என்பதை "ஸே இட் வித் சூட்கேஸ்" என்று மாற்றிவிட்டார்கள்.
தஞ்சாவூர், வளர்மதி ஆசைத்தம்பி.

✉ 'அவரே எனக்குப் பரிசுதான்' என்னும் சாவித்திரி 'யோகா'வின் முத்தாய்ப்பான வார்த்தையை எல்லா மனைவிமார்களும் கூறி விட்டால் குடும்பத்தின் குதூகலத்தைச் சொல்லவும் வேண்டுமோ!
நாகணம்பட்டி,
கப. அண்ணாமலை.

✉ 'நேர்மை, நாணயம் மனப்பூர்வமான ஈடுபாடு ஆகியவற்றால் விளையும் ஆன்மபலம் இல்லாத அரசாங்கம் இலேசாக ஒரு தட்டுத் தட்டினாலே விழுந்துவிடும். இவைகளால் நாட்டுக்கு என்ன பாதுகாப்பு அளித்து விட முடியும்?' தலையங்கம் அல்ல; தலைமைக்கே ஒரு விளக்கம் அளித்துள்ளீர்கள்.
விருதுநகர், இரா. சந்திரசேகரன்.

✉ 'பரிசு' சிறுகதையில், கார் டிரைவரின் ஐந்து வயது மகன் அன்போடு நீட்டிய போன வருடத்து டைரி உள்ளத்தைத் தொட்டு விட்டது!
சிறுமுகை, ஜி. கதிரேசன்.

✉ "அதிமுகவுடன் ரகசிய உடன்பாடா?" வாழப்பாடியாரின் பேட்டி "மினி"யாக இருந்தாலும் ரொம்ப சூடாக இருந்தது.
திருவண்ணாமலை, என். சண்முகம்.

✉ சம்பிரதாயமாக 'தூள் ஸார்', 'சூப்பர் ஸார்' என்று சொல்லி வருபவரையும் கொஞ்சம் ஆழமாய் ஊன்றிப் படிக்க வைக்கும் வாசகர்களின் சிறுகதைத் தேர்வு அறிவிப்பை வரவேற்கிறோம்.
சென்னை, அரிச்சந்திரன்.


✉ கூடு விட்டுக் கூடு பாயும் கலை என ஒன்று பழங்காலத்தில் இருந்ததாகக் கேள்விப்பட்டதுண்டு. ஆனால் உடல் அவயங்களை மற்றவர்களுக்குப் பொருத்தி வெற்றி கண்ட மருத்துவர் குழு, மனித குலத்திற்கு ஆற்றிய மகத்தான சாதனை பிரமிக்க வைக்கிறது.
மேட்டுப்பாளையம், பி.ஏ. வஹாத்.

✉ வேலை கிடைத்து, சென்னையில் வாடகை வீடு தேடி அலையும் இளைஞர்களுக்கு, 'கவர்ச்சி' சிறுகதை, சரியான எச்சரிக்கை என்றே சொல்ல வேண்டும்.
கும்பகோணம், எஸ்.கே. மூர்த்தி.

✉ 'யோகி'யின் 'சாத்தியமில்லாத உறவுகள்' சிறுகதை காதலியின் உயர்வுக்கு உதவியாகக் காதலன் இருக்க வேண்டியதை, அற்புதமாக உணர்த்தியது. நட்சத்திர எண்ணிக்கையில் நன்றிகள்!
பேர்ணாம்பட்டு, மெக்டர் மஹ்ர் ரஹ்மான்.

ரூ. 20 பரிசு பெறும் கடிதம் :

✉ காவிரிப் பிரச்னை என்பது அரசியல் கட்சிகளுக்குக் கால் பந்து போல் உள்ளது. கர்நாடக முதல்வர் கூட்டும் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு வீரப்ப மொய்லி, பங்காரப்பா, எடியூரப்பா போன்ற தலைவர்கள் - தேவேகௌடாவை முழுமூச்சாக எதிர்ப்பவர்கள் இவர்கள் - கலந்து கொள்கிறார்கள். சமீபத்தில் ராஜினாமா செய்த மத்திய அமைச்சர் ஷெரீபும் கலந்துகொண்டு முதல்வருக்கு ஆலோசனையும் கர்நாடக மக்களின் எதிர்பார்ப்பையும் கூறுகிறார். ஆனால் தமிழ்நாட்டில் முதல்வர் கூட்டும் அனைத்துக் கட்சி கூட்டத்திற்குத் தலைவர்கள் கலந்து கொள்ளாமல், முக்கிய கட்சிகள் தங்கள் பிரதிநிதிகளை மட்டுமே அனுப்புகிறது. அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம் என்பதற்குப் பதில் அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறுகிறது. இதுதான் தமிழ்நாட்டின் இன்றைய நிலை. பிரதமரை சந்திக்க முதல்வர் ஜெயலலிதாவுடன் தமிழ்நாட்டின் முக்கிய கட்சிகளின் தலைவர்கள் ஒன்று கூடிச் சென்று இருந்தால் நிலைமையே வேறாக இருக்காதா?
வடக்குப்பனையூர், ஆர். ஜெயச்சந்திரன்.



"எனது சேமிப்புகளில்
மிகவும் பிடித்தமானது
'ட்வெண்டி:ஃபர்ஸ்ட் செஞ்சுரி'
ஃபேமிலி டெபாஸிட்."

"என் பேரக்குழந்தைகளுக்கு நான்
அளிக்கும் பிறந்தநாள் பரிசுகளில்
'ட்வெண்டி:ஃபர்ஸ்ட் செஞ்சுரி'
ஃபேமிலி டெபாஸிட்டை சிறந்ததாகக்
கருதுகிறேன்."



"பாட்டி கொடுத்த பிறந்தநாள்
பரிசான 'ட்வெண்டி:ஃபர்ஸ்ட் செஞ்சுரி'
ஃபேமிலி டெபாஸிட்டிலிருந்து நான்
சேமிக்க கற்றுக் கொண்டேன்"



"அப்பா செய்திருக்கும் 'ட்வெண்டி:ஃபர்ஸ்ட்
செஞ்சுரி' ஃபேமிலி டெபாஸிட்,
எதிர்காலத்தில் எனது மேற்படிப்பிற்கு
நிச்சயமாக உதவும்."



"நான் பல விதங்களில் முதலீடு செய்தாலும்
அதற்கு 'ட்வெண்டி:ஃபர்ஸ்ட் செஞ்சுரி'
ஃபேமிலி டெபாஸிட் தான்
முன்னோடியா இருக்கிறது."



"வீட்டுச் செலவிற்கு என ஒதுக்கப்படும்
பணத்தில் ஒரு சிறு பகுதியை நானும்
'ட்வெண்டி:ஃபர்ஸ்ட் செஞ்சுரி' ஃபேமிலி
டெபாஸிட்டில் முதலீடு செய்கிறேன்."



CRISIL
FA+

ட்வெண்டி ஃபர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மெண்ட் சர்வீஸஸ் லிமிடெட்

"ஸ்ரீவித்யா" 32, டி.டி.கே. சாலை, சென்னை – 600 018. போன் : 4994821.
அடையாறு – போன் : 4918669, பம்பாய் – போன் : 2006811,
ஐதராபாத் – போன் : 319371, கோயம்புத்தூர் – போன் : 213673,
மதுரை – போன் : 30481, கும்பகோணம் – போன் : 24487, பெங்களூர் – போன் : 3320777, நெல்லூர் – போன் : 31289.



21st Century's

"Family-Deposit"

அன்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் இருப்பிடம் உங்கள் குடும்பம். தேவை ஏற்படும் போதெல்லாம் அவை உங்களுக்கு ஆதரவாய் உள்ளன.

இப்போது, உள்ளார்ந்த நன்றியுடன் அடையாளமாய் 'ட்வெண்டிஃபர்ஸ்ட் செஞ்சுரி'யின் "ஃபேமிலி டெபாஸிட்" டை உங்கள் குடும்பத்திற்கு வழங்குங்கள். அது. எதிர்காலத்தில் எந்த நேரத்திலும் நம்பிக்கையுடன் எதிர்நோக்கத் தகுந்த ஒரு செல்வக் களஞ்சியம். நான்கே ஆண்டுகளில் ரூ. 50 கோடியை எட்டியுள்ள புகழ்மிக்க நிதியீட்டு நிறுவனம், இத்திட்டத்தை வழங்குகிறது. CRISIL FA+ ரேட்டிங் பெற்றிருக்கும். 'ட்வெண்டிஃபர்ஸ்ட் செஞ்சுரி'யின் "ஃபேமிலி டெபாஸிட்" – உங்கள் குடும்பத்தினர் மீது நீங்கள் கொண்டிருக்கும் ஆழமான அன்பின் வெளிப்பாடு. அதனை இன்றே அவர்களுக்கு வழங்குங்கள்

உங்கள் "ஃபேமிலி டெபாஸிட்" பற்றி மேலும் அறிய விரும்புகிறேன்.

பெயர் : ....

விலாசம் : ....

....

போன் : ....

'ட்வெண்டி ஃபர்ஸ்ட், செஞ்சுரி மானேஜ்மெண்ட் சர்வீஸ் லிமிடெட், "ஸ்ரீவித்யா", 32, டி.டி.கே. சாலை, சென்னை – 600 018.

This advt. appears further to the statutory advt. published by the company in Makkal Kural and Trinity Mirror on 29th August and 18th November 1996. The text of the statutory advt. is also printed on the application form, which may be referred to before investing in the company's Deposit Schemes.

Sans - ⊞/TCMS/950967

KA

ஒரு மகிழ்ச்சிகரமான குடும்பம் 'ட்வெண்டி ஃபர்ஸ்ட் செஞ்சுரி' குடும்பம்

நீங்கள் கேட்டவை - தராசு

● ஆர். சுவர்ண சுபா, திருநெல்வேலி - 11.

? சாடிலைட் டீ.வி.க்களில் இப்போது இளம் பெண்கள் கலந்து கொண்டு ஆட்டம் பாட்டம் போடுவது எதைக் காட்டுகிறது?

! தமிழுக்கு – தமிழ்நாட்டுக்கு வந்துள்ள சோதனைக் காலத்தை...

● ஆர். திலகவதி, சென்னை - 38.

? நாட்டில் அரசியல்வாதிகள் மீது நம்பிக்கை அற்றுவிட்ட நிலையிலும் ஜனநாயகம் தேவைதானா?

! இந்தப் பரிதாப நிலை காரணமாகவே ஜனநாயகத்தின் முக்கியத்துவம் மேலும் அதிகரிக்கிறது. நம்து நம்பிக்கைக்குப் பாத்திரமில்லாதவர்களை நீக்குவதற்கே முதலில் ஜனநாயக உரிமை வேண்டுமே.

● இரா. கல்யாண், வடவள்ளி.

? வக்கீல் விஜயனைக் குற்றுயிர் ஆக்கியவர்களில் ஒரு அமைச்சரும் அரசு உயர் அதிகாரியும் இன்னும் வலையிலேயே சிக்காமல் இருக்கும்போது, ஏற்கெனவே சிக்கியவர்கள் ஒவ்வொருவராக ஜாமீனில் வெளிவந்து கொண்டிருக்கிறார்களே?

! தேவைக்கு அதிகமான நாட்கள் ஜாமீன் மறுக்கப்பட்டால் நீதிபதி நியாயம் தவறியவராவார். எனவே வழக்கை துரிதப்படுத்தி தீர்ப்பு சொல்வதே வழி. ஆனால் அவ்வாறு துரிதப்படுத்துவதை அனுமதிக்காமல் தாமதத்துக்கே வழி காண்பது அரசியல் சதி!

● பெங்களூர் சிக்ஸ்முகம், கள்ளியம்புதூர்.

? உலக அழகிகளுக்கு இணையாக நம் தமிழ்த் திரையுலகில் அழகன்கள் இருக்கிறார்களா?

! அழகன்கள் நிறையவே இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் நடிகர்களா என்பதுதான் கேள்விக்குறி! அழகிகளும் சரி, அழகன்களும் சரி, தோற்றத்தை வைத்து மட்டுமே திரையுலகில் பிரகாசித்து விடமுடியாது!

● தி. சுபாகரன், உடுமலைப்பேட்டை.

? கோபத்தை அடக்க வழி இருக்கிறதா?

! தியானமும் பிரச்னையை அலசுகிற சீரிய சிந்தனையும் உதவும். கூடவே நகைச்சுவை உணர்வை வளர்த்துக் கொள்ள முடிந்தால் நீங்கள் அதிர்ஷ்டசாலிதான்!

ஹரிபாஸ்கரை விட்டால்

• சாதனை...?



● புளியரை கணேசன், சென்னை - 30.

? இனி வருங் காலங்களில் இந்தியாவுக்கு விளையாட வரும் பாகிஸ்தான் விளையாட்டு வீரர்களின் உயிருக்கு உத்தரவாதமில்லை என பால்தாக்கரே பேசியுள்ளாரே?

! இப்படிக் கூறும்போதே, அயல்நாடுகளுக்குப் போகும் நமது விளையாட்டு வீரர்களின் உயிர்களுக்கும் உத்தரவாதமில்லை என்ற நிலமையை அவர் உருவாக்கி விடுகிறார். இதை அவர் சிந்தித்ததாகத் தெரியவில்லை. இந்த மாதிரி வெறுப்பை வளர்த்து ஆட்சிக்கு வருவோர் ஹிட்லர் வழி போவார்கள்!

● அ. ராஜா ரஹ்மான், கம்பம்.

? ஃபோர்டு கார் தொழிற்சாலை தொடங்க, இந்தியாவில் தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்தது ஜெயலலிதாவின் சாதனையா?

! மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டியது ஓர் அரசின் – முதல்வரின் கடமை. கடமையெல்லாம் சாதனையாகி விடாது! லஞ்ச ஊழலற்ற ஆட்சி, சீரான சட்ட ஒழுங்கு பராமரிப்பு, அதன் விளைவாக நிலவும் அமைதி, மக்களுக்கு வேலை வாய்ப்பை அதிகரித்தல் – அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், விலைவாசி குறைப்பு... போன்றவை நிஜமாகவே சாதனைகள். இந்த வித்தியாசத்தை மக்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டியது ரொம்ப அவசியம்.

• பாதுகாப்புக் கருதி....






• வெறுப்பை வளர்க்கிறார்!

இல்லாவிட்டால், தேர்தல் நெருங்குகிற இந்த கட்டத்தில் வரிப் பணத்தில் வழங்கும் இல வசங்களையே கூட தங்கள் சாதனையாக்கி, காதில் பூ சுற்றி விடுவார்கள் நம் அரசியல்வாதிகள்!

● **பத்மா மணி, சென்னை - 18.** ❑

? ***காந்திஜி, நேருஜி நினைவு நாளில் அவர்களுடைய சமாதியில் போய் அஞ்சலி செலுத்துவது போல் சஞ்சய் காந்தி நினைவு நாளிலும் நம் அரசியல் தலைவர்கள் அவரது சமாதிக்குப் போய் அஞ்சலி செலுத்துகிறார்களே...? அது தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகிறதே...? பிரதமர் முதற்கொண்டு இவ்வாறு அஞ்சலி செய்வது எந்த வகையில் நியாயம்?***

! சஞ்சய்க்கு செலுத்துவதுதான் நிஜமான அஞ்சலி! காந்திஜி, ராஜாஜி, நேருஜி போன்றோருக்குச் செலுத்துவதெல்லாம் வெறும் உளவாக்கட்டிக்கு! இன்றைய அரசியல்வாதிகளின் ஒழுக்கமும் நடைமுறையும் பார்க்க அப்படித்தான் எண்ணத் தோன்றுகிறது.



• இன்று இருந்தால்...

• அஞ்சலி அவசியமா?





• இதற்கும் துணியட்டும்!

ஆள் இல்லையா?

● **என். பாலகிருஷ்ணன், வளவனூர்.**

? ***ராஜாஜி அவர்கள் இப்போது உயிருடன் இருந்திருந்தால்...?***

! தமது பிறந்தநாளையொட்டி தமது சிலைக்கு ஊழல் அரசியல்வாதிகள் மாலையிட்டதைக் கண்டு முகம் சுளித்திருப்பார். நெய்வேலியில் மெய்யான ராஜாஜி பக்தர்கள் (Rajaji Memorial Society) நடத்திய பேச்சுப் போட்டியில் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு, தமது தீர்க்கதரிசன கொள்கைகளைச் சரியாகப் புரிந்து கொண்டு, இன்று அவை வெற்றி பெற்று வருவது குறித்துப் பேசியதைக் கேட்டு மகிழ்ந்திருப்பார்.

● **ஜே. நாகராஜ், திருச்சி - 12.**

? ***தலைமைச் செயலகத்துக்கு ஹரிபாஸ்கரை விட்டால் வேறு ஆளே கிடைக்காதா...?***

! கிடைக்கும். ஆனால் வேறு ஆளை அவர்கள் விரும்பவில்லை; தேடவுமில்லை. காரணம் : கணக்கிலடங்கா ஊழல்கள் நடந்திருப்பதால் பதவியில் தொடர்ந்து ஒட்டிக் கொண்டிருந்தாலொழிய முதல்வருக்கும் பாதுகாப்பு இல்லை, தலைமைச் செயலருக்கும் பாதுகாப்பு இல்லை. எனவே பதவி நீட்டிப்புக் கொடுக்க வேண்டிய கட்டாயம்!

● **கண்மணி சுப்பு வேதையா சித்திரவேலு, கருப்பம்புலம்.**

? ***நாகை மாவட்டத்தில் சாராய வழக்குகளில் 63 லட்சம் ரூபாய் அபராதம் வசூலாகியிருக்கிறதாமே?***

! அபராதமே 63 லட்சம் என்றால் மாமூல் எவ்வளவு வசூலாகியிருக்கும்! சமீபத்திய திருச்சி விஷச் சாராய மரணங்களை நினைவுபடுத்திக் கற்பனை செய்து பாருங்கள்....!

● **இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.**

? ***கர்நாடக சங்கீத வித்வான்கள் இரண்டு அணிகளாகப் பிரிந்து சமீபத்தில் நடத்திய கிரிக்கெட் போட்டி பற்றி...?***

! அது பழைய சங்கதிங்க...! லேட்டஸ்டா, திருவையாறிலே தியாகராஜ ஸ்வாமிக்கு அஞ்சலி செலுத்தறேன் பேர் வழின்னு இரண்டில்லை — இருநூறு அணிகளாப் பிரிஞ்சு பஞ்சரத்ன கீர்த்தனைகளை ஆளுக்கொரு பக்கமா பாடினாங்க பாருங்க... கர்ண கொடூரம்! பேசாமல் வருஷத்துக்குப் பத்து வித்வான்களைத் தேர்ந்தெடுத்து, அவங்க ஒழுங்கா சேர்ந்து பயிற்சி பண்ணிப் பாடுற முறையை அறிமுகப்படுத்தலாம். வயலினில் புதுமை பண்ணத் துணியற குன்னக்குடி இந்த வழக்கத்துலயும் புதுமையைப் புகுத்தினால் தியாகைய்யர் நிச்சயமாக வாழ்த்துவார்.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
பத்மா மணி,
13, ஸ்ரீராம் காலனி,
ஆழ்வார்பேட்டை,
சென்னை - 600 018.



தமிழகம் மறக்க முடியாத ஊழல் வழக்கு, 1973-78ல் நடைபெற்றது. மிகச் சமீபத்தில் (1994) சுப்ரீம் கோர்ட்டால் முடிவான தீர்ப்பு வழங்கப்பட்ட அந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வழக்கு, நான் லஞ்ச ஒழிப்புத் துறையில் டி.ஐ.ஜி.யாக இருந்த போது விசாரணைக்கு வந்தது.

அது சென்னை கார்ப்பொரேஷன் மஸ்டர் ரோல் கேஸ்!

பல அரசியல் புள்ளிகள் உட்பட 105 பேர் மேல் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து, 1040 சாட்சிகளை விசாரித்து, ரூபாய் நாலு லட்சம் மற்றும் மூவாயிரம் கிராம் தங்க நகைகளைப் பறிமுதல் செய்து, மாநிலத்தையே திரும்பிப் பார்க்கச் செய்த அவ்வழக்கில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஊழல் தொகையின் மொத்த ரூபாய் 1.26 கோடி!

விவரமாகச் சொல்கிறேன்.

அரசாங்கத்தின் சில துறைகளில் எப்போதும் தாற்காலிகப் பணியாளர்களுக்கு வேலை இருந்து கொண்டே இருக்கும். பொதுப் பணித்துறை, மின்சார வாரியம் போன்றவை உதாரணம்.

எப்போதும் இந்தத் துறைகளில் ரிப்பேர் பணிகளோ, கட்டுமானப் பணிகளோ நடந்து கொண்டேயிருக்கும்.

இதற்காக ஆங்காங்கே தாற்காலிகப் பணியாளர்களை அமர்த்திக் கொள்வார்கள்.

தினக்கூலி அடிப்படையில் அமர்த்தப்படும் இத்தகைய ஊழியர்களைப் பற்றிய விவரங்களை (பெயர், முகவரி, பணிவிவரம், பணியாற்றிய நாட்கள், கூலி இன்னபிற) ஒரு பதிவேட்டில் எழுதி வைப்பார்கள். அதற்குத்தான் மஸ்டர் ரோல் என்று பெயர்.

சாதாரணமாக, இதில் அதிகபட்சம் செய்யக்கூடிய ஊழல் என்னவென்றால் – வராத நாட்களுக்கும் சேர்த்து கூலி வழங்கியதாகக் காட்டுதல், வேலை செய்யாதவர்களின் பெயரில் கையெழுத்துப் போட்டு விட்டு கூலி வழங்கியதாகக் காட்டுதல் இவைகள்தாம். இம்மாதிரியான ஊழல் செய்கைகள் நடக்கவொட்டாமல் தடுப்பது அந்தந்தப் பகுதியில் அமர்த்தப்பட்ட மேல்நிலை தணிக்கையாளர்களின் பொறுப்பு.

ஆனால் இதையே திட்டமிட்டு, கீழ்மட்டத்திலிருந்து, மிக உயர்ந்த மட்டம் வரை இணைந்து ஒரு நெட்-ஒர்க் போலச் செயலாற்றி மூன்று நான்கு வருடங்களாகச் சென்னை கார்ப்பொரேஷனில் பெரிய அளவில் ஊழல் நடந்திருப்பது தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

போலி ரிகார்டுகள் தயாரிக்கப்பட்டு, தொடர்ந்து மாதக் கணக்காக அரசாங்கப் பணம் கையாடப்பட்டது 1969-73ல். இப்படி ஓர் ஊழல் நடக்கிற விஷயம் அரசல் புரசலாகத் தெரிந்து, Taxation and Finance கமிட்டி 1973 அக்டோபரில் சில குறிப்பிட்ட மஸ்டர் ரோல்களை மட்டும் பரிசீலித்தார்கள்.

பதிவேட்டில் நிறைய அடித்தல் திருத்தல்கள். பணியுடன் சம்பந்தப்படாத தினக்கூலிகளின் (கற்பனைப்) பெயர்கள் இருந்தன. நிறைய payment தரப்பட்டிருப்பதற்கு ரெக்கார்டுகளே இல்லை. இதையெல்லாம் விட, நடக்காத பணிகளுக்கும் கூலி அளிக்கப்பட்டதாகக் காட்டப்பட்டிருந்தது!

கதாரித்துக் கொண்டார்கள். உடனே அந்த மஸ்டர் ரோல்களையும், ஊழல் விவரங்களையும் அன்று கமிஷனராக இருந்த வி. கருப்பன் ஐ.ஏ.எஸ். அவர்களின் பார்வைக்குக் கொண்டு போனார்கள். அவர் உடனே செய்த முன்விசாரணையில் ஊழல் பெரும் அளவில் செய்யப்பட்டுள்ளது என்று தெரிய வந்ததால், இந்த விவகாரத்தை விரிவான, ஆழமான புலனாய்வு செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்து அரசுக்கு அறிக்கை அனுப்பினார்.

அரசு (தி.மு.க. அரசு) ஒப்புக் கொள்ளவே, வழக்கு லஞ்ச ஒழிப்புத் துறைக்கு வந்தது. கேஸ் பதிவு செய்யப்பட்டு, என்னுடைய நேரடி மேற்பார்வையில் புலனாய்வு துவங்கியது.

கவனிக்கவும் - அப்போது கார்ப்பொரேஷன் கமிஷனரின் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டிருந்தவர்களின் எண்ணிக்கை 44தான். எல்லோரும் கார்ப்பொரேஷன் ஊழியர்கள். கவுன்சிலர் ஒருவருமில்லை. அதிகபட்ச வி.ஐ.பி. - ஒரு டிவிஷனல் எஞ்சினியர். தவிர அஸிஸ்டண்ட் எஞ்சினியர்கள், அக்கவுண்ட்ஸ் பிரிவினர், கிளார்க்குகள் என்று பிற சாதாரணர்கள் மட்டுமே! ஆனால் ஊழல் ஒழிப்புத் துறை இந்தக் கேஸை விசாரிக்க ஆரம்பித்ததும் பூதம் கிளம்பி விட்டது!

இரண்டு முன்னாள் மேயர்கள், முப்பத்தொரு கவுன்சிலர்கள் உட்பட பல முக்கியஸ்தர்கள் இதில் மாட்டினார்கள்.

எப்படி என்று சொல்கிறேன்.

வழக்கு எங்களிடம் வந்து சுமார் ஒரு வாரம் ஆகியிருக்கும். குற்றம்சாட்டப்பட்டிருந்த நாற்பத்தி நான்கு பேரையும் துருவித் துருவி விசாரித்துக் கொண்டிருந்த சமயம், அவர்களில் ஒருவர் சமீபத்தில்தான் அந்த ஊழல் நெட்-ஒர்க்கில் சேர்ந்திருந்ததால், நாங்கள் விசாரிக்கும் போது குற்றத்தை ஒப்புக் கொண்டு, பல விவரங்களைச் சொல்ல ஆரம்பித்தார். நாங்கள் உஷாராகி உடனே அவரிடமிருந்து மிக விரிவான வாக்குமூலம் பதிவு செய்து, அவரை அப்ரூவராக எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்தோம்.

எப்படி, எதில், எங்கே ஊழல்

சி. வி. நரசிம்மன்

கள், யார் யார் நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தப்படுகிறார்கள், எத்தனை வருடங்களாக இது நடக்கிறது. வி.ஐ.பிக்கள் ஒத்துழைப்பு என்று சகலத்தையும் அவர் சொல்லி விட, அவற்றை உடனே பதிவுசெய்து கொண்டோம்.

ஒரே நபர், பல பேர் 'சார்பில்' கையெழுத்து அல்லது கைநாட்டுப் போட்டு கூலி வாங்கிக் கொள்வது ஒருபுறம் இருக்க, ஒரு ஆள் தன் பத்து விரல் ரேகைகளையும் பதித்து, பத்து நபர்களுக்கான கூலி பெற்றிருப்பதும் எங்களுக்கு ஆச்சர்ய அதிர்ச்சியைத் தந்தது.

இதைத் தொடர்ந்து எங்கள் புலன் விசாரணை முழு வேகம் எடுத்தது. சம்பந்தப்பட்ட ஒவ்வொருவராகப் பிடித்து அரெஸ்ட் செய்யத் தொடங்கினோம். ஊழல் நடந்ததாகத் தெரிந்த சமயத்தில் அவர்கள் ஏதும் சொத்துக்கள் வாங்கி இருக்கிறார்களா என்று விசாரித்து, அவற்றை உடனடியாகப் பறிமுதல் செய்து, கோர்ட் உத்தரவு பெற்று 'சீல்' வைத்தோம்.

கிட்டத்தட்ட ஒரு வருடம் நடந்த எங்கள் தீவிர விசாரணையில் குற்றவாளிகள் மடமடவென்று கைதாவதையும், அவர்கள் சொத்துகள் முடக்கப்படுவதையும் மிகுந்த ஆவலோடு பொது மக்கள் கவனித்துக் கொண்டிருந்தனர். காரணம், கைதானவர்களில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த கவுன்சிலர்கள் இருந்தார்கள்! சிலர் ஆளுங்கட்சியை (தி.மு.க.)ச் சேர்ந்தவர்கள். சிலர் அ.தி.மு.க. வேறு சிலர் காங்கிரஸ் இத்யாதி.

தீவிரமாக நாங்கள் இயங்கிக் கொண்டிருக்க, திடீரென்று முதல்வர் கருணாநிதியிடமிருந்து ஓர் அவசர அழைப்பு வந்தது, உடனே எங்களைச் சந்திக்க விரும்புவதாக.

நானும், புலனாய்வு அதிகாரி (எஸ்.பி.) ஆர். என். கிருஷ்ணசாமி என்பவரும் முதல்வரின் அலுவலகத்தில் அவரைச் சந்தித்தோம்.

மறக்க முடியாத 'மஸ்டர்ரோல்' வழக்கு!

விசாரணையில் அதுவரை வெளிவந்த விவரங்களைச் சுருக்கமாகச் சொன்னோம். கவனமாக கேட்டுக் கொண்டார். கடைசியில், "நிறைய பேரைக் கைது செய்து இருக்கிறீர்கள். இன்னும் பலர் கைதாகக் கூடுமா?" என்று கேட்டார்.

"ஆமாம், கைது செய்ய வேண்டிவரும்" என்றேன்.

"கட்சி ஆட்கள், வி.ஐ.பிக்கள் கைது செய்யப்பட்டதை பேப்பரில் வந்த பிறகுதான் நான் தெரிந்து கொள்வது என்பதில்லாமல், அப்படிப் பட்ட நபர்களைக் கைது செய்யும் போது உடனுக்குடனே எனக்குச் சொல்லி விடுங்கள்" என்றார்.

நான் ஒப்புக் கொண்டேன்.

குறுக்கீடுகள் ஏதுமின்றி மேலும் பலரைக் கைது செய்து, காவலில் வைத்தோம். சிலர் ஜாமீனிலும் சென்றார்கள்.

இந்த வழக்கை விசாரிப்பதற்கென்றே நியமிக்கப்பட்ட சிறப்பு நீதிபதியின் முன், 74 அதிகாரிகள்; 31 கவுன்சிலர்கள் மீது 1974 நவம்பரில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தோம்!

மூன்று வருடம் நடந்த கோர்ட் விசாரணையில் பல அதிசயங்கள்.

மொத்தம் ஏழு அப்ரூவர்கள் சாட்சியம் சொன்னார்கள். 20,780 ரிகார்டுகள் கோர்ட்டில் சாட்சியங்களாகப் பதிவாயின. ஒரு முக்கியமான அப்ரூவர் சாட்சியம் சொன்ன பிறகு, குற்றம் சாட்டப்பட்டவர்களின் தரப்பு வக்கீல்கள் அவரை 104 நாட்கள் தொடர்ந்து, குறுக்கு விசாரணை (cross examination) செய்தார்கள். அவர் உண்மையாகக் கூறிய சாட்சியம் பலமாக நின்றது. இந்த அளவு சாட்சியங்களைக் கொண்ட கிரிமினல் கேஸ் போலீஸ் சரித்திரத்திலேயே இருந்ததில்லை என்று கூறலாம்.

இறுதியில் 71 பேரைக் குற்றவாளி என்று முடிவு செய்து, நவம்பர் 1978-ல் தீர்ப்பளித்தார் நீதிபதி. ஒரு வருடம் முதல் நான்கு வருடங்கள் வரை சிறைத் தண்டனைக் காலம்.

இதுவல்ல கிளைமாக்ஸ்! அத்தனை பேரும் உடனே ஹை-கோர்ட்டுக்கு அப்பீல் செய்து விட்டு, பெயிலில் வெளியே வந்து விட்டார்கள்!

பன்னிரெண்டு வருடம் இழுத்தடித்தபின் 1990-ல் ஹைகோர்ட் வழங்கிய தீர்ப்பு எனக்கு பெரும் அதிர்ச்சி அளித்தது. (1983லேயே நான் ரிடையராகி விட்டேன்!) இம்மாதிரி பெரிய வழக்குகளில் குற்றம் சாட்டப்படுகிறவர்களில் ஒருசிலர் அப்பீல் கோர்ட்டில் விடுவிக்கப்படுவது உண்டு.

ஆனால் இந்த வழக்கில் முதல் விசாரணை செய்த கோர்ட், குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்த 71 பேரையும் நிரபராதி என்று சொல்லி விடுவித்து விட்டது ஹைகோர்ட்!

இது எனக்கு மாபெரும் அதிர்ச்சி. சாத்தியமே இல்லாத விஷயம் இது! தவிர, அத்தனை சிரமப்பட்டு, வருடக்கணக்கில் சாட்சியங்களையும் ஆதாரங்களையும் தேடி நிரூபித்த பின் இப்படி ஒரு தீர்ப்பு – காவல் துறைக்கு ஒரு வகையில் அவமானமல்லவா?

நான் அப்போது விஜிலன்ஸ் டைரக்டராக இருந்த சி.எல். ராமகிருஷ்ணனைத் தொடர்பு கொண்டு பேசினேன்., அவரும் அதிர்ச்சியில் தான் இருந்தார்.

இதை இந்த நிலையில் விட்டு விடக் கூடாதென்ற முடிவுடன், அரசின் அனுமதி பெற்று, அரசின் மூலம் சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்து மீண்டும் வழக்கு தொடரப்பட்டது.


1994-ல் அந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு வெளிவந்தது.

சிறப்பு கோர்ட் குற்றவாளிகள் என்று சொன்ன– ஹைகோர்ட், 'குற்றமற்றவர்கள்' என்று சொன்ன – அந்த 71 பேரும் 'குற்றவாளிகள் தான்' என்று கூறி தீர்ப்பளித்தது சுப்ரீம் கோர்ட்!

71 பேரில் சிலர் அப்போது இறந்தே போய் விட்டார்கள்! வேறு சிலர், 'இத்தனை வருடம் கழித்துத் தண்டனையா?' என்று கேட்டு, மறு அப்பீல் செய்திருப்பதாகவும் அறிந்தேன்.

எது எப்படியோ, இருபது வருடங்கள் கழித்தாவது நான் விசாரணையில் ஈடுபட்ட ஒரு முக்கிய வழக்கில் நீதி கிடைத்ததே என்கிற வகையில் எனக்கு ஒரு பிரத்தியேக சந்தோஷம்!

(தொடரும்)



"என்னடா உன் கன்னம் வீங்கி இருக்கு?"

"அம்மா கன்னத்துலே எங்கப்பா அறைஞ்சுட்டார்!"

"சரி, அதுக்கு உன் கன்னம் ஏன் வீங்கணும்?"

"கனவுலே எங்கப்பா அறையறப்போ பக்கத்துலே நான் படுத்திருந்தேன்!"

— து. பூவராகன்

பார்வை

"ஏய் இந்தா... காருக்கு நேரமாச்சுலே? கெளம்புற வழியைப் பாருங்க."

புருஷனை 'தார்க்குச்சி' வைத்து விரட்டிக் கொண்டிருந்தாள், வடிவு. அவளது இடுப்பில் கனத்த சாக்குப்பை. வலது கையில் பிளாஸ்டிக் கூடை. ரெண்டிலும் முண்டும் முடிச்சுமாக நிறைய சாமான்கள். பாரம், அவளை ஒருச் சாயலாக நிற்க வைத்திருந்தது.

நாளைய மறுநாள்... குலதெய்வம் கோவிலில் பொங்கல். ரெண்டாவது புள்ளைக்குக் காது குத்து, முடியெடுப்பு. அதற்காகத்தான் சாமான்கள் வாங்க வந்திருந்தனர்... அம்மனும், சாமியும்.

வேல்க்கனி, வெத்தலை பாக்குக் கடைக் காரனை கடித்துக் குதறிக் கொண்டிருந்தான். "வெருசா... குடு... வெருசா.. வெருசா..."

"செமந்துக்கிட்டு எம்புட்டு நேரம் நிக்க? வெருசா வந்து தொலையுங்களேன்? கார்லே கூட்டம் சன்னை பறியும். நிக்கக்கூட எடம் கெடைக்காது."

"நீ நடந்துக்கிட்டேயிரு. நா... வந்து பஸ்லே ஒன்னை ஒக்கார வைக்கேன்... போதுமா?"

"ஆமா... ஒங்கய்யா வீட்டுக் காராக்கும்?"

வாங்கிய சாமானை அவசர அவசரமாய் டவுசர் பைக்குள் திணித்துக் கொண்டு ஓடி வருகிற அவளைப் பார்த்து முகத்தை நொடிக்கிற வடிவு. சிரித்துக் கொள்கிற வேல்க்கனி. மானாவாரியாக முறுக்கிய மீசை நுனிகளில் வெத்தலைக் காவி. வேட்டியை உயர்த்தி மடித்துக் கட்டியிருந்தான். டவுசரின் அடிப்பட்டை வெளியே தெரிகிறது. தலையில் வட்டச் சுற்றாகக் கட்டியிருந்த கலர்த் துண்டு. உடம்பு முழுக்க ரோம அடர்த்தி.

ஆவணி மாசத்து வெயில். கன்னென்று உறைக்கிற மழைக் கோப்பான வெயில். ரோடு முழுக்க ஜனம், உரசி, இடித்துக் கொண்டு நகரும் ஜனம். 'டர்ர், புர்ர்'ரென்று விரைகிற வாகனங்களின் அதிர்வில் நடுங்குகிற ரோடு.

பஸ் நிலையத்திற்குள், ஏகப்பட்ட நெரிசல். ஆண்களும் பெண்களும் சிறிசுகளுமாக 'திருவிழாக்' கூட்டம். நெரிசலாக சொருகிக் கொண்ட பஸ்கள்.

வடிவுக்கு ஏகப்பட்ட பிரமிப்பு. 'இம்புட்டு ஜனமா...' என்று நினைத்து நினைத்து மாய்ந்தாள். கலர் டீ.வி. பெட்டிகள் ரெண்டு ஓடிக் கொண்டிருந்தன. ஜவுளிக் கடை விளம்பரமும் நகைக் கடை விளம்பரமும் தான் பறந்தது.

வேல்க்கனி, வருகிற பஸ்களையே கவனித்தான். ஏறுவதற்கும் இறங்குவதற்கும் நடக்கிற மல்லுக் கட்டுகள். உக்கிரமான தள்ளு முள்ளுகள். 'காச் மூச்'சென்ற காட்டுக் கத்தல்கள்.

ஜன்னல் வழியாக கர்சீப்பைப் போட்டு சீட் பிடிக்கிற சாமர்த்தியம். கர்சீப்பை எடுத்து கீழே போட்டுவிட்டு, ஜம்மென்று உட்கார்ந்து



மேலாண்மை பொன்னுச்சாமி

கொள்கிற கிராமத்துப் பெண்கள். "இடிபட்டு மிதிபட்டு ஏறுன நாம, நின்னு சாகணும். காத்தாட வெளியே நிக்குறவுக, கைக்குட்டை போட்டு உக்காந்து போகணும். நல்லாயிருக்கே ஞாயம்" என்று வரப்போகிற சண்டைக்கு இப்போதே கோபம் காட்டிச் சீறுகிற சீற்றம்.

"இதென்ன... இம்புட்டுக் கூட்டமாயிருக்கு... இன்னைக்கு என்னமும் விசேஷமா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே. தெனம் தெனம் இதே எழவுக் கூத்துதான்."



வாய்க்குள் வார்த்தை வார்த்தையாயிருக்க... குபீரென்று பாய்ந்தான் வேல்க்கனி. முன் பக்கம் நெளிந்த பஸ் வந்து விட்டது. வடிவும் பாரத்தை இழுத்துக் கொண்டு 'தொக், தொக்'கென்று ஓடினாள்.

புளிச்சிப்பமாக அடைந்து சப்பிப் போய்க் கிடந்த கூட்டம், 'அப்பாடா' என்ற பெருமூச்சோடு இறங்குவதற்குள் வந்து அப்பிக் கொண்ட கூட்டம். மனித நெறு நெறுப்பு. தள்ளுமுள்ளு. சண்டை சத்தம், முண்டியடித்து முட்டி மோதுகிற மூர்க்கம். எல்லார் கண்களிலும் 'சீட்' வெறி. அலைபாய்வு.

வேல்க்கனியின் பாய்ச்சல். காட்டுக் கூச்சல். தடாலடித்தனம். ஆளுக்கு முந்தி ஏறி விட்டான். டிரைவர் சீட்டுக்கு இடது புறத்தில் ஓர் ஒற்றைச் சீட்டு. அதில் ஓடிப்போய் உட்கார்ந்து கொண்டு, வடிவைக் கூப்பிட்டான். "இங்க வா... ஒக்காரு."

முண்டியடித்து ஏறுகிற ஜனம். சரக்கு மூட்டைகளை 'முக்கித் தக்கி' கோணிப் பைகளையும், வாழைத் தாரையும் கொண்டு வந்து போடுகிற லோடு மேன்கள். 'மிதிச்சிராதே... இடிக்காதே... கொஞ்சம் தள்ளு... எங்கே தள்ள' என்று ஒரே சத்தக்காடு. வாக்கு வாதம்.

எப்படியோ இடித்துப் பிடித்து தடுமாறி ஏறி வந்தாள், வடிவு. சக்கையாகிப்போன அயற்சி.

சாக்குப்பையையும் கூடையையும் வாங்கி காலடிக்குள் வைத்தான். "இதுலே ஒக்காரு..."

"நீங்க?"

"எனக்குப் பின்னாடி ஒரு சீட் போடச் சொல்லியிருக்கேன்."

போய்விட்டான். பஸ் முழுக்க மனித வெக்கை. நிற்கக் கூட இடமில்லாமல் மனிதத் தத்தளிப்பு. அப்பளமாய் சப்பிப்போய் திணறிய பெண்கள். ஒருத்தர் மூச்சு, மற்றவர் செவியில் உஷ்ணமாய்...

என்ஜினைச் சுற்றியுள்ள இடைவெளிகளிலும் சாமான்கள், கால்கள். ஒற்றைச் சீட்டில் உட்கார்ந்து கொண்ட வடிவுக்குள் நசநசக்கிற புழுக்கம். சென்னி ரோமங்களுக்குள் ஊடுருவி நழுவுகிற வியர்வைக் கோடு. ஈரக் கூச்சம். வடிவின் முன்னாலும் கண்ணாடி, இடது பக்கமும் கண்ணாடியடைப்பு. காற்றேயில்லை. வெயிலில் காய்ந்த பஸ் தகரம், வெப்பத்தை உள்ளே கக்குகிறது. வெந்து தகிக்கிற வேக்காடு. 'எப்படா பஸ் புறப்படும்' என்று தவிக்கிற தவிப்பு. என்ஜின் உஷ்ணச் சீற்றம் வேறு.

கண்டக்டர் வந்தார். "டிக்கட்... டிக்கட்... யாரு டிக்கட்... எங்க போவணும்?" என்று ஒரே சத்தமாய் கத்தினார். "சில்லறையா குடுங்க" என்று அதட்டினார். அவ்வப்போது 'டபார், டபார் என்று புறங்கையால் பஸ்ஸின் 'டாப்'பை அறைகிறார்.

'இந்த மனிதச் சதையை கிழித்து உள்ளே புகுந்து எப்படித்தான் டிக்கட் போடுதாரோ...' என்று கண்டக்டரை நினைத்துப் பரிதாபப் பட்டாள்.

சிகரெட்டை கடைசி உறிஞ்சு உறிஞ்சி சுண்டியெறிந்துவிட்டு, டிரைவர் சாவதானமாய் வந்தார். பஸ்ஸின் முன்பக்க டயர்களை தட்டிப் பார்த்தார். பஸ்ஸின் இடது பக்கம் வந்து, 'சைடு மில்லர்' கண்ணாடியை சரி செய்தார். வண்டிக்குள் ஏறி, கண்டக்டரைத் தேடினார்.

"என்ன தலைவா... டிக்கட் அடிச்சாச்சா? வண்டியை எடுப்பமா?"

"ம்... எடுங்க தலைவா. நா அடிச்சிக் கிடுதேன்."

வண்டிக்கு உயிர் தந்தார். உறுமி விட்டு மெல்ல நகர்கிற பஸ். கடைசி நேரத்தில்



பல்லவன் போக்குவரத்துக் கழகம் தனது சர்வீஸ்களுக்கு இதுவரை சிறப்புப் பெயர் எதுவும் வைத்ததில்லை. முதல் முறையாக PP70 என்ற தனது ரூட்டிற்கு... "ரிங் ரோடு ரைடர்" (Ring Road Rider) என்ற பெயரைச் சூட்டி உள்ளது. இந்த பஸ் தாம்பரத்தையும் ஆவடியையும் இன்னர் ரிங் ரோடு உதவியுடன் இணைக்கிறது.

— பெரியசாமி

துள்ளலாய் ஓடிவந்து அப்புகிற இளவட்டங்கள்.

"படியிலே நிக்காதீங்க... மேலே ஏறிருங்க... மேலே வந்துருங்க. சொல்றதைக் கேட்டுக்கணும். தாறுமாறா வையும்படி வைச்சிக்கிடாதீக..."

விளையாட்டாகவும் அதட்டலாகவும் எச்சரிக்கிற கண்டக்டரின் அலறல்.

பஸ்ஸின் வேகத்தில் உயிர் பெறுகிற காற்று. பஸ்ஸுக்குள் ஊடுருவி, வியர்வை நசநசப்பை தொட்டுக் குசலம் விசாரிக்கிற காற்று. மூச்சுத் திணறிக் கிடந்தவர்களுக்குள் மெல்லமெல்ல உயிர்ப்பரவல்.

பார்க் ஸ்டாப்பில் ஆள் ஏறியது. சங்கரன் கோவில் விலக்கில் நின்ற ஜனம், ஏற வழியற்றுப் பரிதவித்தனர். கடந்து செல்லும் பஸ்ஸைச் சபித்தனர்.

அங்கும் இங்குமாய் பார்த்துக் கொண்டிருந்த வடிவு, தற்செயலாக டிரைவரைப் பார்த்தாள். இவள் ஒற்றைச் சீட்டில், நடுவில் என்ஜின். ஒட்டினாற் போல் டிரைவர். இவளுக்குள் பகீரென்றது. உள்ளுக்குள் 'திகுதிகு'வெனத் தகிக்கிற தீ.

வடிவையே வெறிக்கிற டிரைவர். ஸ்டீயரிங்கில் வலது கையும், கியரில் ஒரு கையுமாக வண்டியை நகர்த்திக் கொண்டே இவளை இமை தட்டாமல் பார்க்கிற வக்கிரம்.

வடிவு பதறிப்போனாள். மாராப்புச் சேலை சரியாகத்தானே இருக்கிறது? பின்னும் இழுத்துச் சொருகிக் கொண்டாள்.

இவளுக்குள் கூசந்து வந்தது. இப்படி... டிரைவர் பக்கத்தில் ஒற்றையாளாக வந்து உட்கார்ந்து விட்டோமே என்று குமைந்தாள். வெறுப்புடன் டிரைவரைப் பார்த்தாள். உள்ளுக்குள் சண்டாளமாய் பொங்கிச் சீறுகிற நாறவசவுகள்.

வேகம் எடுக்கிற பஸ். போக்குவரத்து நெரிசலுக்குள் ஊடுருவிப் பாய்கிறது. டிரைவர் காலரைத் தூக்கிவிட்டுக் கொள்கிறார்... முன்னால் பார்க்கிறார். இப்போது –

அவரது காது– செவிமடலின் மச்சம்– கன்னப் பகுதி– கழுத்து நரம்பு தெரிகின்றன. அடிக்கடி ஹாரனை அழுத்துகிறார். ஸ்டைலான அழுத்தம், அலட்டலான அழுக்கல் என்று இவளுக்குப் படுகிறது.

வடிவுக்குள் ஜ்வாலை விடுகிற தீ. நுனி நாக்கு வரை வந்து எரிகிற ஜ்வாலை. "மூஞ்சி மொகரையைப் பாரு. கருவாய்ப்பய. என்னமாய் மொறைக்கான்.... பாரு? பொம்பளையே பாக்காத பய மாதிரி. நாசமாய்ப் போக. அவன் கண்ணுலே பாம்பு புடுங்க. ஒரு நா பேதியிலே பாடையேற..."

கண்டமேனிக்கு பொடுபொடுவென்று துடிக்கிற அவள் உதடுகள்... தகிப்பும் கொதிப்பும் சாபமாகி சத்தமில்லாமல் சிதறின.

பி.எஸ்.கே. நகர் ஸ்டாப்பில் இறங்குகிற நாலைந்து டிக்கட்கள். ஓரக் கண்ணால் பார்க்கிற வடிவு. இவளையே நேர் கண்ணால் பார்க்கிற டிரைவர். நன்றாகத் திரும்பி... வசதியாக வெறிக்கிற கண்கள்.

தைரியமாய் உற்றுப் பார்க்கிற திமிர். கொஞ்சங்கூட கூச்சமில்லாமல் – அச்சமில்லாமல்– இம்மி கூட தயக்கமோ தடுமாற்றமோயில்லாமல்– கொத்திப் பிடுங்குகிற பார்வை. 'அப்படித்தாண்டி பாப்பேன். என்னை எவன் என்ன செஞ்சிட முடியும்?' என்று எகத்தாளமாய்ச் சவால் விடுகிற பார்வை."

கண்டக்டர் திரும்பத் திரும்ப 'படிப் பயணி'களை எச்சரிக்கிறார். "ஏய்... பச்சைச் சட்டை, மேலே ஏறுதியா... என்ன வேணும்? மேலே ஏறுடா...ராஸ்கல்" என்று காட்டமாகச் சீறுகிறார். கெட்ட வார்த்தைகளில் 'சன், புள்'ளென்று விழ ஆரம்பித்து விட்டார். முடிவில்லாத நச்சரிப்பும், தொல்லைகளும் அவரை அப்பி விட்டன. அவரது இயல்பை – மென்மையை – தின்று தீர்த்து விட்டன.

வடிவுக்கு ஒரு மனசாகவில்லை. வேறு எதிலும் ஒட்ட மறுக்கிற நினைவுகள். வேறு திசைகளில் விட்டாலும் போக மறுக்கிற பார்வை. சதா எந்நேரமும், தான் பார்க்கப்



''மணப்பெண் ஏன் போட்டோ கிராபரை இப்படித் திட்டுது?''

''மணமகனைப் பார்த்து, 'கடைசியா ஒரு தடவை சிரிங்க'ன்னு சொன்னாராம்!''

– எம். அசோக்ராஜா

படுவதை உணர்கிற மனசு. முள்முள்ளாய்க் குத்துகிற 'பார்வைப் பிரமைகள். கொதிப்பும் வேதனையுமாய்க் குழம்புகிற நினைவுகள்.

பஸ்... சத்திரப்பட்டியைத் தாண்டி... சங்கம் பட்டியையும் தாண்டிவிட்டது.

வேல்க்கனி எங்கே இருக்கான் என்று அலை பாய்கிற மனசோடு திரும்பித் திரும்பிப் பார்த்தாள். தட்டுப்படவில்லை. இடையில் பெரும் உயிர்ச்சுவராக மறித்துக் கொண்டு நிற்கிற ஸ்டாண்டிங் பயணிகள்.

அடாவடித்தனமாக வெறிக்கிற இந்த டிரைவரைப் பற்றி வேல்க்கனியிடம் சொல்லி விடலாமா என்று தவித்தாள்.

அந்த யோசனையிலும் ஒரு நெருடல். தயக்கம்.

வேல்க்கனி ஒரு மதிக்காரன். பாய்ந்தால்... ஒரே பாய்ச்சல்தான். முரட்டுப் புத்தி. யோசிக்க மாட்டான்.

...இப்படித்தான்.

ரெண்டு வருஷத்துக்கு முந்தி ஒரு சம்பவம். குழாயடியில் சண்டை. அதில் ஒரு பெண், 'வாய்க்கு வராத' கெட்ட வார்த்தையில் வடிவை வைது விட்டாள். வெறுங்குடத்துடன் அழுது கொண்டே வீடு வந்து விட்டாள். அவ்வளவு தான்.

வேல்க்கனி ஒரே கோபச் சீற்றமாய்ப் பாய்ந்தான். வசவுகளும் சண்டையுமாக தெருவே நாறிப் போயிற்று. ஒரே சத்தக் காடு. கைகலப்பாகி விட்டது. போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் விவகாரம் போய்... ஆயிரம் ரூபாய் செலவும், அவமானமுமாய் பிரச்னை முடிந்தது. ரொம்பக் கேவலமாகிப்போய் விட்டது...

"பல்லைக் கடித்துக் கொண்டாள் வடிவு. சிரமப்பட்டு கட்டுப்படுத்திக் கொண்டாள். ஒவ்வொரு ஸ்டாப்பிலும் அவன் பார்க்கிற வெறி. கோயில் மாட்டின் மேய்ச்சல் போன்ற திமிர். சுதந்திரமான பார்வை. அச்சமில்லாத -அத்துமீறலான பார்வை.

இவளுக்குள் கொதிப்பு. காலில் கிடக்கும் செருப்பால் அடித்து விடலாமா என்கிற மூர்க்கம். திமிறத் துடிக்கிற தன்மானச் சிலிர்ப்பு.

அவள் முகமெல்லாம் கடுப்பு. அடைக் கோழியின் சினசினப்பு. மூன்றுபடி பயிறு வறுத்துவிடலாம். அத்தனை கனல். நெருப்புச் சிதறலாய்... 'வெடுக், வெடுக்'கென்று ரெண்டு பார்வை பார்த்தாள், உயிர் அ(று)ந்து போகிற மாதிரி.

டிரைவர் அதற்கெல்லாம் அசந்த மாதிரி தெரியவில்லை. சுரணையேயில்லாமல் மரத்துப் போனவனைப் போல வெறித்தான். நெஞ்சையும், முகத்தையும் நன்றாகத் திருப்பி, இவளை நேருக்கு நேராகப் பார்த்தான். தாராளமான பார்வை. 'இதோ... இவளை நான் பார்த்து ரசிக்கிறேன்... பாருங்கள்' என்று எல்லாருக்கும் காட்டிக் கொள்கிற பார்வை. உதடுகளில் சில பாவனைச் சலனங்கள். மெல்லிய துடிப்புகள்.

வடிவுக்குள் விசுவரூபமாக வடிவம் கொள்கிற பத்ரகாளி. அவனது தலையை துண்டித்து, கண்ணில் ஓட்டை போட்டு, கயிற்றில் கோத்து, கழுத்தில் போட்டு ருத்ரதாண்டவம் ஆட வேண்டும் போல... ஒரு நினைவு.

கண்டக்டர் பின்னால் யாரையோ கோபமாக அதட்டுகிறார். "யேய் தம்பி, ஏன் லேடீஸ் பக்கம் போய் இடிச்சுக்கிட்டு நிக்கே? அசிங்கமாயில்லே? ச்சேய்! ஆம்பளைக நிக்குற பக்கம் ஒதுங்கியிருப்பா..."

வடிவுக்குள் ஒரு நினைப்பு. கண்டக்டரையே கூப்பிட்டுச் சொல்லலாமா? 'மொதல்லே... ஒங்க டிரைவரு கண்ணை நோண்டிப் புடுங்குங்க' என்று.

அவளுக்குள் தீ ஜ்வாலைகள்...

கடைசியாக ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள்.

'ஊரு வரட்டும். இந்தப் பயலை சும்மாவுடக் கூடாது. பஸ்ஸை விட்டு எறங்குறப்ப...இந்த நாயி மூஞ்சிக்கு நேரா, காறித்துப்பிட்டு எறங்கிர வேண்டியதுதான், செருப்பாலடிச்ச மாதிரி...'

ஆலங்குளம் முக்குரோடு. 'மொலேர்' என்று திரண்டு வந்து அப்பிய கூட்டம். வாசல்படியெல்லாம் கால் வைத்துத் தொங்கும் இள வட்டங்கள். 'படியிலே நிக்காதே' என்று

கண்டக்டர் சொல்ல முடியாத நிலைமை. பயங்கர நெருக்கடி.

ஒற்றைக்காலை கடைசிப் படியில் வைத்து, மறுகாலை வைக்க இடமில்லாமல் அந்தரத்தில் மிதக்கவிட்டு... விக்கிரமாதித்த வேதாளமாய்த் தொங்குகிற நாலைந்து பயணிகள்.

பின்னால் ஒரே கூச்சல். சந்தைக் கூச்சல்.

பஸ்ஸுக்கு முன்னால் ஓரங்கட்டி நின்ற லாரி. சிமெண்டு லோடு ஏற்றிய லாரி. தார்ப்பாய் போட்டு, வலைப்பின்னலாய் கயிறு கட்டப்பட்ட லாரி.

அவை எதையும் பொருட்படுத்தாமல் இவளையே வெறிக்கிற டிரைவர். ஸ்டீயரிங்கில் ஒரு கையும், கியரில் ஒரு கையுமாக இவளை இன்னும் அழுத்தமாக – கூர்மையாய்... பார்க்கிற திமிர்.

நகர்கிற பஸ், லாரியை நெருங்கத் தயங்கியது. விலகிப் போகவும் போதிய இடமில்லை. பஸ், மெதுவாக ஊர்ந்து, லாரியை நெருங்க.

இவளையே வெறிக்கிற டிரைவர். வெறித்தனப் பார்வை.

"தலைவா..." என்று சத்தம் போட்டு கண்டக்டரைக் கூப்பிடுகிற டிரைவர்.

"என்ன... பாஸ்?" அங்கிருந்தே பதில் கூவல்.

"பின்வாசல்லே தொங்குற வெள்ளைச் சட்டையையும் ப்ளூ சட்டையையும் உள்ளே நெருங்கி வரச் சொல்லுங்க."

"எடமில்லியே... பாஸ். வைச்சகாலை எடுக்கக் கூட முடியலே..."

"உள்ளே வரச் சொல்லுங்கன்னா... சொல்லுங்க... லாரியோட பாடி தட்டினா... என்னாகும்? ரெண்டு பேரும் ஸ்பாட்லேயே சாம்பாரு. தெரியுதா? உள்ளே வந்தாகணும்." கண்டிப்போடும் எரிச்சலோடும் அதட்டுகிற டிரைவரின் கோபச் சத்தம். பொறுமை சிதைந்த ஆத்திரம்.

அப்போதும்... இவள் மீதே பார்வை.

பார்வைக்கும், பேசுகிற பேச்சுத் தொனிக்கும் சம்பந்தமில்லை. ஒட்டவில்லை. வேறு வேறு தொனி. அபகரமாய்...

வடிவுக்குள் பிடிபடாத மர்மம். வடிவமாகாத உருவச் சிதைவு. என்ன இது? என்ன இது?

இவள் திகைப்பும் குழப்பமுமாய் இடது பக்கமுள்ள கண்ணாடியைப் பார்த்தாள். அதற்கும் வெளியே –

நீள்சதுரமாய் ஒரு கண்ணாடி. ரசம் பூசிய கண்ணாடி. 'சைடுமிர்ரர்'. அந்தச் சிறிய கண்ணாடிக்குள் தெரிகிற பஸ்ஸின் இடது பக்க



"பேப்பர் தட்டிலே பாஸந்தியைக் கொடுக்காதேன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்... தட்டையும் பாஸந்தின்னு சாப்பிட்டுட்டுப் போயிட்டாங்க பாரு..."

– கார்த்திக் ராஜா

முழுமை. ரெண்டு வாசலுமே தெரியுது.

லாரியைவிட்டு விலகி மெதுவாக ஊர்ந்து... வேகம் எடுக்கிற பஸ்.

வடிவுக்குள் குழப்பமான நினைவுகள்.

இந்தக் கண்ணாடியைத்தான் இந்நேரம் வரைக்கும் பார்த்துக்கிட்டு வந்தாரா? போக்குவரத்து நெரிசல்லே ஏறுற – எறங்குற – ஆளுகளைக் கவனிக்கத்தான்... இவரு இந்தப் பார்வை பார்த்தாரா? அப்ப... என்னைப் பாக்கலியா?

அடப்பாவி மனுசா, இது தெரியாம ஒன்னைப் பத்தி என்னென்னமோ நெனைச்சி... எப்படியெப்படியோ சபிச்சித் தொலைச்சுட்டேனே... நா ஒரு அறிவுகெட்டவ...

வடிவுக்குள் பரவிய ஒரு வெட்க உணர்வு. ஒரு தப்பும் பண்ணாத அப்புராணி மனுசனை, தப்பிதமாய் நினைத்து விட்டோமே என்கிற உணர்வு. நினைக்க நினைக்க அவளுக்கே கூச்சமாக இருந்தது.

இம்புட்டு நேரமாய் இவளைப் பாடாய் படுத்தி... பலதையும் நினைக்க வைத்து... வாட்டி வதைத்த நினைவுகள். ரணமாக்கிய ஆத்திர உணர்ச்சிகள்.

அதெல்லாம் வடிந்து விலகிய பின்னும்... மனசுக்குள் அதன் நிழலான கவடுகள்.

ஊர் வந்து, வட்டமடித்து பஸ் நின்றது. கடைசியாக இறங்குவதற்காக எழுந்த வடிவு, டிரைவர் தம்பியின் முகம் பார்த்தாள். ஒரு கனிந்த பார்வையையும் குளிர்ச்சியையும் சிந்திவிட்டு இறங்கினாள்.

ரெண்டையும் உணர்ந்த டிரைவர், ஒன்றும் புரியாமல் திகைத்துக் குழம்பினார்... வாழ்க்கையைப் போல.

இந்திர

3. ஆதித்ய பாண்டியன்



யுவானின் சாமர்த்தியத்தை எண்ணி குதூகலமடைந்த கொங்கு நாட்டு இளவரசியின் மனம், காடவர்கள் தொடர்ந்து வந்து ரதத்தை நிறுத்தி விட்டதைக் கண்டு அச்சத்தால் நிறைந்தது. அவர்கள் யுவானைச் சூழ்ந்து கொண்டனர். பெரும் பட்டாக்கத்திகளுடனும், அரக்கர்களைப் போன்ற உருவங்களுடனும் சூழ்ந்த காடவர்களையும், மெல்லிய கரங்களுடன் கால்களை சற்று அகற்றி திடமாக நிலத்தில் ஊன்றி நின்ற யுவானையும் கண்டவள் அவன் அன்றோடு தொலைந்தான் என்றே தீர்மானித்தாள்.

அடுத்த கணம் சீனத்து வீரனிடமிருந்து எழுந்த சீனத்துப் போர்க்கூச்சல், இளவரசியை மட்டுமின்றி, ஓங்கிய வாட்களுடன் சூழ்ந்து கொண்ட காடவர்களையும் திகைக்க வைத்தது. இமைப்பதில் பாதிப் பொழுதில் யுவானின் முதுகில் கட்டப்பட்டிருந்த உறைக்குள்ளிருந்து அந்த சீனத்து வாள் அவன் கரத்தில் தோன்றி கரகரவெனச் சுழல ஆரம்பித்தது. விர் விர்ரென்று காற்றில் ஒலியெழுப்பச் சுழற்றிய யுவான், வாளை இறுக்கிப் பிடித்து நிறுத்தினான். அவன் சிறு விழிகள் அதீத தீட்சண்யத்துடன் காடவர்களின் சிறு அசைவையும் கவனித்தன. அவன் வாளைப் பிடித்த விதமும் சற்று வினோதமாயிருந்தது. வாளை உட்புறமாக மடக்கி, அதன் நுனி தோளில் பதிந்திருக்க, இன்னொரு கரம் முஷ்டி பிடித்து முன்னால் நீண்டிருந்தது. அந்த சீனத்துப் போர்க் கலையைப் பற்றி ஏதும் அறிந்திராத காடவர்கள் வெறிக்கூச்சல்களுடன் அவன் மீது பாய்ந்தனர். பாய்ந்த இரண்டு வினாடிகள் கழித்தே தாங்கள் செய்தது எத்தகைய தவறு என்பதையும் உணர்ந்தனர். முன்னால் பாய்ந்த இரு காடவர்களின் ஓங்கிய வாட்கள், இரண்டு வினாடிகளுக்கு ஓங்கியபடியே நின்றன. அடுத்து அவை பக்கவாட்டில் திருப்பப்பட்டு நிலை குலைந்து கீழ் நோக்கி இறங்கின. சீனத்து வாள் சட்டென்று விடுபட்டு, ஒரு காடவனின் தோளிலும் மற்றொரு காடவனின் வாள் பிடித்த கரத்திலும் பதிந்து, சரேலென்று இழுபட்டது. அடுத்து பக்கவாட்டில் வந்த காடவனின் விலாப் பகுதியில் யுவானின் இடது கால் மின்னல் வேகத்தில் உயர்ந்து பதிந்தது. அதே வேகத்தில் சுழன்று திரும்பியவனது வீச்சில் அந்தக் காடவனின் வாள், அவன் கரத்தை விட்டுப் பறந்து தொலைவில் சென்று விழுந்தது. தாக்கத் துவங்கிய ஐந்தாறு கணங்களுக்குள் மூன்று பேரைச் செயலற்று விழச் செய்துவிட்ட அந்த சீனத்து வீரனை பிரமித்துப் பார்த்தனர் காடவர்கள். அவனைப் பக்கவாட்டில் நெருங்குவது அபாயம் என்பதைப் புரிந்து கொண்டதால் நேர் எதிரில் நின்று வாட்களைச் சுழற்றி தாக்கத் தொடங்கினார்கள்.

காடவர்கள் அதுவரையில் சோழர்களுடனும், பாண்டியர்களுடனும், போசளர்களுடனும் கூடப் பலமுறை போரிட்டிருந்தனர். ஆனால் அந்த சீனத்து வாலிபனின் கரத்தில் சுழன்ற அந்த வாள் வீச்சைப் போன்றதொரு வீச்சை அதுவரை கண்டதில்லை. அனாவசிய சுழற்சிகள் என்பது அறவேயின்றி, பின்புறத்தில் துவங்கி பக்கவாட்டிலும், நேர் எதிரிலும் இருமுறை சுழன்று, செங்குத்தாகப் பாய்ந்த அந்த வாள் வீச்சின் முறையை நிர்ணயிக்க இயலாமல் திணறினார்கள். தற்காப்பை விடத் தாக்குதலே அதிகம் என்பதையும், தங்கள் தாக்குதலிலிருந்து சீனன் மயிரிழையிலேயே விலகி அனாயாசமாகத் தப்பிப்பதையும் கண்டு வியந்

விஷ்வக்சேனன்



தார்கள். போதாக்குறைக்கு அவன் சுழன்று அருகில் நெருங்கிய போதெல்லாம் முஷ்டி பிடித்த அவன் இடது கரமும் வானின் வேகத்துக்கு இணையாக உயர்ந்து பாய்ந்த கால்களும், காடவர்களின் கழுத்திலும், கைகளின் இணைப்பிலும், விலாப் பகுதியிலும் பதிந்து நரம்புகளைத் தாக்கின. தாங்கள் அவனைத் தாக்கியது எத்தனை பிசகு என்பதையும், அவனிடமிருந்து தப்பவே உதவி தேவைப்படும் என்பதையும் உணர ஆரம்பித்தார்கள்!

ரதத்தின் சீலையை விலக்கி, அந்த அற்புதமான சீனத்து வாட்போரை பிரமித்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தாள் இளவரசி. முதலில் வாளை இழந்த காடவன், தன் புரவியை அணுகி, அதன் பக்கங்களில் தொங்கிய பெரும் ஈட்டிகளிலொன்றை எடுப்பதையும், அதை உயர்த்திப் பிடித்தபடியே யுவானைப் பின்புறமாக நெருங்க முயல்வதையும் கண்டு, "யுவான்!" என்று அலறினாள்.

இளவரசி விடுத்த எச்சரிக்கையால் சுழன்று திரும்பிய யுவானின் கழுத்தை உரசிப் பறந்தது அந்த ஈட்டி! பவளத்தாலான மாலையொன்றை அவசரமாக அவனுக்குப் பரிசாக அளித்தது போல் கழுத்தில் ரத்தக் கோடு ஒன்றைக் கிழித்து விட்டுச் சென்றது. அதுவரையில் பார்வையை நான்குபுறங்களிலும் சுழலவிட்டு முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டாமல் வாளைச் சுழற்றிக் கொண்டிருந்த யுவானின் மஞ்சள் முகத்தில் முதன் முறையாகச் சீற்றம் தெரிந்தது. அவன் குனிந்து நிமிர்ந்த வேகத்தில், அங்கிக்குள் அதுவரை மறைந்து கிடந்த பதக்கம் வெளி வந்து,

அந்தக் கடல் நாகம் காடவர்களை நோக்கித் தீவிழி விழித்தது. அடுத்து அவன் வாளின் வேகம் கூடி வீச்சின் முறையும் மாறியது.

அதே நேரத்தில், போசள வீரர்களைத் தீர்த்து கட்டிய காடவ வீரர்கள், புரவிகளில் பாய்ந்து வந்தனர். அதைக் கண்ட மற்ற காட வர்களின் வேகம் கூடியது. யுவானும் அதைக் கவனித்ததால் போரிட்டபடியே ரதத்தை நெருங்க முற்பட்டான்.

ஆனால் ரதத்தை நோக்கி வந்து கொண் டிருந்த காடவர்களின் புரவிகள் சட்டென்று பாதியில் நின்றன. யுவானுடன் போரிட்டவர் களும் கூட சண்டையை நிறுத்தி எதிர்த்திசை யில் வெறித்துப் பார்த்தபடி நின்றனர். காடவர் களின் இந்த மாற்றத்திற்குக் காரணமறியத் திரும்பிப் பார்த்த யுவான் மட்டுமின்றி ரதத்தி னுள் அமர்ந்து போரை ரசித்துக் கொண்டிருந்த இளவரசியும் திகைத்தாள்.

தென் மேற்கிலிருந்து, வீரர் பதின்மர் பின் தொடர, முன்னால் பாய்ந்து வந்து கொண் டிருந்தது ஒரு சாம்பல் நிறப் புரவி. அதன் கழுத் தைச் சுற்றி ஓடிய பட்டையில் முத்துக்கள் கட்டப்பட்டிருந்தன. அதன் நெற்றி முகப்பிலும் தொங்கியது ஒரு பெரும் முத்து. வெகு அலட் சியமாகப் பாய்ந்து வந்த அந்தப் புரவியையும் அதில் அமர்ந்து வந்த வாலிபனையும் கண்ட காடவர்களின் முகங்களில் எல்லையற்ற ஆத் திரமும், அச்சமும் தோன்றின. யுவானையும் ரதத்தையும் அடியோடு கைவிட்ட காடவர்கள், அந்த வாலிபனை நோக்கிப் பாய்ந்தார்கள்.

அந்த வாலிபனுக்கு வயது இருபத்து நான்குக்கு மேல் மதிக்க இயலாதிருந்தது. அரும்பு கட்டத் தொடங்கியிருந்த உதடுகளின் மேற்பகுதி. இதழ்களில் தொக்கி நின்ற விஷமப் புன்முறுவல். அவன் முகம் பார்வைக்கு ஏதோ விளையாட்டுப் பிள்ளை போல இருந்தாலும், ஈட்டிகளின் முனைகளை விடக் கூர்மையாக ஜொலித்தன அவன் விழிகள். பெண்களின் இடையைப் போல் சிறுத்துக் கிடந்த அவன் இடையிலிருந்து நீண்டிருந்த வாளும் அவன் விழிகளும் அவன் ஒன்றும் விளையாட்டுப் பிள்ளை அல்ல என்பதை நிரூபித்தன.

காடவர்கள் தங்களை நோக்கிப் பாய் வதைக் கவனித்த வாலிபனின் இடது கரம் மேலே உயர்ந்தது. அடுத்த கணம் வரிசை மாறாது அவன் பின்னால் வந்து கொண்டிருந்த வீரர்களிடமிருந்து ஏக காலத்தில் கிளம்பிய ஈட்டிகள் காடவர்களை நோக்கி ஜிவ்வென்று இறங்கின. அதே வேகத்தில் காடவ வீரர்களை நெருங்கிக் கலந்து விட்ட வாலிபனும் அவன் வீரர்களும் வாட்களை கரகரவெனச் சுழற்ற ஆரம்பித்தனர். ஏக காலத்தில் நான்கைந்து காடவர்களைச் சந்தித்த அந்த வாலிபனது வாள் வீச்சில் தனது சீனத்து வாட் போர் முறையும் கலந்திருப்பதைக் கவனித்த யுவான் அந்த வாலிபன் அதை வெகு அலட்சியமாகக் கையாண்ட விதத்தை வியப்புடன் கவனித் தான். உடன் வந்த வீரர்களும் சாமானிய வீரர் களல்ல என்பதும் புரிந்தது யுவானுக்கு. தன் உதவி அந்த வாலிபனுக்கோ, மற்ற வீரர் களுக்கோ தேவைப்படாது என்பது புரிந்ததால் யுவான் தன் வாளை உறையிலிட்டபடியே ரதத்தை நெருங்கினான்.

சீலையை விலக்கி, போரைக் கவனித்துக் கொண்டிருந்த இளவரசியை நெருங்கிய யுவான், "இளவரசி, இந்த வீரர்கள் யாரென்பது தங்களுக்குத் தெரிகிறதா?" என்று வினவினான்.

"திட்டமாகத் தெரியவில்லை யுவான். ஆனால் அந்த வீரரை இதற்குமுன் எங்கோ பார்த்திருப்பதாகத் தோன்றுகிறது...." இளவரசி யின் பதில் பாதியில் நின்றது.

காடவர்கள் பின் வாங்கி கானகத்தை நோக்கி விரைய ஆரம்பித்து விட்டதால் தன் வீரர்களை அவர்களுடன் போரிடவிட்ட அந்த வாலிபன் ரதத்தை நோக்கி வந்து கொண்டிருந்

குழம்பிக் கொண்டிருக்கும் அதிகாரிகள்!



பகுதி நேரமாக வேலை பார்க்கும் தம்மை நிரந்தரமாக்கும்படி அரசுக்கு மனு போட்டார் செல்லம்மா. இவர், திருவனந்தபுரம் அருகிலுள்ள பெரும் பழுதூர் பஞ்சாயத்தில் ஒரு துப்புரவுத் தொழிலாளி. அரசும் இவரது மனுவை ஏற்று, நிரந்தரமாக்கி உத்தரவு பிறப்பித்தது. ஒருவழியாகத் தமது 65-வது வயதிலாவது நிரந்தரமானோமே என்று சந்தோஷப்பட்டார் செல்லம்மா. அந்த சந்தோஷம் நீடிக்கவில்லை. காரணம், சட்டப்படி நிரந்தரத் தொழி லாளர்கள் 58-வது வயதில் ஓய்வு பெற்றாக வேண்டும். பகுதி நேரத் தொழிலாளர்கள்தாம் 70 வயது வரை வேலை பார்க்க முடியும். செல்லம் மாவை என்ன செய்வது? நிரந்தரமாக்கும் உத்தரவை ஏற்று ஓய்வு பெறச் செய்வதா அல்லது பகுதி நேரப் பணியாளராகவே நீடிக்கச் செய்வதா? குழம்பிக் கொண்டிருக்கிறார்கள் அதிகாரிகள்!

திருவனந்தபுரத்திலிருந்து : **எஸ்.எஸ். மணி**

தான்.

அவன் சற்று நெருங்க ஆரம்பித்த பிறகே அவனைக் கூர்ந்து கவனித்த இளவரசிக்கு அவனை சூளாமணி விஹாரத்திலும் கடிகையிலும், பயிற்சிக் கூடங்களிலும் சில ஆண்டுகளுக்கு முன் பார்த்த நினைவு எழுந்தது. நுதலை இரு பிரிவாகப் பிரித்த திருமண் பளீரிட அதற்கு மேல் சுருண்டு சுருண்டு இரு பக்கங்களில் தொங்கிய குழல்களும், குறுவாட்களின் முனைகளைப் போல் நீண்டு சரேலென்று இறங்கிய புருவங்களும் அதன் கீழ் கூர்மையாகப் பளிச்சிட்ட விழிகளும், அவற்றில் தொக்கி நின்ற விஷமமும், அந்த விஷமத்தை உயர்த்திக் காட்டிய இதழ்களின் முறுவலும் அலட்சியமாக ஆடிய வலுவான கரங்களும், கம்பீர நடையும் அவன் சாதாரண வாலிபனல்ல என்பதை இளவரசிக்குப் புரிய வைத்தன.

தங்களை நெருங்கி லேசாகத் தலையை வணக்கத்துக்கு அடையாளமாகத் தாழ்த்தி நிமிர்ந்த அந்த வாலிபனின் கூர் விழிகள் தன் கண்களின் வழியே உள்ளத்தையே ஊடுருவுவதைக் கவனித்த இளவரசியின் இதயம் வேகமாக இயங்க ஆரம்பித்தது.

"கொங்கு நாட்டு இளவரசிக்கு வணக்கம். நான் பாண்டியரைச் சேர்ந்தவன். பெயர் ஆதித்ய பாண்டியன்" என்று சர்வ சாதாரணமாகத் தன்னை அறிவித்துக் கொண்ட வாலிபனின் விழிகள் யுவானை நோக்கித் திரும்பின. அவன் வலது கரம் எழுந்து யுவானின் தோளில் பதிந்தது. முறுவல் இன்னும் விகசித்தது. "யுவான், நீயும் இளவரசியாரும் என்னுடன் வர வேண்டும்" என்றான் அந்த வாலிபன்.

யுவான் ஆச்சரியத்தால் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டான். "பாண்டிய மன்னருக்கும் இளைய பாண்டியருக்கும் அடுத்து நீங்கள் கூறிய பெயரில் பாண்டிய இளவல் ஒருவர் இருப்பதாகக் கேட்டிருக்கிறேன், அது..." யுவானின் சொற்களும் ஆச்சரியத்தில் மிதந்தே வந்தன.

ஆமென்பதற்கடையாளமாகத் தலையசைத்த ஆதித்யன், "யுவான் உன்னையும் இளவரசியாரையும் அழைத்து வரும்படி பாண்டிய மன்னர் உத்தரவு" என்றும் அறவித்தான்.

யுவானின் முகத்தில் லேசாகக் குழப்பம் படர்ந்தது. "இளவரசே, கொங்கு நாட்டு இளவரசியை அவர் தந்தையாரிடம் அழைத்துச் செல்லும்படி சூளாமணி விஹாரத் தலைவரது உத்தரவு..." என்று இழுத்தான் யுவான். அவன் பார்வை இளவரசியை ஏறிட்டு அங்கும் குழப்பம் படர்ந்திருப்பதைக் கவனித்தது.

பதிலுக்குத் தனது கச்சையிலிருந்து ஓலையொன்றை எடுத்து நீட்டினான் ஆதித்யன்.



நாம் எங்கேயோ ஒரு பீச்சுக்குப் போகிறோம்; அல்லது ஸினிமாவுக்குப் போகிறோம். கண்டதை நினைத்துக் கொண்டு அரட்டை அடித்துக் கொண்டுதான் போகிறோம். ஆனால் போகிற வழியில் ஏதாவது ஒரு ஸத்ஸங்கத்திலிருந்து ''ஹர ஹர மஹாதேவா'', ''ஹரேராம ஹரேராம ராமராம ஹரேஹரே'' என்கிற மாதிரி ஒரு கோஷம் வந்தால், சட்டென்று நம்முடைய கன்னாபின்னா நினைப்புப் போய், பகவந்நாமா க்ஷணகாலம் மனஸுக்குள் போய் நம்மைக் கொஞ்சம் உருக்கி விடுகிறது. நாமாவுக்கு அப்படி ஒரு சக்தி இருக்கிறது. ஆனதால் வாழ்க்கைப் போராட்டத்தின் முடிவிலே ஒரு ஜீவாத்மா உயிருக்காகப் போராடிக் கொண்டு மனஸ் நாலா திசையிலும் அலைபாய்கிறபோது, அல்லது ஸ்மரணை தப்பிக் கொண்டிருக்கிறபோது பக்கத்திலே இருக்கிறவர்கள் பகவந்நாமாவை கோஷித்துக் கொண்டிருந்தால், அது அந்த ஜீவாத்மாவை அதன் மூலமான பரமாத்மாவிடம் இழுப்பதற்கு ரொம்பவும் சக்திகரமான (effective) வழியாக இருக்கும். ஒருத்தன் எத்தனை துன்மார்க்கத்தில் போனவனாயிருந்தாலும், அந்தக் கடைசி நாழியில் இந்த ஸம்ஸாரத்திலிருந்து தப்புவதற்கு பகவானைப் பிடித்துக் கொள்ளத் தவிக்கத்தான் செய்வான். அவனுக்குத் தானாக அந்தத் தாபம் வராவிட்டால் கூட நாம் உண்டாக்கித் தந்து விட்டால் பிடித்துக் கொண்டு விடுவான்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

ஓலையின் வரிகள் ஏறக்குறைய கிறுக்கல்களாகவே இருந்தன. எனினும் அந்த எழுத்துக்கள் சூளாமணி விஹாரத்தலைவருடையவைதான் என்பதும் மிகுந்த அவசரத்தில் அதை எழுதியிருக்கிறார் என்பதும் புரிந்தது. யுவானுக்கும் இளவரசிக்கும் விஹாரத்திற்கு முதலில் வந்த ஓலை போலியென்றும் தற்போது கொங்கு நாட்டிற்குச் செல்வது உசிதமல்ல என்றும் பாண்டிய இளவலுடன் செல்லுமாறும் பணித்திருந்தார் சூளாமணி விஹாரத் தலைவர்.

வழியில் அபாயங்கள் குறுக்கிட்ட போதிலும், யுவானின் உதவியால் எப்படியும் தந்தையைக் காணலாம் என்று எண்ணியிருந்த இளவரசியின் உள்ளம் ஏக்கத்தின் வசப்பட்டு விட்டதை அவள் மலர் விழிகள் உணர்த்தின. அவள் மனத்திலோடிய எண்ணங்களை பாண்டிய இளவல் உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். அவன் முறுவல் இன்னும் சற்று மலர்ந்தது. "இளவரசி, தந்தையைச் சென்று காண இயலவில்லையே என்று வருந்த வேண்டாம். தற்போது கொங்கு நாட்டில் நிலைமை சரியில்லை. அங்கு நிலைமையைச் சீர் செய்யவும், தங்கள் தந்தையை போசளர் பிடியிலிருந்து விடுவிக்கவும் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. விரைவில் நானே தங்களைத் தந்தையாரிடம் அழைத்துச் செல்கிறேன்" என்றான் ஆதித்யன் பரிவு தொனித்த குரலில்.

யுவானின் குரல் குறுக்கே புகுந்தது. "இளவரசே, சூளாமணி விஹாரத் தலைவரின் உத்தரவுப்படி இளவரசியாரைத் தாங்கள் அழைத்துச் செல்லுங்கள். நான் தமிழகத்திற்கு வந்த பணி...."

கரத்தை உயர்த்தி யுவானைத் தடுத்த ஆதித்யன், "யுவான், நீ தமிழகம் வந்த காரணத்தை நான் அறிவேன். உன் தந்தை யாங்சின்னைப் பற்றி முழு விவரம் அறியாமல் நீ அவரைத் தேடிச் செல்வது அபாயம்" என்றான் ஆதித்யன்.

"என் தந்தையைப் பற்றிய விவரம் உங்களுக்குத் தெரியுமா?" யுவானின் கேள்வி வேகத்துடன் வந்தது.

பதிலுக்கு மெள்ள நகைத்த ஆதித்யன், கச்சையிலிருந்து எடுத்து நீட்டிய பொருளைக் கண்ட யுவானின் தலை சுழன்றது.

அவன் கழுத்திலிருந்ததைப் போலவே அச்சாக அதே பதக்கம் இணைக்கப்பட்ட சங்கிலி யுவானின் முகத்துக்கெதிரில் ஆடியது. பதக்கத்திலிருந்த கடல் நாகத்தின் பச்சை விழிகள் அவனைப் பார்த்து விழித்தன. பார்த்தவுடன் யாங்சின் அணிந்திருந்த பதக்கம் அது என்பதும் புரிந்தது அவனுக்கு.

(தொடரும்)

கடிதம்

ரிஷபன்



மணியார்டர் தாளில் கையெழுத்திட முடியாமல் விரல்கள் நடுங்கின. 'பார்வதி அம்மாள்' என்று பெரிது பெரிதாய் எழுத்துக்கள்.

"என்னம்மா... ஃபாரம் முழுக்கவே உங்க கையெழுத்துப் போடறீங்க" என்று கிண்டலடித்தார் தபால்காரர்.

நோட்டுகளை எண்ணிக் கொடுத்தார்.

"வேற கடுதாசி எதுவும் இல்லியா?"

"நாளைக்கு வருதா பார்க்கலாம்..." என்றார் 'இன்றைக்கு இல்லை' என்ற குறிப்புடன்.

பக்கத்து வீட்டு பொன்னி எட்டிப் பார்த்தாள்.

"என்ன பாட்டி... பேரன் அனுப்பிட்டானா..."

பார்வதியின் அருகில் வந்தாள்.

"எப்ப வரானாம்..."

"வருவான். அவனுக்கு எப்ப வசதியோ..."

கிழவி உள்ளே போய்விட பொன்னி நொடித்துக் கொண்டாள்.

'பாரேன். கிழத்துக்கு எவ்வளவு திமிரு. பேரன் மாசா மாசம் கனையா பணம் அனுப்பி வச்சிடறான். கிழவிக்கு அப்புறமும் பேராசை. இந்த மாதிரி மனுசங்களுக்குத்தான் பணம் தேடி வருது...'

பின்னாலேயே உள்ளே போனாள்.

"ஆத்தா.. பாலு வேணும்.. அதுக்காவத்தான் வந்தேன்."

"எவ்வளவு?" பால் செம்புடன் கிழவி வந்தாள்.

"இருநூறு. புள்ளைக்குக் காய்ச்சல். சோறு வேணாம்னு..."

கிழவி பாலை அளந்து ஊற்றினாள். பொன்னி கொடுத்த காசை வாங்கி புடைவைத் தலைப்பில் முடிந்து கொண்டாள்.

'பாரேன். புள்ளைக்குக் காய்ச்சல்னு சொல்றேன். அப்ப கூட காசுலயே கண்ணு. ஒரு பசு மாட்டைக் கட்டி வச்சுக்கிட்டு.. வரட்டியைக் கூட காசு பண்ணிருது கிழவி...'

பொன்னி முனகிக் கொண்டே வெளியே போனாள்.

உண்மையிலேயே கிழவி மீது பக்கத்து எதிர் வீட்டுக்காரர்களுக்கு எரிச்சல்தான். கிழவி ஒரு பைசாக் கூட விடுவதில்லை.

'பேரன் அனுப்புற காசை என்னதான் செய்யிறாளோ...'

கிழவிக்கு வயசு எழுபதைத் தாண்டி விட்டது. சுகுமார், கிழவியின் மகள் வயிற்றுப் பேரன். கிழவிக்கு ஒரே மகள். அவள் துரதிர்ஷ்டம் மகள் போன

வருடமே தவறிப் போனாள்.

சுகுமார் இந்தப் பக்கம் வருவதேயில்லை. கிழவியும் கிராமத்தை விட்டு நகருவதாயில்லை.

திடீரென கிழவி உடம்பு சரியில்லை என்று படுத்து விட்டாள். தபால்காரரை விட்டு சுகுமார் விலாசத்திற்குத் தந்தி அடிக்கச் சொன்னாள்.

'ஒரு வாரத்தில் கிளம்பி வருவதாக'க் கடிதம் மட்டும் வந்தது அவனிடமிருந்து.

வந்த கார்டை அத்தனை உடம்பு நோவிலும் தூக்கிப் பிடித்து உற்றுப் பார்த்தாள்.

தபால்காரர் கூடக் கிண்டலடித்து விட்டுத்தான் போனார். 'பேரன் கடுதாசியைப் பார்த்துட்டீல்ல. இனி பொழைச்சுக்குவே.'

ஆனால் கிழவிக்குப் போறாத காலந்தான்.

திடீரென மிகவும் முடியாமல் போய் தூக்கத்திலேயே மூச்சு பிரிந்து விட்டது.

பேரன் வந்து சேர்ந்தான்.

காரியங்கள் முடிந்தபின் தபால்காரர் அவன் எதிரில் வந்தார்.

"இதைக் கிழவி உன் கையில கொடுக்கச் சொல்லிச்சு" என்றார்.

தபால் அலுவலக சேமிப்புக் கணக்குப் புத்தகம்.

"நீ அனுப்பின பணம் எல்லாம் இதுலதான் போட்டு வச்சுது."

சுகுமார் திகைப்புடன் பார்த்தான்.

"மணியார்டர் ஃபாரத்துல ஒத்தை வரி இல்லியேன்னு ரொம்பவும் ஏங்கிப் போச்சு. அப்புறம் உன் கார்டைப் பார்த்த பிறகுதான் அதுக்கு மனசு சமாதானமாச்சு. அந்தக் கார்டையே வச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கும்."

சுகுமார் தலைகுனிந்தான்.

"கடைசிவரை தன் உழைப்பிலேயே வாழ்ந்துட்டுப் போயிட்டா. அதுக்குத் தேவைப்பட்டதெல்லாம். பாசம்தான். பாவம்... கடைசி வரை கொடுப்பினை இல்லே."

தபால்காரர் நகர்ந்து போனார்.

சுகுமார், மாடத்தில் மடித்து பத்திரமாய் வைக்கப்பட்டிருந்த கார்டையே வெறித்தான் கண்ணீருடன்.



இளம் பிள்ளை வாதம்– சிறு வயதிலேயே முடமாக்கும் கொடிய நோய். 146 நாடுகளில் இந்த நோயை அடியோடு ஒழித்து விட்டார்கள்– எப்படி....? Pulse Polio Immunisation என்கிற திட்டம் மூலம். ஒரு பெரிய இயக்கம் போல் சமூக நல அமைப்புகள் ஒன்று சேர்ந்து, ஐந்து வயதுக்குட்பட்ட அத்தனை குழந்தைகளுக்கும் ஒரு குறிப்பிட்ட தேதியில் போலியோ தடுப்பு மருந்து கொடுக்கச் செய்தார்கள். ஆறு வாரங்கள் கழித்து அதே போல் மீண்டும் ஒரு 'டோஸ்' மருந்து கொடுக்கப்பட்டது. 146 நாடுகளில் 'போலியோ' என்கிற இளம்பிள்ளை வாதம் மறைந்தது.

இதே திட்டத்தை இந்தியாவில் செயல்படுத்த முனைந்துள்ளது ரோடரி இன்டர்நேஷனல் அமைப்பு. டிசம்பர் ஒன்பதாம் தேதி அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ மருந்து கொடுக்கப்பட்டது. இரண்டாவது கட்டமாக ஜனவரி இருபது அன்று இன்னொரு டோஸ் தர இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் 39,000 பொது இடங்களில் மருந்து விநியோகம் நடக்கிறது. மறக்காமல் உங்கள் வீட்டு மழலைகளை அழைத்துச் செல்லுங்கள்.



"மத்திய அமைச்சர் சுக்ராம் செகரட்டரியை சஸ்பண்ட் பண்ணிட்டாராமே! ஏன்?"

"அந்த மனுஷன் அமைச்சர்கிட்ட போய், ரொம்ப வெய்யிலா இருக்கே, 'டெண்டர் கோகனட்' வேணுமான்னு கேட்டாராம்!"

–து. பூவராகன்

• உதிரவேங்கை



போன்றவற்றைக் கட்டுப்படுத்தக்கூடிய வேறு பல மூலிகைகள் குறித்தும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முறையான ஆராய்ச்சி மூலம் மூலிகைகளை வகைப்படுத்தி, மருத்துவ குணங்களைப் பட்டியலிடும் மாபெரும் பணி நடந்து வருகிறது. அயல் நாட்டவர்கள் இந்த விஷயத்தில் நிறைய ஆர்வம் காட்டி வருவதால், அவர்கள் சில மூலிகைகளுக்கு patent பதிவு செய்துகொள்ளும் அபாயம் இருக்கிறது. எனவே நம்மவர் முந்திக் கொண்டு இதைச் செய்வது அவசியமாகிறது.

முந்திக் கொண்டு மூலிகை ஆராய்ச்சி!



• வசந்தி தேவி

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமான ஸ்ரீபரமகல்யாணி சுற்றுப்புறச் சூழல் அறிவியல் மையம்,துணைவேந்தர் வசந்தி தேவியின் நேரடி கவனத்தின் கீழ் உருவாகி வளர்ந்து வருகிறது. அமால்கமேஷன்ஸ் நிறுவனம் நூறு ஏக்கர் நிலத்தையும் ஒரு கட்டடத்தையும் இம்மையத்துக்கு வழங்கியுள்ளது.

மூலிகைகள் ஆராய்ச்சியில் இம்மையம் காட்டும் ஈடுபாடு முக்கியமானது. நமது மூதாதையர்கள் பயன்படுத்திய மூலிகைகள் பல அழிந்து போகும் அபாயம் இன்று நிலவுகிறது.

உதாரணமாக, உதிரவேங்கை என்றொரு மரம். இதன் இலைகளைப் பறித்து பழைய சாதத்தில் போட்டு வைத்தால் சாதம் சிவப்பாக மாறுகிறது. இவ்வுணவை உட்கொண்டால் உதிரப் போக்கு கட்டுப்படும் என்று நம்புகிறார்கள்.

அழியக்கூடிய நிலையில் உள்ள உதிர வேங்கை தவிர, நீரிழிவு, ரத்தசோகை


மண்புழுக்கள் வளர்ப்பதையும் கவனமாகச் செய்து வருகிறது. மண்புழுக்களின் உதவியுடன் இயற்கை உரம் தயாரிக்க முடியும்.

ரசாயன உரங்களைக் காட்டிலும் இயற்கை உரம் மேலானது என்ற உணர்வு பெருகிவரும் இக்காலத்தில் மண்புழு வளர்ப்பு ஒரு முக்கிய பணி.

மண் புழுக்களை கழிவுகளில் (குறிப்பாக ஹோட்டல்களிலிருந்து வரும் உணவுக் கழிவுகள்) செலுத்தி, இயற்கை உரமாக மாற்றுவது தவிர, மேலப்பாளையத்தில் பீடி சுற்றும் குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய புள்ளி விவரச் சேகரிப்பு, நெல்லை மாவட்டத்துக்கே உரிய பாய் பின்னுதல், மண் பொம்மைகள் செய்தல் போன்ற கலைகளை முறைப்படுத்தும் திட்டம் என்று மக்கள் பிரச்னைகளிலும் தன்னை ஈடுபடுத்தி வருகிறது இந்த மையம்.

— பாரதி

பாரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.



Open this jar for a feast.
Short Bread Stars ⌒ Carrot-Beetroot Sweet ⌒ Rasmalai ⌒ Besan Laddu ⌒ Banana Payasam ⌒ Pineapple Custard Pudding ⌒ Butterscotch Pudding ⌒ Raisin Loaf ⌒ Coconut Burfi ⌒ Kalakand ⌒ Short Bread Stars ⌒ Carrot-Beetroot Sweet ⌒ Rasmalai ⌒ Besan Laddu ⌒ Banana Payasam ⌒ Pineapple Custard Pudding ⌒ Butterscotch Pudding ⌒ Raisin Loaf ⌒ Coconut Burfi ⌒ Kalakand ⌒ Short Bread Stars ⌒ Carrot-Beetroot Sweet ⌒ Rasmalai ⌒ Besan Laddu ⌒ Banana Payasam ⌒ Pineapple Custard Pudding ⌒ Butterscotch Pudding ⌒ Raisin Loaf ⌒ Coconut Burfi ⌒ Kalakand ⌒ Short Bread Stars ⌒ Carrot-
Beetroot Sweet ⌒ Banana Payasam
⌒ Pineapple Custard Pudding ⌒ Butterscotch Pudding
MTR
BADAM
Feast
READY-TO-USE BADAM MIX
NEW! IN ELEGANT PET JAR
So many goodies from one jar!
The goodness of pure Badam, in a spread of easy-to-make sweets, pastries, desserts, payasams and drinks. Just a few of these mouthwatering dishes are featured here. More recipes are available FREE, with MTR Badam Feast.
MTR
Also available in 200g and 500g refill packs.
The promise of purity

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka